உ

# தமிழ்ப் பொழில்.


தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் ௬ | பிரமோதூத—ஆனி, ஆடி, ஆவணி. | மலர் ௩, ௪, ௫ |


## திருத்தக்கதேவரும் கம்பநாடரும்.


திருவாளர். அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்,

தமிழ்ப்புலவர், தோரமங்கலம்.


நமது அருமைத் தமிழ் மங்கைக்குப் பேரணிகலன்களாகி ஒளி வீசும் நூற்கள் பலவுளவேனும், ஐம்பெருங் காப்பியங்களுள் முதலாவதாகநிற்கும் சிந்தாமணியும், இதிகாசங்களுட் சிறப்புடைய தெனப் போற்றப்பெறும் இராமாயணமும் கதைத்தொடர்பு கூறுவனவாய், காப்பிய இலக்கணங்கள் முற்றும் நிரம்பி, அழகு மிகச் சுவைமலிந்து, கற்போர் அவ்வப்பொருட்களை நேரிற் கண்டாற்போன்று மகிழும்படி, கூறுவனவற்றைத் திறம்படத் துலக்கிச் செல்லும் பெருமைவாய்ந்தனவாம் என்பது அறிஞர் பலரும் உடன்பட்டதே. இவ்விரு நூற்களின் ஆசிரியர்களாகிய திருத்தக்க தேவர், கம்பர் என்னும் இரு புலவர்களின் கூர்த்த மதிநுட்பம், சொல்வளம், ஆராய்ச்சித்திட்பம், ஆழ்ந்த கருத்துக்களைச் சில சொற்களில் அடக்கிக் கூறும் வன்மை, ஒரே செய்தியைக் கூறுங்கால் அவர்கள் தம்முள் ஒற்றுமை எய்தல், அவ்விரு கூற்றிலும் சிறந்த பகுதிகள் முதலியவற்றை எடுத்துக் காட்டி ஆராய்ச்சி செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

நெடுநாட்கள் பல நூற்களிற் பயின்று நினைவு கூர்ந்துணர்ந்த பேரறிஞர்கட்குரிய இவ்வரிய பணியில், அறிவானும் கல்வியானும் அறச்சிறுமைகூர்ந்த யான் தலையிட்டுக்கொண்டது எனக்கே நகை தருவதொன்றாயினும், இவ்விரு பெரும் புலவரையும் நினைக்குந் தோறும் என் உள்ளத்தே தோன்றி மிக்க காதல் விளைக்கும் அந்நூற் சுவைகளை யான் அறிந்த அளவிற்கேனும் பிறரும் சுவைக்கத் தரும் கடப்பாடு தூண்டலின் மேற்கொள்ளநேர்ந்தேன். என் குற்றங்காண்போர், முற்பட்டுத் திருந்திய வகையில் இவ்வாராய்ச்சியைத் தாம் கைக்கொண்டு புலவர்கட்கு விருந்தமைப்பார்களென்றும், அவ்வாறு அவர்களைத் தூண்டுதற்குக் கருவியாக இஃதமையுமாயினும் பயனுடைத்தாகுமென்றுங் கருதியே இறங்கேந்துகின்றேன்.

---

திருத்தக்க தேவருக்குக் கம்பர் பிற்பட்டவரென்று ஆராய்ச்சியாளர் குறிக்கின்றார்கள். கி. பி. 9ஆம் நூற்றாண்டின் பின் தேவர் தோன்றியிருக்கவேண்டுமென்பாரும் உளர். "எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழில்" கம்பர் இராமாயணம் பாடினாரென்பது வெள்ளிடைமலையாய் விளங்கலின், இற்றைக்கு 1046 ஆண்டுகட்குமுன் கம்பர் இருந்ததாக ஏற்படுகிறது. கி. பி. 900-க்குப்பின் திருத்தக்க தேவர் இருந்தனரெனில் இற்றைக்கு 1030 ஆண்டுகட்குப்பின்பே சிந்தாமணி இயற்றப்பட்டதாக முடியும். அங்ஙனமாயின், கம்பரே தேவருக்குச் சற்று முற்பட்டவராகலாமென்றும், இவர்கட்கு இடைப்பட்டகாலம் மிகச் சிறியதாய் இருத்தலால் ஓர் காலத்தினராயிருத்தலுங் கூடுமென்றும் துணியப்பட்டு முன்கூற்று வழுவுறும். சிந்தாமணியில் வரும் சில சொற்களும், சொற்றொடர்களும், இசை, கூத்து நூற்பகுதிகளை ஆளும் முறையும் இராமாயணத்தில் மிகப் பயிலாமையானும், செய்யுள் அமைப்புமுறையும் வேறுபடுதலானும் இக்காலத்து வழங்காதனவாகிய அவற்றை நோக்கச் சிந்தாமணியே முற்பட்டதெனக் கூறல் உண்மையாய் வலியுறும்.

இவ்விரு கவிஞரும் சமய வேறுபாடுடையவரேனும் பிற சமயங்களைப் பழித்துரையாப் பெருந்தகையாளர்களாவர்.

வரலாற்றில் அமயம் நேரும்போது தமது சமய இலக்கணங்களையும், தமது ஆழ்ந்த பற்றுடைமையையும் விளங்கவுரைப்பதன்றி, மற்றையிடங்களில் அவர்கள் கொள்கை இன்னதென்றறியா வண்ணம் பொது நோக்காகச் செல்லும் தன்மை பெரிதும் போற்றற்பாலது. இதற்கு மேற்கோளாக ஒன்று காட்டுவாம்.

சிந்தாமணியில், சீவகனுகிய மகவு கந்துக்கடன், சுநந்தை என்பவர்களால் நன்கு வளர்க்கப்பட்டு வளர்வதைக்குறித்து "...போகம்மீன்ற புண்ணியனெய்த கணையேபோல்...வளர்கின்ருன்" என்று கூறியவாற்ருல் சிவபெருமானைச் சைவர்போல மதித்தும், வைணவர்போலக் கண்ணன் ஆயர்பாடியில் நந்தகோபனுலும் அசோதையாலும் வளர்ந்த வரலாற்றை உடன்பட்டும் தேவர் செல்கின்ருர். இஃதொப்பவே கம்பரும், வைணவ சமயநூலாகிய இராமாயணத்தில், பரசிராமன் வருகையைக் குறிக்குமிடத்து, "ஊழிக் கடை முடிவிற்றனி யுமைகேள்வனை யொப்ப" என்று கூறி, யாவும் அழியும் பேரூழியில் அழிப்பானுகிய அவ்வொருவன் தன் பங்குறை மங்கையும் தானுமே மிகுந்திருப்பதைச் சைவக் கொள்கைப்படி ஏற்கின்ருர்; 'தனி உமைகேள்வன்' எனச் சுட்டுதலான்.

மற்றுங் கூர்ந்துநோக்குவேமாயின், தேவரைக் காட்டினும் கம்பர் மிக்கு, எல்லாச் சமயத்தோரும் தத்தங் கடவுளரையே மதித்துரைத்ததெனக்கொண்டு மகிழவும், யாவர்க்கும் பொதுப்பட வுரைக்கப்பட்டதென அறிஞர் கருதவும் பொருள் மயக்கம் தருமாறு சூழ்ச்சியாக உரைத்துச் செல்வதைக் காண்போம்.

அநுமனைச் சீதையை நாடிவரும்படிச் செலுத்தி வழி கூறுவதாய் உரைக்குமிடத்தில்,

"ஆனதிக வுலகளந்த வரியதிகனென்றுரைக்கு மறிவிலோர்க்குப்
பாகதிசென் றடைவரிய பரிசேபோல்........." என்பதற்குச்

சைவர்கள், ஆரன் அதிகன் = எல்லாக் கடவுளரினும் சிவனே மேலானவர். (அங்ஙனமிருப்பவும்) உலகு அளந்த அரி அதிகன் என்றுரைக்கும் அறிவில்லோர் = உலகத்தை அளந்த அரியை

உயர்ந்தோனென்கிற அறிவிலிகள் எனக்கூறி, அரன் என்னும் சொற்கு உறுப்புப்பொருள், எவற்றையும் அழித்துத்தான் என்றும் அழிவிலாதவன் என்பதாகலின், ஏனைக்கடவுளரினும் சிவபிரான் உயர்வுடையராதற்குக் காரணமுங் காட்டியவாறு எனக்கொள்ளவும்; வைணவர்களும், அரனை அடைமொழி கொடுத்தோதாமல் அரியை, 'உலகு அளந்த' என்னும் அடை தந்துவிதந்தோதலின், "அரியோடு ஒப்பானாக அரனையும் அதிகனென்னும் அறிவற்றோர்" எனக்கொண்டு மகிழவும்; மற்றைச் சமயக் கணக்கர்களும், தத்தங்கடவுளரை உயர்ந்தோரென்னாமல் அரன் அரிகளை அதிகர் என்னும் அறிவில்லாதார் என்றுகூறி வாதிடவும்; பொது நோக்குடையோரும், கடவுட்டன்மை, சிற்றறிவுடைய மக்களால் அளந்தறிய ஒண்ணாமை தோராமல், ஒரே கடவுள், பலரும் கருதும் தரத்துக்கேற்ப உருக்கொள்வதால் பிற கடவுளரை இழித்துரைத்தல் சாலாதாகவும், அரனே உயர்ந்தோன் அரியே உயர்ந்தோன் எனப் பிணங்கும் அறிவிலிகள்" என்று கொண்டு அமையவும் இங்ஙனம் கொள்வோர் கொள்வகைக்கெல்லாம் இணங்கி உடன்படப் பொருள்தருமாறு அமைத்த திறமையை நோக்குக. நாட்டுச் சிறப்புக் கூறவரும் இருபுலவர்களுள், தேவர்,

கண்ணெனக் குவளையுங் கட்ட லோம்பினர்
வண்ணவாண் முகமென மரையி னுட்புகார்
பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்
தண்வய லுழவர்தந் தன்மை யின்னதே. (நாம. 22)

"உழவர்கள் (தம் காதல் மாதர்களின்) கண்போன்றதெனக் குவளையையும், முக மொத்ததென்று தாமரையையும் களைபறிக்காமல்விட்டுக் காதல்மிகப் பாட்டைப் பாடிக்கொண்டிருப்பாராயினர்" எனமொழிந்ததனையே பின்னும் ஏற்பன கூட்டித் திருத்தியமைப்பார்போன்று கம்பர்,

பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகான் முகம்வா யொக்குங் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலா துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்.
பால. நாட்டு 10)

"உழவர்கள் தம் உழத்தியருடைய கண்களை நிகர்த்த (குவளை) களையும், கை, கால், முகங்களைத் தனித்தனி ஒத்த (தாமரை) களையும், வாயைப்போன்ற (செவ்வாம்பல்) களையும் களையத் துணியாராய், அம்மாதர்களின் உறுப்புக்களை நினைவு கூர்வித்துத் தமக்கு உவகை விளைத்தலின் அச்செருக்கால் அங்குமிங்கும் உலாவித் திரிவாராயினர்; சிறியோர் பெண்கள்பாற் காதலி னின்றும் நீங்கப்பெறுரன்றே." எனவுரைக்கின்றார்.

இவற்றை ஆராய்வோம்.

தேவர், உழவர்கள் விரும்பிய மாதர்களின் கண் முதலியன போல்வனவென விளக்காமல் பொதுவாக "கண்ணெனக் குவளை யும்......என்று குறிக்க;

கம்பர், விளக்கமாக "கடைசியர்...கண்கை...எனவிரித்தனர்.

தேவர், கண்களையும் முகத்தையுங் கூறி நிறுத்த,

கம்பர், அவற்றோடு, கை, கால், வாய் இவற்றையுஞ்சேர்க் கின்றார்.

தேவர்—கண்—குவளை, முகம்—தாமரை, என உவமான உவமேயங்களை விளக்கினாக,

கம்பர்—"கண் முதலியவற்றை ஒக்குங்களை" யெனப்பொதுப் படப்புகன்று, குவளை முதலிய உவமப்பொருட்களைக் குறிப்பாற் பெறுவிக்கின்றார்; அவ்வுறுப்போடொக்கும் எனை மலர்களுள வேனுங் கொள்க என்று.

தேவர்—உழவர்கள் அங்ஙனம் கண் முதலியனபோலு மெனக் கருதுதற்குக் காரணங் கூறாாக,

கம்பர்—"உண் கள்வார் கடைவாய் மள்ளர்" என்று கூறி, அப்போது அவர்களுண்ட கள் கடைவாய் வழியே வழிவதை நேரிற்காட்டுவார்போற் காட்டி, அக்கள்மயக்கே காரணமென உணர்த்துகின்றார்.

தேவர்—மள்ளர் களையெடாது பண் பாடுகின்றார்கள் என,

கம்பர்—ஆண்கள் பாடல் அத்துணைக் குரலின்பம் பயவாது, மாதர் குரலோசை இயற்கையில் மிக இனிமையுடையது எனக் கொண்டு "பண்கள் வாய்மிழற்று மின்சொற் கடைசியர்" என

உழத்திகளைப் பாடுவோராக்கி உழவர்கள் அப்பாடலைக்கேட்டும் களை பறிப்பதற்கு மனம் பொருந்தாழுலும் அங்குமிங்கும் கள் மதர்ப்பால் உலாவித் திரிகின்றனர் என்கிறார்.

இவ்வாறு தேவர் கூறியதினும் திறம்பெறக் கூறியும் அமையாராகி, வேற்றுப் பொருள்வைப்பு என்னும் அணிபற்றி, சிறியோர் பெண்கள் பால்வைத்த நேயம் பிழைப்பரோ என உலகியல்பையும் ஒருங்கு காட்டுகின்றார் கம்பர்.

இனி, நகரத்தின் அகழியைப் புனைந்துகூற இக்கவிகள் புகுகின்றார்கள்.

தேவர்—தங்கொளி நித்திலத் தாமஞ் சூடிய
வெங்களி யிளமுலை வேற்கண் மாதரார்
பைங்கிளி முன்கைமேற் கொண்டு பார்ப்பெனுங்
கொங்கலர் தாமரைக் கிடங்கு கூறுவாம். (நாம-65.)

என்று "அகழியின் சிறப்பை மொழியப் புகுவோம்" என்பதற்கு ஒரு செய்யுளைச் செலவிடுகின்றார்.

கம்பரோ, இவ்வாறு முற்படவுரைத்து ஒரு கவியை வீணாக்க விரும்பாது,

அன்னமா மதிலுக் காழிமால் வரையை யலைகடல் சூழ்ந்தன வகழி
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப் புன்கவி யெனத்தெளி [வின்றிக்
கன்னிய ரல்குற் றடமென யார்க்கும் படிவருங் காப்பின தாகி
நன்னெறி விலக்கும் பொறியென வெறியுங் காத்தது நவிலலுற் றதுநாம். (பால—14.)

என அகழியின் சிறப்புக்களை முன்னுரைத்து இறுதியில் இது வன்றே யாம் கூறப்புக்கது என்றேர் சொல்லால் தெரிவிக்கின்றார். பிற கவிகளைப்போல நாட்டுச் சிறப்பை நவின்றோம் நகரச் சிறப்புப் பகர்வோம் என்பதற்கு வெவ்வேறு கவிகளை விரிக்காமல் ஒரு செய்யுளின் ஈற்றடியில் "நாடு கூறினும் நகரங் கூறுவாம்" என்று சுருங்க உரைத்துக் கற்போரை மகிழ்விப்பவர் அன்றோ நமது கவிச்சக்கரவர்த்தியார்.

தேவர்—அகழியை,

பட்டவர்த் தப்பலிற் பாவை யேந்தல்கு
லட்டொளி யாத்தவாய்க் கணிகை யல்லது
மட்டுடை மண்மகண் மலர்ந்த போதினுற்
கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே (நாம. 69.)

என்று சிறப்பித்து,

அகழி, தன்கட்பட்டோரைக் கரையேறவிடாது கொல்வதால் பரத்தையரை நிகர்க்கும் என்பார்.

கம்பர்—பரத்தையர் வயப்பட்டார் கொல்லப்படுதல் பெருவழக்கன்மையின், அதனினும் பொது மகளிர் வஞ்சப்பகட்டு மனப்பாங்கு அளந்தறிதற் கரிதெனல் பொருத்தமாவது நோக்கி, அகழியின் ஆழம் அம்மகளிர் மனம்போற் கிழ்ப்போவதாம் என்பர்.

தேவர்—அகழியிற்பூத்த பன்மலர்களின் மணம் மிகுவது கொண்டு கடிமணஞ் செய்த மங்கையை ஒக்கும் என்ன,

கம்பர்—மணம்புரியும் மகளிரேயன்றி மணம்புரியாக் கன்னியரும், மணம் புரிந்தபின் மங்கையரும் வாசனைச்சுண்ணம்பூசுதற்குரிய பொதுமை நோக்கி விலக்கி, கவிஞர்களின் கவித்தன்மை வேறுபாடறிதற்கோர் காட்டுவேண்டி, புன்கவியெனத் தெளிவற்ற நீரையுடையது என்பர்.

தேவர்—காவலை யுடைமையிற் கன்னிப்பெண் போல்வதென்றுரைக்க,

கம்பர்—கன்னி எனக் கூறுவதோ டமையாது, "கன்னியரல் குற்றடமெனப் யார்க்கும் படிவருங்காப்பினது" எனத்தேவரினும் ஒரு படி மிக்குச் சென்று நமக்கு நகைப் பூட்டுகின்றார். அஃதோ அகழி. அருகில் எவரும் சென்று குளித்தற்குக் காவல்விடாது, ஆங்கே அல்குற்றடமும் படிவதற்கொண்ணாத காப்புடைத்து, என்றுரைத்த நயம் கருதத்தக்கது.

தேவர்—அகழி, அடைந்தோரைக்கோறல், மணமிக்கிருத்தல் காவலுடைமைகளால் முறையே, பரத்தையர், புதுமணமகளிர், மணமிலாக் கன்னியர்களைப்போல்வதென மூன்றுவமமும் காமப் பொருள்பட மொழிந்திருப்ப,

கம்பர்—பொதுமகளிர் — கன்னியர் — என இருவரையும் எற்றுக்கொண்டு, கவித்தன்மையின் இழிவேற்றம் காட்டற்கும், இறைவன்பாலன்புறக் கொண்டுய்யவொட்டாது தடுக்கும் பொறிகளின் வன்மையை யுணர்த்தற்கும், அகழியின் தெளிவின்மை, முதலிகள் மிக்கிருத்தல்களை முறையே கூறிச்செல்கின்றார்.

(தொடரும்.)

---

# உடல் இயலும் உடல் நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
உரத்தநாடு.

---

(முற்றொடர்ச்சி 80 பக்கம் பார்க்க.)

இவ்வாறு பரப்பப்படும் நோய்களாவன :—வயிற்றுநோவு, வயிற்றுப்போக்கு, கழிச்சல், உடலுருக்கி, நச்சுக் காய்ச்சல், குடர்க்காய்ச்சல் (Entaric Fever) பெருநோய் (குட்டம் Leprosy) குழவிகளுக்கு வரும் திமிர்நோய் (Infantile Paralysis), கண்வலி, தோல்நோய் (Yaws) முதலியனவாம்! இந்நோய்கள் பரவாமல் இருப்பதற்காக ஈக்களைப் பல்காமற் றடுத்தலும், கொல்லலும் மொய்க்கவிடாதிருத்தலுமே தக்க வழிகளாம். அவ்வாறு பல்காமற்றடுக்கும் வகையாவன :— (1) வீட்டையும் முக்கியமாக அடுப்பங்கரையையும் தூய்மையாக வைத்திரு (2) எல்லா உணவுப் பொருள்களையும் (முதன்மையாக அக்காரம், பால், தின்பண்டங்களை) மூடி வை, இவைகளை ஓரிடத்துஞ் சிந்தாதே. (3) எல்லா வீண் பொருள்களையும் கழிபொருள்களையும் மூடு அல்லது மண்ணிற்புதை; எருக்குழியை

மணலால் மூடு; மாட்டுக்கொட்டில், குதிரைலாயங்களைத் தூய்மையாக வைத்திரு; சாணியை அப்போதைக்கப்போது அள்ளி மூடு. (4) எருக்கழிவிடத்தைத் தூய்மையாக வைத்திரு. நீ எருவைக் கழித்ததும் சுண்ணும்பு, மண், மணல், சாம்பல் இவை யாதொன்றினுலாவது ஈ மொய்க்காதபடி மூடு. இவ்வாறு செய்யின் ஈக்கள் முட்டையிடுவதற்கிடமின்றிப் பல்காதொழியும். இவ்வாறும் அறவே ஒழித்தல் இயலாதாதலின் ஈ ஒட்டுத்தாள், அல்லது நச்சால் * அவைகளை அகப்பட்டவரையிற் கொல்லு. (ஈ ஒட்டுத்தாள் கடையில் கிடைக்கும்.)

கொசு:—இதிற் பலவகையுண்டு. நம் நாட்டில் இருப்பது இருவகைப்படும். ஒன்று சிறியது. அது கண்களில் மொய்ப்பது வழக்கம், கடிக்காது. அதனுல் கண்வலி என்னும் நோய் பரவுகிறது. மற்ருெருவகைக் கொசு பெரியது. அதிலும் இருவகையுண்டு. ஒருவகை நாலுகாலின்மேல் சுவற்றிற்கு ஒரு போகாக (Parallel) உட்காரும் இயல்புடையது; மற்ருெருவகை பின்னிரண்டு கால்களையும் உடலுடன் மேலே கிளப்பிக்கொண்டு இரண்டுகாலின்மேல் சுவற்றிற்குச் செங்குத்தாக உட்காரும் இயல்புடையது. இவ்விரண்டாம் வகைக் கொசுவே மலைக்காய்ச்சலை (Malaria) பரப்புகிறது. இக்கொசுவும் ஈயைப்போல் முட்டையிலிருந்து புழுவாய்ப் பிறந்து பின் பறவையாக மாறுகிறது. ஆனல் இப்புழு தண்ணீரின் உள்ளேயே இருக்கிறது. யானைக்காலும், நம் நாட்டிலில்லா மஞ்சள் வெப்பும் (Yellow Fever)

* உடலுருக்கியை உண்டாக்கும் நுண்கூடுகள் ஈயின் உடலில் பல்குவதைப்போல் வேறென்றிலும் பல்குவதில்லை.

ஈயைக் கொல்லத் தக்க நச்சாவது:— Formalin (40 % Solution) அதைப்போல் 5 பங்கு நீரிற்கரை. அதில் சுவையுண்டாக்கச் சிறிது அக்காரத்தையும், நிறமுண்டாக்கச் சிறிது பாலையுங்கலந்து தட்டைக் கலனில் ஊற்றிவை. ஈயைக் கவர்ச்சி செய்ய அந்நீர்ப்பொருள் நடுவே ஒரு அப்பத்துண்டைப் (ரொட்டி) போடு.

வேறுவகைக் கொசுக்களால் பரப்பப்படுகின்றன. இக்கொசுக்கள் யாவும் இரவிலே தான் மக்களைக் கடிக்கின்றனவாதலின் நாம் தூங்கும்போது கொசுவலையுட்டுங்குவோமாயின் இந்நோய்கள் யாவும் வரவே வாரா. நம் நாட்டில் கொசுக்கடியை நீக்கப் புகைச் சட்டியை வைத்து மூட்டம் போட்டுக்கொள்ளுகின்றனர். இது நம்மைத் தூயகாற்றைக்கொண்டு மூச்சுவிடாமற் செய்கிற படியால் பெருங்கேடு விளைக்கும். ஆதலின் இதை நீக்கவேண்டும்.

செள்ளு:—இவற்றுட் பலவகையுண்டு. நாய், பூனை, எலி முதலிய விலங்குகளின் மேலிருக்கின்றன. அவற்றுள் எலியின் மீதுள்ள ஒருவகைச் செள்ளே நச்சுக் கட்டியைப் பரப்புகின்றன. எலியைப் பிடித்துக் கொல்வதே இந்நோய் வாராமற்றடுக்கும் வழியாம்.

மூட்டைப்பூச்சி:—இவை சுவர், தூண், மரப்பொருள்களின் இடுக்குகளிலிருந்துகொண்டு மக்களின் குருதியைக் குடித்தே வாழ்கின்றன. இதற்காக இதன்வாயில் கூரியபங்கு இருப்பதால் அதனால் குத்தி, அதன் எச்சிலை அப்புண்ணுள் துப்பிப் பின் குருதியை உரிஞ்சுகிறது. இதன் எச்சிலால் சில தோல்நோய்கள் உண்டாகின்றன.*

பேன்:—இது மக்களின் தலையில் புழுக்கிறது. இதுவும் நமது குருதியைக் குடித்துவாழ்கிறது. இதனால் நச்சுக் காய்ச்சலும் (Typhoid), முறைக் காய்ச்சலும் (Relapsing Fever),

---

* இதைக் கொல்லத்தக்க ஐந்து மருந்துகள்:—(1) கொதி நீர் (Boiling Water), (2) சவர்க்காரம் (Hard Soap), (3) டர்ப்பன்டைன் எண்ணெய் (Oil of Turpentine), (4) டர்ப்பன்டைன் எண்ணெய்ச் சத்து, (Spirit of Turpentine) மண்ணெண்ணெய் இவைகளை ஒத்த பங்கு எடுத்துக்கலந்து மரக்கலன்களின் மூட்டுகளில் தேய் (5) ½ பவுண்டு சோப், 1 பைண்டு பாரபின் (Paraffin), சிறிது நீர் சேர்த்துக் குழப்பி இடுக்குகளில் விடு.

பெருநோயும் பரவுகின்றன. இது ஒருவர் தலையிலிருந்து மற்றொருவர் தலைக்குத் தூக்கத்தில் போகும் இயல்புடையது. இதை ஒழிக்க மண்ணெண்ணெய், ஆலிவ் எண்ணெய் இரண்டையும் ஒத்த அளவு எடுத்துக் கலந்து இரவில் படுக்கப்புகுமுன் தலையில் சளிக்கத் தடவிக்கொண்டு ஒரு துணியால் தலையை மூடிக் கட்டிக்கொண்டு படுத்துறங்குக. காலையில் சவர்க்காரம் வெந்நீரிட்டுக் கழுவிவிட்டு, தலையைக் காயவைத்து ஈர்கொல்லியால் ஈர்த்திவிட்டுக் காடி (Vinegar) போட்டுச் சீவவும். இவ்வாறு மூன்றுநாள் அடுத்தடுத்துச் செய்யப் பேன்கள் மாண்டு போம்.

**நோய்கள் வரப் பிடிக்கும்பொழுதும் நோயுற்றோர் பரப்பக் கூடியபொழுதும்:**—மேற்கண்ட பலவழிகளில் நச்சுக்கூடுகள் நம்முடலை அடைந்தவுடன் நமக்கு நோயுண்டாய் விடுவதில்லை. அவை நம்முடலிலுள்ள பல பகைவர்களையுந் தப்பி நோயுண்டாக்கக்கூடிய அளவு (இரண்டாவதோராயிரக் கணக்காக) வளர்வதற்குப் பல நாட்களாகின்றன. அந்நாட்களே வரப் பிடிக்கும் நாட்களாம் (Incubation Period). இவை நோய்களுக்குத் தக்கவாறு வேறுபடுகின்றன. அவை பின்வரும் பட்டியலில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறே நோய் நீங்கியதுங்கூட நோயுற்றோர் உடலில் இந்நச்சுக்கூடுகள் அற ஒழிவதில்லை. அவை குறைந்த எண்ணிக்கையாகப் பல நாட்களிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்து பின் நீங்குகின்றன. இந்நாட்களுள் அன்னோருடன் பழகுவோரை அந்நோய் தொற்றி அல்லது ஒட்டிக் கொள்ளக்கூடும். இந்நாட்களுக்குப் பரப்பக்கூடிய பொழுது (Infection Period) என்று பெயர். இந்நாட்களும் நோய்களுக்குத் தக்கவாறு வேறுபடும். அவையும் பின்வரும் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்நாட்களுள் நோயுற்று நலமடைந்தோருடன் பழகக்கூடாது. அப்பட்டியல் வருமாறு.

| எண். | நோயின் பெயர். | வரப்பிடிக்கும் நாள். | பரப்பக்கூடிய பொழுது. |
|---|---|---|---|
| 1 | பொன்னுக்கு வீங்கி | 10 முதல் 12 நாட்கள் வரை | 3 வாரம் |
| 2 | நீர்க்கொள்ளுவான் (Chicken pox) | 18 ,, 12 ,, ,, | 3 ,, |
| 3 | சின்னம்மை (Measles). | 8 ,, 12 ,, ,, | 4 ,, |
| 4 | பெரியம்மை (Small pox). | 12 நாட்கள் | 6 ,, (பொறுக்கு விழும் வரை) |
| 5 | (Dingue.) | 3, 5 அல்லது 6 நாட்கள் | 2 ,, |
| 6 | (Influenza.) | சிலமணிகள் | 1 முதல் 2 வாரம் வரை |
| 7 | (Relapsing Fever.). | சிலமணி, பெரும்பாலும் 5 நாள் அல்லது 12 நாள் வரை | 4 வாரம் |
| 8 | (Entric ,, ). | 5 முதல் 21 நாள் வரை | 6 ,, |
| 9 | மலேக்காய்ச்சல் (Malaria). | 1 முதல் 3 வாரம் வரை | குருதியை ஒருவரிலிருந்து எடுத்து புகட்டினுல்தான் வரும் |
| 10 | நச்சுக்காய்ச்சல் (Typhoid). | 11 நாட்கள் | வயிற்றுப்போக்கு நிற்கும்வரை |
| 11 | செங்காய்ச்சல் (Scarlet Fever). | 4 ,, | பொறுக்கு விழும்வரை |
| 12 | கழிச்சல் (Cholera). | சிலமணி முதல் 5 நாள் வரை | 2 வாரம் |
| 13 | நச்சுக்கட்டி (Plagues). | 3 முதல் 10 நாள் வரை | 3 வாரம் அல்லது சற்றுமேல் |
| 14 | பெருநோய் (Leprosy). | 2 ஆண்டு அல்லது அதற்குமேல் | எப்பொழுதும் |
| 15 | கிரந்தி (Syphilis). | 6 வாரம் | கணக்கில்லை |
| 16 | வெட்டை (Gonorrhoea). | 4 நாள் அல்லது 1 முதல் 8 நாள் வரை | 3 வாரம் அல்லது அதற்குமேல் |
| 17 | (Diphtheria). | 1 முதல் 8 நாள் வரை | 6 வாரம் |
| 18 | கக்குவான் (Whooping cough). | 14 நாள் | இருமல் வர 3 வாரம் முன் வந்த பின் 3 வாரம் |
| 19 | உடலுருக்கி (Tuberculosis). | 3 வாரம் | கணக்கில்லை. |

நோயாளியின் படுக்கை :—இவ்வாறு பலவழிகளில் நச்சுக் கூடுகளை மாள வைத்தும், அவை பரவும் வழியைத்தடுத்தும் வருவதால் இந்நோய்கள் வரவரக்குறைந்து வருவது கண்கூடாக் கண்டதே. எனினும் எஞ்சிய சிலருக்கும் இந்நோய்கள் வரும்பொழுது அவற்றிற்குத் தக்க ஏற்பாடுகள் செய்தல் இன்றியமையாததொன்றன்றோ? ஆதலின் தொற்று ஒட்டு நோய்களுள் ஒன்று ஒரு ஊருக்குவரின் முதன்முதல் வந்தவுடனேயே அவ்வீட்டுக்காராவது அவ்வூர்ப் பெரியாராவது தப்பாமல் உடல்நல மேற்பார்வையாளர் (Sanitary Inspector)க்குத் தெரிவிக்கவேண்டும். அதனுல் அவர்வந்து அவ்வூரைத் தூய்மையாக்கி, நோய் பரவாமற் செய்வர். இதனுல் எத்துணை நன்மை! எவ்வளவு செலவு மிச்சம்!! எத்துணைப்பேரின் உயிர் காக்கப்படுகிறது!!! இரண்டாவதாக நோயாளியைத் தனியிடத்தில் வைக்கவேண்டும். இதற்காக ஆட்சியாளர் தனியிடம் அல்லது கட்டிடம் ஏற்படுத்தியிருப்பின் அங்கு அனுப்புவதே நன்று. சிறப்பாக நச்சுக்கட்டு, கழிச்சல்போன்ற மிகக் கொடிய நோய்கள்வரின் இதைவிட வேறு நல்வழியில்லை. ஏனெனில் இதனுல் நோய் மற்றையோருக்குப் பரவுவது குறையும்; நோயாளி தக்க, அறிவுள்ள வழியில் பாதுகாக்கப்படுவான். இவ்வாறு இயலாவிடின் வீட்டிலேயே சாளரம் மிகுந்து, வெளிச்சம் காற்றோட்டமுள்ள, ஒலிகுறைந்த, தூசி, குப்பையற்ற தூய மேல்மாடியிலுள்ள ஒரு தனி அறையில் வைத்தல் நன்று.* அவ்வறையிலுள்ள கம்பளங்கள், படுதாக்கள், வேண்டாத மரக்கலன்கள், பஞ்சு முதலிய திணித்த கட்டில், மெத்தை முதலியவற்றை நீக்கவேண்டும். ஏனெனில் அவைகளில் நோய்க்கூடுகள் ஒட்டியிருந்து பின் பரவிவிடும். அங்கு பழகுகிற கலன்கள் பின் எளிதில் நச்சு நீக்கக்கூடியனவாயிருத்தல் வேண்டும். அங்குள்ள சுவடிகள், பாய்கள் முதலியன பின் எரித்துவிடக் கூடியனவாயிருத்தல் வேண்டும். நோயாளியின் படுக்கையின் மூன்று புறங்களிலும் மற்றையோர் பழகக்கூடிய அளவு

---

* ஒரு நோயாளிக்கு 12 அடி நீளம், 12 அடி அகலம், 10 அடி உயரம் அல்லது 1440 அடி பருமனுடைய அறை தேவை.

இடமிருக்கும்படி படுக்கை போடவேண்டும். அவ்வறையின் கதவைத்திறந்து வைத்து ஒரு துணிப்படுதாக்கட்டி அதைக் கரிப் புளிப்பு (1·20) நீரால் அடிக்கடி நனைத்து வரவேண்டும். நோயாளியின் தலைமாட்டில் ஒரு குட்டளப்பான் இருக்கவேண்டும். நோயாளியிடத்தில் ஒரு பணியாளர் (Nurse) எப்பொழுதும் இருந்து வரவேண்டும். அந்த ஆள் துவைக்கக்கூடிய ஆடை யணிந்துகொண்டிருக்கவேண்டும்; வேறொருவருடனும் பழகக் கூடாது; மற்றவர்களுடன் பழகப்புகும்பொழுது அவ்வாடைகளைக் களைந்துவிட்டுக் கூடுமானல் குளித்து முழுகிவிட்டுத்தான் செல்லல் வேண்டும். நோயாளி பயன்படுத்தும் கலன்களையும் அவ்வாறே வெளியில் அனுப்பக்கூடாது; அனுப்ப நேரின் நச்சு நீக்கித்தான் அனுப்பவேண்டும்; நோயாளிக்கென்று தனிக்கலன்கள் வைத்திருப்பதே நன்று; அவைகளும் அடிக்கடி தூய்மை யாக்கப்படவேண்டும். நோயாளியின் எரு, மூத்திரம், வாயாலெடுத்தது முதலியவற்றை ஏற்கத் தனிக்கலன்கள் இருக்க வேண்டும். அவைகளை நோய்க்குத் தக்கவாறு மருந்திட்டு நீக்க வேண்டும். நோயாளிக்குத் தக்க உடையை அடிக்கடி மாற்றிக் கொடுக்கவேண்டும். ஏனெனில் அவன் குளிக்க இயலாதவனு யிருப்பன். அவன் அணிந்த ஆடைகளையும் துடைத்த துண்டு களையும் நோய்க்குத் தக்கபடி நச்சு நீக்கித் துவைக்கவேண்டும். நோயாளியின் உணவும் தக்கபடி, சூடானதாய், புதிதானதாய், ஈமொய்க்காததாயிருக்கவேண்டும். அவனுக்கு நேரப்படி மருந்து கொடுக்கப் பணியாள் கடிகாரத்துடன் காத்துக்கொண்டிருக்க வேண்டும். இவ்வாறெல்லாம் தக்க முயற்சி எடுத்துக்கொண்டால் தான் நோயாளி பிழைப்பதற்கும் நோய் பரவாதிருப்பதற்கும் வழி உண்டு.

தொற்று நோய்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியவை:- தொற்று நோய்களைப்பற்றி இதுகாறுங் கூறியவைகள் பொதுவாக எல்லாத் தொற்றுநோய்களையுங் குறிப்பனவாகும். இனி ஒவ்வொரு நோயாக எடுத்துக்கொண்டு அவைகளைப்பற்றி நான்கு பிரிவின்கீழ் ஆராய்வாம். முதலாவது பிரிவு அந்நோயின் அடையாளமாகும். இவ்வடையாளங்களைக்கொண்டு எந்நோய்

வந்துளது என்று கண்டுபிடிக்க இயலும். இரண்டாவதாக நோய் முதல் யாதெனவும் மூன்றாவதாக அந்நோயை நீக்கும் வழிகளையும் நான்காவதாக அதைப் பலர்க்கும் பரவாமல் தடுக்கும் வழிகளையும் ஆராய்வாம். இந் நோய்களைத் தடுக்கும் வழியைப் பின்பற்றாவிடில் அது பலருக்கும் எளிதில் பரவிச் சாக்காட்டை விளைக்கும். ஆதலின் அவ்வழிகளைத் தவறாது பின்பற்றவேண்டும்.

வயிற்றுளைவு (Dysentry) :—

அடையாளம் :—குடல் புண்ணாகிப் பெருங்குடலில் கட்டி புறப்படுவதால் இந்நோய் உண்டாகிறது. வயிற்றுப்போக்கில் துவங்கி சளியும், சீழும், குருதியும் எருவுடன் விழுகின்றன. கொஞ்சங்கொஞ்சமாக அடிக்கடி வெளிக்குப்போகிறது. வயிற்று வலி, எருவாய்வலி உண்டாகின்றன. கடுமையாக ஆக ஆக தசை கரைந்துபோகிறது. இதனால் குடல்களைப் புண்டாகியும் குருதியேற்றம் வலிவிழந்தும் பத்து நாளில் சாக்காடு உண்டாகக் கூடும். இந்நோய் விட்டுவிட்டுத் திங்கட் கணக்காயும் ஆண்டுக் கணக்காயும் நீடிக்கும்.

நோய் முதல் :—இது பொய்க்காலி (Amocha) களால் உண்டாகின்றது.

நீக்கும் வழி :—இதற்கு எல்லாவற்றிலுஞ் சிறந்த மருந்து களைப்பாறலே. ஒரு சிறிதும் உடலாலும் உள்ளத்தாலும் வேலை செய்யாது படுக்கையிலேயே இருக்கவேண்டும். சூட்டைத் தணிக்கக்கூடிய உணவாகிய நெய், பால், தயிர், பால், வெங்காயம், நெல்லிக்காய், வெந்தியவிதை, பிஞ்சு மாதுளை, மணத்தக்களிக்கீரை முதலியவற்றை மிகுதியாக்கவும் மிளகு, மிளகாய், கடுகு முதலிய வற்றைக் குறைக்கவும் வேண்டும். எண்ணெய் தேய்த்து அடிக்கடி முழுகல் வேண்டும். நோய் வந்து இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு வெறுஞ் சோற்றில் வெறு நெய்யிட்டுப் பத்துக் கவளமாவது உணல் தக்க மருந்தாம்; அல்லது மாதுளம் பிஞ்சை அரைத்துத் தயிரில் குழப்பி உண்ணல் நன்று.

**தடுக்கும் வழி** :—இந் நோய்க்கூடு உணவு, குடிநீர் முதலிய வற்றின் வழியே உடலுட் புகுகிறது. ஆதலின் அவை நன்றாய்க் காய்ச்சப்பட்டதாயும் வெந்ததாயும் இருக்கவேண்டும். ஈக்கள் இக் கூட்டைப் பரப்புவதால் இவை உணவில் மொய்க்கவிடக் கூடாது.

வயிற்றுப்போக்கு (Diarrhea) :—

**அடையாளங்கள்** :—வயிற்றுவலியுண்டாகி, வெளிக்கு அடிக் கடி போகிறது. அவ்வாறு போகும்போதும் வலி உண்டாகிறது. எருவில் நீர்மிகுத்துக் கெட்ட நாற்றமுடையதாய் சிலவேளைகளில் பச்சையாய், சமிக்காத உணவுடன் கலந்திருக்கிறது. நாக்கில் படர்ந்திருக்கும். நீர் வேட்கை மிகும். வாயாலெடுத்தல் இருந் தாலும் இருக்கும். போக்குமிகின் உடற்சூடும் சிறுநீருங் குறையும்.

**நோய் முதல்** :—இந்நோய்க்கூடு உணவு, நீரிலிருந்தே நம் முடலை அடைகிறது. புதியசெப்பு, பித்தளை அல்லது வெண் கலப்பாண்டங்களில் சமைத்த உணவும், அழுகிய பூச்சியுள்ள பழங்களும், மிகுதியாக உண்ணப்பட்ட பச்சைக் (வேகாத) காய்கறி கீரைகளும், இறந்த தசை நச்சுடைய பழ இறைச்சி களும், சிலவகை மீன்களும், பழம் பால், வெண்ணெய் முதலி யனவும், சமிக்காத மீதூணும் இந்நோயை உண்டாக்குகின்றன. காய்ச்சப்படாத நீரிலுள்ள நச்சுக்கூடுகளும் இதை உண்டாக்கும்.

**மருந்து** :—கட்டியான உணவே கொடுக்கக்கூடாது. வேண்டிய நீர் கொடுக்கலாம். பசித்தால் பால்கொடாது பாலைக் காய்ச்சி எலுமிச்சம்பழச் சாறுவிட்டுத் திரித்து வடிகட்டிய தெளிவைக் கொடுக்கலாம். அல்லது ஒரு முட்டை வெண் கருவை நீரிலிட்டு அடித்துக் கொடுக்கலாம். வாயாலெடுத்தலை அடக்க இரண்டு காப்பான் வண்டைக்கொன்று சட்டியிலிட்டுக் கருக்கித் தேனில் குழைத்துக் கொடுக்கலாம். வாட்சிமிகின் நாக்குப்பூச்சிகளிற் பத்தைக் கொண்டு வந்து கருக்கி நீருடன் கலந்து காய்ச்சிக் கொடுக்கலாம். இவையாவுங் கைகண்ட மருந்துகள். இவற்றை நோயாளிக்குத் தெரியாது கொடுக்க

வேண்டும்; ஏனெனில் தெரிந்தால் வெறுப்பு உண்டாகும். நோயாளியின் உடல் வரவர ஒடுங்கினால் குருதிக் குழாய்களில் உப்புநீரைப் புகட்டல் (Saline Injection) நலந்தரும்.

வராமற்றடுக்கும் வழி :—மேற்கண்ட நோய் முதல்களை நீக்கவேண்டும். வயிற்றுளைவு, கழிச்சல் முதலிய நீரால் பரப்பப்படும் நோய்கள் வாராமற்றடுக்கும் வழிகளே இதற்கும் உரியனவாம்.

கழிச்சல் (Cholera) :—

அடையாளம் :—வயிற்றுப்போக்கு, கஞ்சிபோன்ற எரு வெளிப்படல், (இது இந்நோய்க்கே உரியது) கெண்டையேறல், வாயாலெடுத்தல் முதலியனவாம். இது மூன்று நிலையை யுடையது. அவைதாம் கழிச்சல் நிலை, குளிர்நிலை, வெப்புநிலை என்பனவாம். (1) கழிச்சல் நிலை 2 மணி முதல் 12 மணி வரையும் இன்னும் அதற்குமேலும் இருக்கிறது; இது நோயின் கடுமைக்குத் தக்கபடி குறைந்திருக்கிறது. திடீரெனக் கடுமை யான வாயாலெடுத்தலும், கெண்டையேறலும் வயிற்றுப்போக் குடன் துவங்குகின்றன. எருவில் கஞ்சிபோன்றபொருள் மிழுவ துடன் இந்நோயை உண்டாக்குகின்ற காற்புள்ளிக்கூடும் (Comma bacilli), குடற்றேலும், பிசிறுகளும் வந்து மிழுவ தாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. கை கால் விரல் களிலும் வயிற்றுத் தசைச் சுவரிலும் (Abdominal Walls) கெண்டையேற்றம் உண்டாகிறது; பெருங்களைப்பும், மெலிந்த கைத்துடிப்பும், உடற் சூட்டை இழத்தலும் உண்டாகின்றன. (2) இரண்டாவதாகக் குளிர்நிலை உண்டாகிறது; இது சிலமணி களிலிருந்து சில நாட்கள்வரை இருக்கிறது. இந்நிலையில் போக்கு நின்று வாயாலெடுத்தலும் கெண்டையேறலும் இருக்கின்றன. உடல் பிணம்போல் கிடக்கிறது; தோல் சில்லிட்டு இறந்தாற் போல் மங்குகிறது. கைத்துடி (Pulse) இல்லை. ஆனால் உள்ளம் விளக்கமாகவே இருக்கிறது. நீரிறங்குதலும், பித்தமும் அடங்கு கின்றன. (3) மூன்றாவதே சூட்டு நிலையாகும். இப்பொழுது உடற்சூடு ஏறுகிறது, கைத்துடியும் பித்தமும் உண்டாகின்றன. நீர் குறைவாக இறங்குகிறது. வெளிக்குச் சிறிது போகிறது.

சிலவேளைகளில் தோலில் கொப்புளம் முதலியனவும் உண்டாகின்றன. இதன் பின் மிக்க வலிவின்மை உண்டாகிறது.

நோய் முதல் :—இது காற்புள்ளிக் கூடுகளால்தான் உண்டாகிறது. இக்கூடுகள் நோயாளியின் எரு அல்லது வாயாலெடுக்கப் பட்டதில் மிகுந்திருக்கிறது ; அழுக்குள்ள விடங்களிலும் உண்டாகிறது. இக்கூடு எவ்வகையிலாவது நாம் குடிக்கும் நீரை அடைந்தாவது, ஈக்களால் நம்முணவை அடைந்தாவது நம்மால் விழுங்கப்பட்டு உணவு வாய்க்காலை அடைவதால்தான் இந் நோயுண்டாகிறது. இந்நோய் முதன்முதலாக ஒரு ஊரில் யாருக்கு வருகிறதோ அவர்கள் தப்புவது அரிது. பொதுவாக நூற்றுக்கு அறுபது விழுக்காடு சாக்காடு ஏற்படுகிறது. ஒருவருக்கு ஒரு முறை வந்தால் பின்னும் வரவுங்கூடும்.

மருந்து :—படுக்கவைத்துக் களைப்பாறச் செய்யவேண்டும். உடல் குளிராக இருக்கும்பொழுது வெந்நீர்க் குப்பியாலாவது, கம்பளிப்போர்வையினாலாவது சூடுண்டாக்கவேண்டும். கட்டி உணவு கொடுத்தல் ஆகாது. மறு உலைக்கஞ்சிபோன்ற நீர்ப் பொருளுணவே நல்லது. இறைச்சி வடிகையைச் சூப்பாக வைத்துக் கொடுத்தல் நன்றன்று. மிளகுக்குடிநீர் (கஷாயம்), குளோரோடைன் (Chlorodyne) இவைகளில் ஒன்றைக் கொடுக்கலாம். சூடம், காப்பி, தேநீர், இவைகள் நோயாளிக்குக் கிளர்ச்சியை உண்டாக்கும். வெடியுப்பு முதல் மக்கை (Pottassium-per-manganate)வை அரை மணிக்கு ஒரு முறை இரு செல்லிடை (grains) கொடுத்தால் காற்புள்ளிக் கூடு களுண்டாக்கும் உயிர்த்தசை நச்சைக் கெடுத்துவிடும். இந் நோய் கடுமையான பின்னும் எருவாய் வழியாகவோ, வடிகுழாய் வழியாகவோ உப்பு நீரைப் புகட்டல் நலனுண்டாக்கும்.

வராமற்றடுக்கும் வழி :—இது நீரின் வழியே பரவும் நோயாதலின் முற்கூறியபடி முன்னேற்பாடுகள் செய்துகொள்ள வேண்டும்.

நீர்க்கோள்ளுவான் :—

அடையாளம் :—குளிர் உண்டாகிக் காய்ச்சல் மூன்று நாளைக்கு அடிக்கிறது. பின் சிறு அம்மைகள் கிளம்புகின்றன. ஏழுநாட்கள்வரை அடுக்கடுக்காக அம்மைகள் கிளம்பிக்கொண்டிருக்கின்றன. இவை கழுத்து, மார்பில் 'முதலில்' புறப்பட்டுப் பின் உடல் முழுவதும் பரவுகின்றன; உண்ணுக்கு, நாக்கிலும் உண்டாகின்றன; சிலவேளை மூஞ்சி, கைகளில் உண்டாவதில்லை. இவை 10 முதல் 14 நாட்களுக்குள் காய்ந்து உதிருகின்றன. தளும்புகள் சிறிதே யிருக்கின்றன; அவையும் சடுதியில் மறைந்து விடுகின்றன. இந்நோய் பெரும்பாலும் குழவிகளுக்கும் சிறார்களுக்குமே வருகிறது. ஒருமுறை வந்தால் பின் வருவதரிது. பெரியோர்களுக்குவரின் இந்நோய் நீங்கியதும் மிகுந்த வலிவின்மையை உண்டாக்குகிறது. இவ்வலிவின்மையை நீக்கக் கொயினா, மஞ்சள் நச்சு (Arsenie) தக்க மருந்தாம். அம்மை புறப்பட்டதும் அரிப்பு உண்டாகிறது. இதற்கு வேப்பிலையால் தடவலே நன்று; சொரிதல் மிகக் கேடு விளைவிக்கும்.

சின்னம்மை :—இது சளிபிடித்தல், மிகுதியான தும்மல் உண்டாகிக் கண்ணீர் வடிதலுடன் கூடிய காய்ச்சல் நான்கு நாளைக்கு அடித்தபின் காணும். அம்மை பெரிதாக ஆகக் கூட்டங் கூட்டமாக இருக்கும். காதோரம், கழுத்து, மூஞ்சியில் முன்னால் கண்டு பின் கீழே தோன்றுகின்றன. அம்மை மயிர்ப்பட்டு (Velvet) போன்று மென்மையாயிருக்கும் அது ஒருநாளில் வளர்ந்து இரண்டாம் நாள் மறையப் புகுகிறது. முழுதும் மறைய 8, 9 நாள் பிடிக்கும். இது இளைஞர் நோய். இதனால் சாக்காடு நூற்றுக்கு 2 அல்லது 3 விழுக்காடுதானிருக்கும்; மிகுதியாயின் 10, 12-க்கு மேற்போகாது. வலுவற்ற, ஏழைக் குழவிகளுக்கே இது மிகுதியாய் வருகிறது.

பெரியம்மை :–திடீரெனக் காய்ச்சல் (101° முதல் 104° வரை) உண்டாகிறது; தலையும், முதுகும் வலிக்கிறது; வாயாலெடுத்தல் உண்டாகிறது. 3 நாளில் அம்மை உண்டாகிறது. இது முதலில் கண்ணுக்குத் தெரிவதைவிடக் கைக்குக் கரடாகத் தெரியும். இது

மூஞ்சி, மணிக்கட்டில் முதலில் உண்டாகிப் பின் பரவுகிறது; வாய், தொண்டை, ஒலிப் பெட்டியிலும் உண்டாகும்; வயிறு, இடுப்பு, கால்களில் குறைவாக இருக்கும். பின் 7, 8 நாளில் சீழ் கோக்கும். அது முதல் 6, 7, 8 நாளைக்குக் காய்ச்சல் அடிக்கும். சீழ்கோத்த எட்டாம் நாள் வெடித்துக் காய்ந்து 15 முதல் 20 நாளில் உதிரும். அம்மை குத்திக் கொண்டவர்களுக்குக் கடுமை யாக வராது. காய்ச்சல் கடுமையாகவரினும், அம்மைகள் மிகுதி யாகப் புறப்படினும் நோயின் கடுமையும் மிகுதியே. இதுவும் இளைஞர்களுக்கே மிகுதியாகவந்து சாக்காட்டை விளைவிக்கிறது. குடிகாரர்களுக்குவரின் தப்புவதரிது. இந்நோய் கண்ட 11-ஆம் நாள் பெருங்கேட்டை விளைவிக்கும். நோயாளிக்கு எச்சில் மிகுதி யாக ஊறினல் கடுமை மிகுதியே.

மருந்து:—மேற்கண்ட நீர்க்கொள்ளுவான், சின்னம்மை, பெரியம்மை இம் மூன்றிலொன்று வந்தால் நல்ல காற்றோட்ட முள்ள தனியறையிற் படுக்கவைத்து ஓய்வு கொடுக்கவேண்டும். குளிர்ந்த உணவாகிய இளநீர், கொங்கு, பேயன்பழம் முதலிய பழங்கள், பால், தயிர், நெய், பானகம் முதலியவைகளையே கொடுத்து வரவேண்டும். வேறு மருந்து ஒன்றுங் கொடுக்கவே கூடாது; இயற்கை மருந்தே மருந்தாம்.

பெரியம்மை வந்திருந்தால் அவ்வீட்டில் மிளகாய் வறுத்தல் கடுகு தாளித்தல் முதலியன செய்யக்கூடாது. நோயாளிக்குச் சினம் உண்டாக்காமலிருக்க வேண்டும். அவன் மனைவி முதலி யோரைப் பார்த்தல் கூடாது. அவனுக்குக் கட்டி உணவே கூடாது. காய்ச்சலடிக்காவிடில் ஒத்த அளவு நீர் கலந்த பாலைக் கொடுக்கலாம்; காய்ச்சலடித்தால் இஞ்சி, நார்த்தை, கொடி முந்திரிச் சாற்றைக் கொடுக்கலாம். கழிச்சல் மருந்து நாலைந்து நாளைக்கு ஒரு முறை கொடுக்கலாம். நாள்தோறும் குடற் கழுவல் (Enama) செய்யலாம். அதற்கு ½ சேர் (ஒரு பைண்டு) 98° யுள்ள நீரை விட்டுக் கழுவிப் பின் 4½ சேர் (8 பைண்டு) 104° யுள்ள நீரை விட்டுக் கழுவிக் கடைசியாக ½ சேர் (½ பைண்டு) குளிர் நீரை விட்டுக் கழுவலாம். குளிர் நீரை வெளித்தள்ள

வேண்டியதில்லை; இது மூத்திரத்துடன் வெளிப்பட்டுவிடும். மேலே வேர்க்கிறவரை காய்ச்சலிருந்தால் குளிர் நீரில் நனைத்த துண்டும் இல்லாவிடில் வெது வெதுப்பு நீரில் நனைத்த துணியையும் சுற்றிக் கம்பளியால் மூடலாம். வேர்த்ததும் எடுத்துவிட்டுக் காய்ந்த துண்டால் ஒற்றலாம். அடியைக் கம்பளியால் மூடுவதாலோ, வெந்நீர்க்குப்பியாலோ சூடுபடுத்தி வைக்கவேண்டும். அரிப்பிற்கு வேப்பிலையால் தடவலே நன்று. நோயாளியின் படுக்கையறையின் சாளரம், கதவு, கூரைக் கண்ணாடி முதலியவற்றின் வழியே வரும் வெளிச்சத்தைச் சிவப்புக் கண்ணாடியாலோ சிவப்புத்தா ளொட்டுவதாலோ சிவப்பாக்கி உள்ளேவிட்டால் பெரியம்மைத் தழும்பு குறையுமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பரவாமற்றடுக்கும் வழி:—நம் வீடுகளில் அம்மைவார்த்தால் வாசற்படிக்கு முன்னால் வேப்பிலை செருகிப் பிறர் வாரமற் செய்வதும் பிச்சையிடாதிருப்பதும் நோய்பரவாமற் காப்பதற்குச் சிறந்த வழியாம். புது உடை நனைக்கத் தகுந்ததன்றாதலின் அவ்வீட்டார் தரித்தல் கூடாது. அவ்வீட்டார் திருவிழாவிற்குப் போதலும், பண்டமாற்றல் (வியாபாரம்) செய்புதலும் நோயைப் பலருக்குப் பரப்புமாதலின் கூடா. இவ்வழிகளைப் பிற தொற்று, ஒட்டு நோய் வரினும் காடல் பெரு நலனை விளைக்குமன்றோ! நோயாளியிருக்கும் வீட்டிற்குத் தீண்டற்காரர்கள் வருதல் பெருங்கேடு விளைக்குமாதலின் நீக்கப்பட்டிருக்கிறது. அம்மை வைத்துக்கொள்ளுதல் மிகப் பலருக்கு இந்நோய்கள் வாராமலும் வந்தாலுங் கடுமையில்லாமலும் செய்கின்றது. சிலர் இதைக் கேடு தருவதாக நினைக்கினும் பல மருத்துவப் பெரியார் இதை நன்மை தருவதாகவே நினைக்கின்றனர்.

அம்மைவைத்துக் கொள்ளல்:—இப்பழக்கம் ஒரு முறை அம்மை வார்த்தவர்களுக்கு மறுமுறை வார்க்காதிருக்கிறதையும், வார்த்தாலுங் கடுமையில்லாதிருக்கிறதையுங்கண்டு உண்டானது. துவக்கத்தில் மக்களுக்கு வந்த அம்மையின் பாலை எடுத்துக் குத்தினார்கள். அதனால் எவர் பாலை எடுத்தார்களோ அவரின்

வேறுநோய்கள் (முக்கியமாக கிரந்திக்) குத்தப்பட்டவர்களுக்கும் பரவுவதாயின. இதை நீக்கவே பசுக்கன்றின் அம்மைப்பாலை எடுத்துக் குத்தப் புகுவாராயினர். அம்மைவைக்கும்போது ஊசி தூய்தாயிருக்கும்படி நெருப்பில் காய்ச்சப்படவேண்டும்; வைப்பவன் கையும் வைக்கப்படும் இடமும் தூய்மையாய் இருக்கும்படி கழுவப்படல்வேண்டும். இன்றேல் அங்குள்ள நச்சுக்கூடுகள் உட்புகுந்து வேறு நோயுண்டாக்கிவிடும். இவ்வாறு வைத்துக் கொண்டால் இரண்டு மூன்றுநாளில் ஒரு பருப்போல் கிளம்பி ஐந்தாம் நாள் கொப்புளமுண்டாகி, எட்டாம் நாள் பழுத்துப் பத்தாநாள் காய்ந்துபோய்ப் பதினான்கு பதினைந்தாம் நாள் பொறுக்கு உதிருகிறது. இவ்வாறு அம்மை வைத்துக்கொள்ளுவதால் உண்டாகும் நன்மைகளாவன :-(1) அம்மைவைத்த ஐந்து, ஆறு ஆண்டுகள்வரை அம்மைவார்க்காது (2) பின் இருபதுமுப்பது ஆண்டுவரை வார்க்கும் அம்மையின் கொடுமையைக் குறைக்கிறது; ஆனால் வார்க்காது என்று உறுதியாய் நம்பமுடியாது. அவ்வாறு வார்க்காதிருக்க வேண்டுமாயின் மறு அம்மை வைத்துக்கொள்ள வேண்டும். (3) அவ்வாறு மறு அம்மை வைத்த ஐந்து, ஆறு ஆண்டு வார்க்காது. பின் வாழ் நாள் முழுவதும் கடுமையாய் வார்க்காது. (4) ஒன்று அல்லது இரண்டு ஆண்டுக் குழவியாய் இருக்கையில் ஒருமுறை, பன்னிரண்டாவது ஆண்டில் ஒருமுறை இருபத்தோராவது ஆண்டில் ஒருமுறை ஆக மும்முறை ஒருவனுக்கு வைத்துவிட்டால் அவன் வாழ்நாள் முழுவதும் வாராது. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் செய்துவிட்டால் உலகில் அம்மை வார்த்தலே இல்லாமற் போய்விடும்.

நச்சுக்காய்ச்சல் (Typhoid) :—

அடையாளம் :—முதலில் தலைவலி, எருக்கட்டு, இருமல், சிறுவயிற்றுவலி, கழிச்சல் உண்டாகிப்பின் காய்ச்சல் வருகிறது. அக்காய்ச்சல் இருபத்திரண்டு முதல் முப்பது நாள் அடிக்கிறது; முதலில் நாளுக்கு நாள் வலுத்துப் பின் ஒத்திருந்து கடைசியாகக் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைகிறது. மண்ணீரல் வெந்து போகிறது; வீங்குகிறது. முதல் வாரத்தில் நாவில் வெள்ளையாகச் சிலும்பல் சிலும்பலாய்ப் படர்ந்திருக்கிறது; பின் இது

மறைந்து பளபளப்பாய் வரண்டு இருக்கிறது. சிறு குடலில் சிலவிடங்கள் வெந்து, வீங்கிப், புண்படுகிறது. வயிற்றில் சிவப்புக் கொப்புளங்கள் ஏழு முதல் பன்னிரண்டாம் நாட்களில் தெரிகின்றன. உடல் சோம்பலாய், வலியுடனிருக்கிறது.

மருந்து:—(1) இந்நோயுடையார் வேலை செய்தாலும், முரட்டுத்தனமாய் எழுந்தாலும், முதுகை, வயிற்றை வளைத்தாலும் குடற்புண் உடைந்து குருதி ஒழுகிச் சாக்காடுண்டாகும். அதனால் இளைப்பாறவேண்டும், படுக்கையிலேயே இருக்கவேண்டும். அவ்வாறிருப்பதால் படுக்கைப் புண்ணுண்டாகாதபடி இரண்டு மணிக்கொருமுறை மெதுவாகத் திரும்பி ஒருக்களித்துப் படுத்தல்வேண்டும். (2) குடல் புண் பட்டிருப்பதால் எளிதில் சமிக்கக் கூடிய நீருணவையே கொடுக்கவேண்டும்; கட்டியுணவு கூடாது. மோர், காய்ச்சின பாலில் எலுமிச்சம்பழம் பிழிந்து வடிகட்டிய தெளிவு, முட்டையின் வெண்கரு (காண்டியால் அடிக்கப்பட்டது) வடிக்கட்டிய மறு உலைக்கஞ்சி, சமிக்கப்பட்ட உணவு வகைகள் இவைகளே தக்க உணவாம். நோயாளியின் வலுக்குறையாமல் வேண்டிய அளவு உணவு கொடுக்கவும் வேண்டும்; சமிக்கக்கூடாத அளவு கொடுத்துவிடவுங் கூடாது.

வராமற்றடுக்கும் வழி:—இது நீரால் பரவும் நோயாதலின் முற்கூறியபடி அதற்குத் தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். நத்தை, கூட்டுமீன் (Shell Fish), குளிர்பாற்கட்டி (Ice cream), நச்சாக்கப்பட்ட பால் இவைகளால் இந்நோயுண்டாகுமாதலின் அவைகளை உண்ணக் கூடாது. பத்தாம் ஆண்டு முதல் முப்பதாம் ஆண்டுவரை வரக்கூடும்; ஒருமுறை வந்தாலும் மறுமுறை வரும். ஆதலின் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். இந்நோய் மிகுந்து வரும்பொழுது இதற்குத்தக்க அம்மை குத்திக் கொள்வதால் வராமற்றடுக்கலாம். இது தீய உயிர்த்தசை நச்சால் (Toxin) உண்டாகிறது.

மலைக்காய்ச்சல்:—

அடையாளம்:—திடீரெனக் காய்ச்சல் வரும், தலைவலி, முதுகு வலி, மூட்டுகளில் வலி யுண்டாகும்; மூன்று நிலையாக

விருக்கும். முதலாவது நிலைக்குக் குளிர்நிலை யென்று பெயர். இதில் குளிர் உணர்ச்சி உண்டாகும், உடல் நடுக்கலும் பல்லடித்தலும் உண்டாகும். இரண்டாவது நிலைக்குச் சூட்டு நிலை யென்றுபெயர். இதில் குளிர்மாறிக் காய்ச்சலுண்டாகும். (103° முதல் 106° வரை, உடல் வரண்டு கொதிக்கும், மூஞ்சி சிவக்கும், தலை வலிக்கும், முதுகும் வலிக்கும். இவ்வாறு மூன்று முதல் நான்கு மணிவரை இருக்கும். மூன்றாவது நிலைக்கு வேர்வை நிலை யென்று பெயர். இப்பொழுது நன்றாக வேர்த்துத் தாரை தாரையாக ஒழுகும். இவ்வாறு ஒன்று முதல் இரண்டு மணி வரை இருக்கும். பிறகு நோய் நீங்கிய உணர்ச்சி உண்டாகும். இவ்வாறாகிய மூன்று நிலைகளும் 48 மணிக்கு ஒரு முறையாவது 72 மணிக்கு ஒரு முறையாவது வரும். இந்நோயால் உடல் வெளுத்து, பசி யின்மையும் மண்ணீரல் வீக்கமும் உண்டாகும். இந்நோய் ஒருவரையுங் கொல்லுவதில்லை. ஆனால் இந்நோயின் உதவியால் வேறு நோய்கள் உண்டாகி அவைதான் கொல்லுகின்றன.

நோய் முதல் :—இந்நோயை யுண்டாக்கும் நச்சுக் கூடுகளை ஒருவகைக் கொசுத்தான் பரப்புகிறது. அக் கொசு பெரிதாய், இறகுகளில் புள்ளியுடையதாய், சுவரில் உட்காரும் பொழுது பின்னிரண்டு காலையும், உடலையும் செங்குத்தாய் வைத்திருக்கும் இயல்புடையது. இவ்வகைப் பெண் கொசு இந்நோயாளியைக் கடித்துக் குருதியை உறிஞ்சுவதால் இந்நோய் நச்சுக் கூடுகளும் அதன் உடலுட் சென்று, பல்கி அதன் எச்சிற்பை வழியே வாய்க்கு வருகின்றன. பின் அது நோயற்ற ஒருவனைக் கடிக்கும் பொழுது அந்நச்சுக்கூடுகள் அவன் குருதியிற் கலந்து, பல்கி நோயை உண்டாக்குகின்றன. ஒருவன் உடலில் இந் நச்சுக்கூடுகள் குறைந்தது 150,000,00 இருந்தால்தான் அவனுக்கு இந் நோ யுண்டாகும். இவைகளில் ஒவ்வொன்றும் குருதியிலுள்ள ஒவ்வொரு செங்கூட்டையும் பற்றிக்கொண்டு அவைகளைக் கொல்லுவதால் இந்நோயாளியின் குருதி வெளுத்துப்போகிறது. இக் கூடுகளின் ஒவ்வொரு தலைமுறையும் வளர்த்துப் பெருக 2, 3 நாட்களாகின்றமையால் இந்நோயும் 2, 3 நாட்களுக்கு ஒரு முறை வருகிறது. ....

**மருந்து** :—இந்நோய்க்குத் தக்க மருந்து கொயினு ஒன்றே யாம். அதை இவ்வெப்பு வரக்கூடிய பொழுதிற்குச் சற்றுமுன்பு கொடுத்தால் வராது. ஏனெனில் இம்மருந்து இக்கூடுகளைக் குருதியினின்றும் நீக்கிவிடுகிறது. எப்படியெனின் சிலர் இம்மருந்து அந்நச்சுக் கூடுகளைக் கொன்று விடுகின்றது என்று எண்ணுகின்றனர்; சிலர் அக்கூடுகளை எலும்புகள், மண்ணீரல் அல்லது இம்மருந்து சென்றிராத தசைகளுக்கு அனுப்பிவிடுகின்றதென்று எண்ணுகின்றனர். எவ்வாறாயினும் இம்மருந்தால் அம்முறை வரும் வெப்பு நீங்குகிறது. இதனால் நோயாளிதன் உடலை வலுப்படுத்தித் தன் வெண்கூடுகளின் உதவியால் இந்நோய்க் கூடுகளை அறவே ஒழிக்க இயலுகிறது.

**வராமற்றடுக்கும் வழி** :—இந்நோயைப் பரப்புங் கொசுக்கள் இரவிலே தான் மக்களைக் கடிக்கும் இயல்புடையனவாதலின் தூங்கும்பொழுது கொசுவலை கட்டிக் கொள்ளல் நன்று. இக்கொசுக்கள் சாக்கடை, சவதி, அழுக்குநீர் தங்குமிடங்களில் தான் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றனவாதலின் அவைகளை மண்ணிட்டு நிரப்பவேண்டும். இவ்வாறு இயலாவிடின் அவற்றின்மேல் மண்ணெண்ணெய் ஊற்றினால் இம்முட்டைகளும் அவற்றிலிருந்துண்டாம் புழுக்களும் இறந்துவிடும். பாழுங்கிணறுகள், தொட்டிகள் முதலியவற்றைக் கூடுமாயின் இருப்புவலையால் மூடலாம். பெருங்குளங்களிலுள்ள பாசி முதலியவற்றை நீக்கி மீன்களைவிட்டு வளரச்செய்தால் அவை இம்முட்டைகளைத் தின்றுவிடும். ஆதலின் ஒவ்வொரு வீட்டிலும் இவ்வாறு அழுக்கு நீர்கள் தங்காதபடி செய்யவேண்டியது அவ்வீட்டாருடைய முதற்கடமையாகும்.

நச்சுக்கட்டி (Plague):—

அடையாளம் :—சோம்பல், தலைவலி, முதுகுவலி, திமிர், படபடப்பு, தள்ளாடல், உள்ள வேறுபாடு, பார்வைக்குறைவு, நீர்க்கொள்ளல் உண்டாகித் திடீரெனக் காய்ச்சலுண்டாகும் (103 முதல் 107°). பின் ஒன்று முதல் ஐந்து நாளில் கட்டி புறப்படும். இக்கட்டி ஒன்று அல்லது பலவாயிருக்கும்; கழுத்து

அல்லது அக்குளில் அல்லது கவடில் புறப்படும். இதனால் பெரும்பாலும் மிக்க வலியுண்டாகும்; சிலவேளை வலியின்றி யிருப்பினும் இருக்கும். இக்கட்டி ஏழுநாளில் வெடித்துக் குருதி ஒழுக்கை உண்டாக்கும். இதனால் நூற்றிற்கு எழுபது விழுக்காடு சாக்காடுண்டு. இந்நோயில் நான்கு வகையுண்டு. இப்பொழுது கூறியது கட்டியுடன் வருவது (Bubonic Plague); இதுதான் பெரும்பாலார்க்கு வருவது. வேறொருவகை சளி, வெப்புடன் (Pnamonia) வருவது. இதுதப்பாது கொல்லுகிறது.

நோய் முதல்:—இது எலியின் நோயாகும். இதை உண்டாக்கும் நச்சுக்கூடுகள் எலியைக் கொன்றதும் அதன் உடலில் தமக்கு வேண்டிய உணவு கிடைக்காது எலியின் செள் வழியாக மக்களிடம் பரவுகின்றன. இச்செள் ஊர்ந்து வந்து மக்களைக் கடிக்கும்பொழுது இந்நச்சுக் கூடுகளையும் நம் குருதியுள் புகவிடுகின்றது. இதனால் தான் மக்களுக்கு இந்நோய் உண்டாகிறது.

மருந்து:—இதைத் தப்பாது நீக்கும் மருந்தொன்றுமில்லை. நோயாளியைத் தனியிடத்தில் வைத்துப் பணிசெய்து வருவதே தக்க மருந்தாம். இந்நோயைச் சில விலங்குகளுக்கு உண்டாக்கி அதன் ஊனீரை மக்கள் குருதியுட் செலுத்துவதால் நன்மையுண்டாகிறது. கரிப்புளிப்பை நீருடன் கலந்து மிகுந்த அளவு உள்ளுக்கும் சிறு அளவு குருதியுள்ளும் செலுத்துவதாலும் நன்மையுண்டாகிறது. களிமண்ணைக் கட்டியின்மேல் அப்புவதால் நலமடையலாம்.

வராமற்றடுக்கும் வழி:—இது எலி நோயாதலின் எலியைக் கொல்லுதலே மக்களுக்கு வாராமற்றடுக்கும் வழியாம். இதற்கு வீட்டைத் தூயதாயும், உணவுப் பொருள்களைக் கெட்டியாய் மூடி எலி தின்னாமலும் வைத்திருத்தல் மிக நன்று; இதனால் எலி பல்காது. இந்நோயால் எலி செத்துவிழுந்தால் அதைக் குறட்டால் எடுத்து மண்ணெண்ணெயிட்டு விறகுடன்சேர்த்து நன்றாய் எரித்துவிடவேண்டும்; புதைத்துவிடக் கூடாது. ஏனெனில் அதன்மேலுள்ள நச்சுக்கூடுகள்பெருகி அண்டையிலுள்ள கிணறு அல்லது ஊற்றில் ஊறும் நீர் வழியாகச்சென்று

அந்நீரைப் பயன்படுத்துவோரை யெல்லாம் வருத்தும். எலியி லிருந்துவரும் செள் தரை வழியே தான் ஊர்ந்து வருமாதலின் இந்நோய் உலவும் ஊரில் மக்கள் தரையிற்படுக்கலாது; அதிலும் மண் தரையே இச்செள்ளிற்கு மிக விருப்பமாதலின் அங்கு படுத்தல் ஆகவே ஆகாது. இந்நோய்க்குத் தக்கதொரு அம்மை குத்திக்கொள்வதும் தடுக்கும் வழிகளுள் ஒன்ருகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

தொற்றுக் காய்ச்சல் (Influenza):—

அடையாளம்:—மிக்க தலைவலி குளிருடன் காய்ச்சல் வருகிறது. கை கால்களில் வலியுண்டாகிறது. சளி பிடிக்கிறது; கண் சிவந்து போகிறது; மூக்கு வெந்து நீரொழுகுகிறது; கண்ணிலிருந்தும் நீர் ஒழுகுகிறது; தொண்டைக் கம்மல், தும்மல் நெஞ்சுப்பிடிப்பு உண்டாகின்றன; காய்ச்சல் அடித்து ஒன்று முதல் ஐந்து நாளில் மிக்க வேர்வையுடன் நிற்கிறது; நாக்கில் படர்தலும் வெற்றுக் காய்ச்சலால் உண்டாகும் வலுவின்மைக்கு மேல் மிக்க வலுவின்மையும் உண்டாகின்றன.

மருந்து:—நோயாளியைப் படுக்கையிலேயே வைத்து ஓய்வு கொடுக்கவேண்டும். கொயினு காய்ச்சலை நீக்கி வலியைக் குறைக்கும். இது ஒருமுறை வந்தாலும் பின்னும் வரக்கூடியதே. கொடிமுந்திரிப் பழச்சாறு, பால், புளிப்பாயுள்ள எலுமிச்சம்பழம் நார்த்தம்பழச் சாறு இவைகளை உணவாகக் கொடுக்கலாம். அடைச்சோடா (Baking Soda) வையும் உள்ளுக்குக் கொடுக்கலாம்.

பரவாமற்றடுக்கும் வழி:—இந்நச்சுக்கூடு நோயாளியின் மூக்கு வழியாக வரும் நீர், சளியில் மிகுந்திருக்கிறது. இவைகளை எரித்துவிடவேண்டும். இல்லாவிட்டால் நீருடன் கலந்தாவது காய்ந்து காற்றில் பறந்தாவது வந்து மக்களிடத்தில் பரவும். ஆதலின் வெகு கவலையுடன் இவைகளை எரித்தல்வேண்டும்.

கக்குவான் :—

அடையாளம் :—முதலில் சளி பிடித்து மூக்கு ஒழுகும். மூன்று முதல் ஏழுநாளில் கயிறு போன்று வாயாலெடுக்கும். நீண்ட இழுப்புடன் அடிக்கடி இருமலுண்டாகும். இருமலால் வெளிப்படும் சளியுடன் குருதி கலந்திருக்கும். இருமி இருமி மூஞ்சி விங்கிவிடும். இந்நோய் பத்து நாளைக்கு மிகுத்துக் கொண்டேவரும், சிலநாள் அப்படியே யிருக்கும், பின் இரண்டு மூன்று வாரங்களில் குறைந்து வரும். இது குழந்தைகளுக்கே வரும். இதனால் நாக்கில் புண்ணுண்டாகும். சிலவேளை சளி வெப்பால் (Pneuminia) சாக்காடு உண்டாகும். பெரும்பாலும் சாக்காடில்லை; ஆனால் உடல்மிக இளைத்துவாடும்.

மருந்து :—தூயகாற்றிலிருத்தல், வெளியில் வாழ்தல், உடல் முழுதும் வெதுவெதுப்பைக் கொடுக்கக்கூடிய உடையை அணிதல் இந்நோய் நீக்கத்திற்கான உதவிகளாம். இருமல் ஓய்ந்ததும் உணவு கொடுத்தல்வேண்டும். பெல்டோனவும் தக்க மருந்தாம்.

வராமற்றடுக்கும் வழி :—இது எளிதில் பரவுவதாதலின் இந்நோயுடைய குழவிகளுடன் ஏனைய குழவிகளைச் சேர விடக் கூடாது. இந்நோயின் நச்சு நோயாளியால் கக்கப்படுகிற சளியிலேயே யிருப்பதால் அதை எரித்துவிடல்வேண்டும். இது ஒருமுறை வந்தால் பின் வருவதரிது. இதனால் இதற்குத் தக்க அம்மை குத்துவதினாலும் இதை வராமற்றடுத்துக் கொள்ளலாம்.

உடலுருக்கி :—

குறிகள் :—பதினாறு முதல் முப்பதாம் ஆண்டுவரை பெரும் பான்மையாக வருகிறது. இந்நோயுற்றோரின் உடல் குருதிக் குறைவால் வெளுக்கிறது; பசி குறைகிறது; வலிவுங்குறைகிறது. அடிக்கடி இருமல் உண்டாகி உடல் இளைத்துப் போவதால் இதற்கு உடலுருக்கி என்னும் பெயர் வந்தது. இந்நோயால் நுரையீரல் மெதுவாய், கொஞ்சங் கொஞ்சமாய்க் கெட்டு இரண்டு மூன்று ஆண்டில் சாக்காடு உண்டாகிறது; சிலவேளை பல் ஆண்டு களுக்கும் விடாது துன்புறுத்தும்.

**நோய் முதல் :**—இது ஒருவகைக் குச்சிக் கூடுகளால் உண்டாகிறது. இக்கூடுகள் பெரும்பாலும் நாம் இழுக்கும் காற்றின் வழியே நுரையீரலுட்சென்று தங்கி, பல்கி நுரையீரலை அரித்துத் தின்றுவிடுகின்றன. அவ்வாறு தின்னும்பொழுது அங்கு சளியுண்டாகி இக்கூடுகளை மூடுவதுடன் காற்றறைகளையும் அடைத்துவிடுகிறது. இதை நீக்கவே நாம் வருந்தி வருந்தி இருமுகிறோம். இருமித் துப்பும் சளியுடன் இக்கூடுகளில் மிகப் பல வந்து விழுகின்றன.

**வராமற்றடுக்கும் வழி :**— இவ்வாறு துப்பப்படுகிற சளி நன்றாய்க் காய்ந்து தூளானதும் அதிலுள்ள இக்கூடுகள் இறந்துபோகாது காற்றில் உள்ள தூசியுடன் பறக்கின்றன. இக்காற்றை இழுப்போருக்கு இந்நோய் வருகிறதாதலின் நோயாளிகள் சளியைக் கண்டவிடத்தில் துப்பாது வீண்தாளில் அல்லது மரத்தூளில் துப்பி எரித்துவிடவேண்டும். இந்நோய் தக்க ஊட்டமற்றவர்களுக்கும், நலமற்ற சுற்றுப் புறங்களையுடைய வீடுகளில் வாழ்பவர்களுக்கும், வெளிவேலை செய்யாது வீட்டினுட்புறத்தேயிருந்து வேலை செய்பவர்களுக்கும், தூசு மிக்க பட்டினங்களில் வாழ்பவர்களுக்கும், எப்பொழுதும் வண்டி ஓடுவதால் தூசி நிறைந்த தெருக்களில் வாழ்பவர்களுக்கும், பஞ்சு வேலைபோன்ற தூசியுண்டாக்கும் வேலை செய்பவர்களுக்கும் பெரும் பான்மையாக உண்டாவதால் இக்குற்றங்களை நீக்கி வாழ்தல்வேண்டும். சில பசுக்களும் இந்நோயுடையனவாதலின் அவற்றின் பாலைக் குடிப்பவருக்கு இந்நோய் எளிதில் உண்டாகிறது. தூசியுடன் பறந்துவரும் இந்நோய்க் கூடுகள் நல்ல பாலிலும் படிந்து இந்நோயை உண்டாக்குவதால் பாலை எப்பொழுதும் மூடியே வைத்திருக்கவேண்டும். குடியினால் இந்நோய் மிகுகிறது. இந்நோய் தாய் தந்தையர்களுக்கிருப்பின் அவர்களுடைய பிள்ளைகளுக்குப் பிறப்பால் உண்டாவதில்லையேனும் அவர்களுடன் பழகுவதால் பிள்ளைகளுக்கும் உண்டாகிறது.

**மருந்து :**—நல்ல காற்றே இந்நோயை நீக்குவதில் சிறந்த மருந்தாம். இந்நோயுண்டானதும் முற்கூறிய கெட்ட வழிகளில்

எதனாலுண்டாயது என்று ஆராய்ந்து நீக்கினால் இந்நோய் எளிதில் நீங்கிவிடும். இந்நோய் முதிர்ந்துள்ளோரும் தூயகாற்று மிகுந்துள்ள நாட்டுப்புறம், கடற்புறம், மலைப்புறங்களில் வாழ்ந்தால் நன்மையடைவர். இவ்விடங்களில் நாள் முழுவதும் திறந்த வெளிகளில் வாழ்தலே தக்கது. ஏனெனில் எத்தனை சாளரங்களிருப்பினும் அறையிலுள்ள காற்று தூயதன்று. ஆதலின் இந்நோயாளர் வெய்யிலிலும், மழையிலும், பனியிலும் தக்க பாதுகாப்புச் செய்துகொண்டு வெளிப்புறங்களிலேயே வாழ்தல் வேண்டும். திருக்குற்றாலம், மதனப்பள்ளி, பெங்களூர் முதலிய நல்லூர்களில் வாழ்தலுந் தக்கதே. இந்நோயாளிகள் உடலின் வலுக்குறைந்து போகாதபடி மீன் ஈரல் எண்ணெய், தீ முறுகல் கலப்புள்ள தக்க பொருள்களை உண்பதால் வலுவேற்றிக் கொள்ளல்வேண்டும். இளவெய்யில் உடலில் படுவதால் இந்நோய் குறைகிறது.

(தொடரும்.)

---

உ

## 'வந்தெதிரே தொழுதானை வணங்கினன்'
## என்னும்
## கம்பராமாயணப் பாட்டின் உரை.

---

திருவாளர் ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

---

'வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கு மவனும்அவ னடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினன் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்'

இது அயோத்தியா காண்டத்தில் குகப்படலத்திலே உள்ளது. திருப்பாற்கடலிலே பாம்பணையில் அறிதுயிலமரும் எம்பெருமான், ஆழிசூழ் இலங்கை மன்னன் இராவணன் முதலியோரை வேருடன் களைந்து விண்ணவரையும் முனிவரையும் புரப்பான், அயோத்திமாநகர்க் கிறையாகிய தசரதன் செய்த அருந்தவப் பயனால், கோப்பெருந்தேவி கௌசலையின் திருவயிற்றில் தோன்றி, உலகத்தையெல்லாம் மகிழ்விப்பவன் என்று பொருள்படும் இராமன் என்னும் திருப்பெயர் புனைந்து, மற்றைத் தேவியாகிய கைகேசியால் தோன்றிய தம்பி பரதனோடும், சுமித்திரையால் தோன்றிய தம்பிகள் இலக்குமணன் சத்துருக்கன் என்பாரோடும் நான்மறைகளைப்போல் வளருங் காலத்தே, நெய்கின்ற குழலும் இழையும்போலத் தன்னைவிட்டு நொடிப்பொழுதும் பிரியாத தம்பி இலக்குவனோடு சென்று, எண்ணுதற்கும் ஆக்குதற்கும் அரிதாகிய, விசுவாமித்திர முனிவன் விண்ணவர்க்கு ஆக்கிய வேள்வியைக் கண்ணிமைக் காக்கின்ற இமையைப்போல இரண்டு மூன்று நாள் காத்து, தாடகையைக் கொன்று, அகலிகையின் சாபத்தைத் திருவடித்துகளால் தீர்த்து, மிதிலை நகரம் சென்று முக்கட்பெருமான் பெருவில்லை வளைத்து, கற்பினுக்கணியாகிய சீதையை மணம் புரிந்து அயோத்தி மீண்டு வாழு நாளிலே, சிற்றன்னை கைகேசியின் சூழ்ச்சியால், தன் தாதையால் அளிக்கப் பட்ட நாட்டரசைத் தம்பி பரதனுக்கீந்து, மணிமுடி துறந்து சடைமுடி தரித்து, தேவி சீதையோடும் தம்பி இலக்குவனோடும் திருவரையதனில் பொற்கலை துறந்து வற்கலை தரித்து நாட்டரசு துறந்து வீட்டரசை நோக்கும் முனிவர் வாழும் காட்டரசை ஆள்வான் புகுந்து கங்கைக்கரை மேவி, தன்னை வழிபட்ட வேடுவர்க்கிறையாகிய குகன் என்னும் பெரிய கூற்றினொற்ற லானைத் தம்பியென்று கொண்டாடிக் கங்கையைக் கடந்து, சித்திரகூடம் சென்று தவத்தை மேற்கொண்டொழுகா நின்றானாக, இப்பால் பரதன் தன் அன்னையையும் அரசையும் வெறுத்து, தம்பி சத்துருக்கனோடும் மரவுரி தரித்து, இராமனை மீட்டுக் கொணர்வான் கருதிப் படையெழுப்பிக் காடு புகுந்து, கங்கையின் வடகரையை அடைந்து நின்றவனை, தென் கரையிலே நின்ற குகன், இராமனுக்குத் தீங்கிழைக்க வந்தான்போலு

மென்று அயிர்த்து, பின்பு அவன் மாவுரி தரித்திருத்தலேயும் இராமன் சென்ற திசை நோக்கித் தொழுத கையனுயிருத்தலேயும் உற்றுநோக்கி, அவன் நிலைமை தெளிந்தும் தெளியாதவனுய்க் கரையைக் கடக்கும்படித் தன் படைகளுக்கு ஏவி, தான் தனியனுய் ஒரு நாவாய் 'ஊர்ந்து' சென்று வடகரை மேவிப் பரதனேடு கூடும்போது நடந்த செய்திகளே, இப்பாட்டு எடுத்துரைக்கின்றது.

இப் பாட்டுக்குப் பலரும் பலவாருகப் பொருள் கூறலுற்றனர். அவ்வுரைகளுள் இன்னதே கம்பர் கருத்தை ஒட்டியதென்று துணிதற்கரிதாயிற்று. ஆதலால் அதனைத் துணித்துரைத்தல் வேண்டுமென்று புலவர் ஒருவர் விரும்பியவாறு இவ்வுரை எழுதலாயிற்று. இப்பாட்டு கம்பராமாயணம் என்னும் பெருங் கடலிலே உள்ள சுழற்பாட்டுக்களிலே ஒன்றென்பர். சுழற்பாட்டெனினும் மயக்கப்பாட்டெனினும் ஒக்கும். அற்றேல் இது மயங்க வைத்தல் என்னும் குற்றத்தின்பாற் படாதோ வெனின், படாது; மாணுக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி 'உய்த்துணரவைத்தல்' என்னும் உத்தியின்பாற் படுமென்க.

எற்படு நாகர்தம் இருக்கை ஈதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினும் கீழுறக்
கற்பக மனையஅக் கவிஞர் காட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது

என்று கம்பர் பம்பையைப் புனைந்துரைத்தவாற்ருல், அவர் பாட்டுப் பொருளாழ்ந்திருப்பினும் தெளிவுடையதே என்பது போதரும். அவ்வாருகவும் மயங்குவதற்குக் காரணம் அப்பாட்டின் சொற்களுக்கும் சொற்றெடர்களுக்கும் உள்ளவாறு பொருளறியா வாற்றுமையேயாம். 'வந்தெதிரே தொழுதானை வணங்கினன்' என்னும் பாட்டிலே கம்பர் காட்டிய கவித்திறன் என்னவென்றால், குகனையும் பரதனையும் வெளிப்படையாக உணர்த்தும் சொற்களை வழங்காமல், அவ்விருவரையும் குறிப்பால் உணர்த்தும் அடையொடு தொடர்ந்த சொற்களை வைத்ததும், வழிபாட்டு முறைமை வழக்குச் சொற்களை வைத்ததுமேயாம். 'மத்தியதரைக் கடல்' என்பதிலே கப்பல் ஒட்டுகிறவன் 'சில்லா'

என்னும் நீர்க்கீழ் மலைக்கும் 'காரிபொடிசு' என்னும் சுழலுக்கும் இடையே வழியறிந்து கப்பலைச் செலுத்தாவிட்டால், அது ஒன்று மலையில் தாக்கியாவது உடையும்; அன்றேல் சுழலிலே அமிழ்ந்துவிடும். அவ்வாறே பரதனைக் குறிக்கும் அடைமொழிகளைக் குகனைக் குறிப்பனவெனக் கொள்வதனாலும் குகனைக் குறிக்கும் மொழிகளைப் பரதனைக் குறிப்பன எனக் கொள்வதனாலும் இடருண்டாவதன்றிப் பொருளறிந்து செல்லின் இடர்ப்பாடில்லையாம்.

இப்பாட்டிலே 'தொழுதான்' 'வணங்கினன்' 'அடிவீழ்ந்தான்' 'தழுவினன்' என்று நான்கு வினைமுற்றுக்கள் அமைந்துள்ளன. அவற்றுள் முன்னது வினையாலணையும் பெயராய் நின்றது. வணங்கல் வினை 'வணங்குமவனும்' என மறித்தும் வந்தது. தொழுதல், வணங்குதல், அடிவீழ்தல் என்பன, வழிபாட்டு முறைமையில் வெவ்வேறு வகையைக் குறிக்கும் சொற்கள். வழிபாட்டு முறைமையில் வேறுபாடு கருத வேண்டாமெனின், தொழுதல், வணங்குதல், அடிவீழ்தல் என்பனவற்றுள் யாதேனும் ஒன்றனையே வைத்துத்தொழுதானைத் தொழுதனன் என்றுவது வணங்கினனை வணங்கினன் என்றுவது அடிவீழ்ந்தான் அவனடி வீழ்ந்தான் என்றுவது கூறியிருப்பர். அவ்வாறன்றி வெவ்வேறு சொற்களை வழங்கியிருத்தலால் கம்பர் அவற்றை ஓர் சிறந்த கருத்தில்லாமல் அமைத்திருக்கமாட்டார்.

தொழுதல் என்பது கையின் வினை. தொழுதல் கைகூப்புதல் கும்பிடுதல் என்பன ஒரு பொருட்கிளவி. 'கைகள் கூப்பித் தொழீஇர்' 'கைதொழூஉப் பரவி', 'தொழுதகை யுள்ளும் படையொடுங்கும்' என்பதனாலும் தொழுதல் கையின் வினையாதல் தெளிக.

வணங்குதல் என்பது வளைதல் என்னும் பொருட்டு. ஈண்டுத் தலையின் வினை. வணங்குதல் இறைஞ்சுதல் என்பன ஒருபொருட்கிளவி. 'தலையே நீ வணங்காய்', 'தாளை வணங்காத்தலை' 'கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே' என்பதனாலும்

இப்பொருள் துணிக. எனவே, ஒருவன் கடவுண்மாட்டும் பெரியோர்மாட்டும், நின்ற நிலையிலே செய்யும் வழிபாடு இரண்டு வகையாம் என்பதும், அவற்றுள் தொழுதல் என்பது, தலை வணங்குதலின்றிச் செய்யும் வழிபாட்டு முறையாமென்பதும், வணங்குதல் என்பது கை கூப்புதலோடு தலையும் வணங்கிச் செய்யும் வழிபாடென்பதும் உணர்ந்து கொள்ளப்படும்.

இனி அடிவீழ்தல் என்பது கடவுள் அடியின்கண்ணும் பெரியோர் அடியின்கண்ணும் வீழ்ந்து தலையால் வணங்கியும் கை கூப்பியும் செய்யும் வழிபாட்டைக் குறிக்கும். இது உடலின் வினை. அடிவீழ்தல், அடிபணிதல், அடிதாழ்தல் என்பன ஒரு பொருட்கிளவி. திருவள்ளுவர் வாக்கில் எழுந்த 'அடிசார்தல்' 'தாளை வணங்கல்' என்பதும் அது. 'கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி' என்பதனாலும் இப்பொருள் துணிக. ஆகவே இவ்வழிபாடு முன்னை யிரண்டுவகையினும் மிகப்பணிவைப் புலப் படுத்தும் வழிபாடாதல் அறிக.

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' (குறள்)
'தொழுதெழுவார் வினைவள நீறெழ' (கோவையார்)
என்புழித் தொழுதெழுதல் என்பதும் அது.

இம் மூன்றுவகை வழிபாடும் காய வழிபாடே ஆயினும் அவற்றுள் வேறுபாடு நோக்கி வேறுவேறாகச் சொல்லப்பட்டன. மனவழிபாடும் வாக்கின் வழிபாடும், காய வழிபாட்டின் வேறுவன.

ஆகவே, காய வழிபாடு மூன்றனுள், தொழுதல் என்பது உயர்வு தாழ்வு கருதாமல் ஒத்த பெருமையுடையாராய் மதித்துச் செய்யும் வழிபாடாம். அடி வீழ்தல் என்பது உயர்ந்தோர்மாட்டு மிகத் தாழ்ந்தோன் செய்யும் வழிபாடு. வணங்கல் என்பது அவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாய் உயர்ந்தோன் மாட்டுச் சிறிது தாழ்ந்தோன் செய்யும் வழிபாடாம்.

இனித் தழுவுதல் என்பது தோள்களால் பிறர் மார்பை அணைத்தல். இது பெரியோராயுள்ளவர் தம்மை அடிவணங்கிய

அன்பர்க்குச் செய்யும் சிறப்புக்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது. தழுவுதல், அணைதல், புல்லல் என்பன ஒருபொருட் கிளவி. ஆலிங்கனம் என்னும் வடமொழியும் அப்பொருட்டு.

தாழ்ந்தோரேயன்றி, ஒத்த பெருமையுடையோரும், ஒரோவழி அன்பின் முதிர்ச்சியால் இவ்வரம்பு கடந்து, ஒருவரை ஒருவர் வணங்குதலும் அடி பணிதலும் உண்டு; தழுவுதலும் உண்டு.

தொழுதல், வணங்கல், அடி வீழ்தல், தழுவுதல் என்னும் இச்சொற்களுக்கு மேற்கூறியதே பொருளாமாறு,

'தோடார் பூனைகோதை சுநந்தைசேர்ந்து தொழுதாளைப்
பீடார் பெருஞ்சிறுவற் பயந்தீர்வம்மி னெனப்புல்லி
நாடார் புகழாளை நாணமொழிகள் பலகூறிக்
கோடாக் குருகுலத்தை விளக்கிட்டாளை விளக்கினள்.'

'மறையொன் றுரைப்பனபோல் மலர்ந்துநீண்டு செவிவாய்வைத்
துறைகின்ற ஒடரிக்கண் உருவக்கொம்பின் எண்மரும்
இறைவி அடிபணிய எடுத்துப்புல்லி உலகாளும்
சிறுவர்ப் பயந்திறைவீற் றெளிவிரென்றாள் திருவன்னள்.'

என்னும் சிந்தாமணி முத்தியிலம்பகத்துச் செய்யுள்களாலும், அவற்றிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையானும் தெளிக. சிவகன்தாய் கோப்பெருந்தேவி விசயை என்பாளை அவனை வளர்த்த தாயாகிய சுநந்தை கையால் தொழுதாளாக, அவளை விசயை தழுவிக்கொண்டாள். அச்சிவகன் தேவிமார்கள் எண்மரும் அடிபணிந்தார்கள். அவர்களையும் விசயை தழுவிக் கொண்டாள் என்பது காண்க.

மலர் உறை அந்தணனும் ஒருகால் வேலன் திருமுன்பு எய்தியபோது, அடிபணிந்திடாமல் கையால்மட்டும் தொழுதான், அது குற்றமென்று அவ்வந்தணனை வேலன் சிறையில் வைத்தான் என்று கச்சியப்பரும் அயனைச் சிறைவைத்த படலத்தில் கூறினர்.

அங்கே,

'பங்கயாச னத்திறேன் பணிந்திடாது தொழுதலும்' என்றது காண்க.

இவற்றாலும் தொழுதல் பணிதல் என்பவற்றின் பொருள் வேறுபாடு நன்குணர்ந்து கொள்ளலாம்.

இனி, திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் பெருமையால் ஒத்தவரே ஆயினும், அன்பின் முதிர்ச்சியால் திருநாவுக்கரையரை அப்பரே என்று அழைத்தார். அவரும் 'அடியேன் என்றார். மற்றும் ஒருக்கால் திருஞான சம்பந்தர்,

'அப்பர்தா மெங்குற்றார் இப்பொழுதென் றருள்செய்யச்
செப்பரிய புகழ்த்திருநா வுக்கரசர் செப்புவார்
ஒப்பரிய தவம்செய்தேன் ஆதலினால் உம்மடிகள்
இப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன் யானென்றார்.'

'அவ்வார்த்தை கேட்டருளி அவனிமேல் விழ்ந்தருளி
இவ்வாறு செய்தருளிற் றென்னுமென் றிறைஞ்சுதலும்
செவ்வாறு மொழிநாவர் திருஞான சம்பந்தர்க்
கெவ்வாறு செயத்தகுவ தென்றெதிரே இறைஞ்சினார்.'

சேரமான் பெருமாளும் சுந்தரரும் ஒத்த பெருமையை உடையவரே யாவர். அவர் ஒருவரையொருவர் பணிந்ததும் தழுவியதும்

'முன்பு பணிந்த பெருமானைத் தாமும்பணிந்து முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந் தவரும் ஆர்வத் தொடுதழுவ
இன்ப வெள்ளத் திடைநின்றும் ஏற மாட்டா தலைவர்போல்
என்பும் உருகி உயிரொன்றி உடம்பும் ஒன்று மெனஇசைந்தார்.'

என்னும் திருப்பாடலால் அறியலாம்.

இனி, பெருமையிற் சிறந்தோன் தாழ்ந்தவனை வணங்குதலை சேரமான்பெருமாளிடத்தே கண்டாம். ஓர் வண்ணான் உவர்மண் சுமந்து சென்றவன், மழையால் அது கரைந்து மேனி வெளுத் திருக்கக்கண்ட சேரமான்பெருமாள், திருநீற்றுத் தவப்படிவ மெனக்கொண்டு, யானைமேல் தவிசினின்றும் இறங்கிக் கையால் தொழுதார். வண்ணான் சிந்தைகலங்கி தலையால் வணங்கி,

அடியேனை யாரென்று நினைத்தீர், அடியேன் அடி வண்ணான் என்றான். சேரமான் பெருமாளும் அடியேன் அடிச்சேரன் திருநீற்று வேடம் நினைப்பித்தீர் என்றார். இதனை

' சேரர் பெருமான் தொழக்கண்டு சிந்தை கலங்கி முன்வணங்கி
யாரென் றடியே னைக்கொண்ட தடியேன் அடிவண் ணானென்னச்
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியே னென்று திருநீற்றின்
வார வேடம் நினைப்பித்தீர் வருந்தா தேகு மெனமொழிந்தார்.'

என்னும் திருப்பாடலால் அறிக.

இப்பெரியாரெல்லாம் கடவுளிடத்தும் அடியாரிடத்தும் கரைகடந்த அன்பினை உடையவர். ' கோவணம் விபூதி சாதனம் இவற்றைக் கண்டால் தொழுதெழும் தகையினர்.' ' குறியின் நான்கு குலத்தினராயினும், நெறியின் அக்குலம் நீங்கினராயினும், அறிவு சங்கரற்கு அன்ப ரெனப்பெறின், செறிவுறப் பணித் தேத்திய செய்கையார்.' இங்ஙனம் நம்பன் அடியார்கள் உயர்வு தாழ்வு கருதாமல், ஒருவரை ஒருவர் வந்தனை வழிபாடுகள் செய்த முறையைத் திருத்தொண்டர் புராணம் இயற்றிய சேக்கிழார் அடிகள் உலகுக்கு விளங்கக்காட்டி, அப்பெரியாரெல்லாம் நம்பனிடத்து அன்பே உருவமாகக் காட்டினர். இதனால் அவர் ' பத்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர் ' என்று சிறப்பிக்கப்பட்டார்.

மேலும் அவர் பாடிய எறிபத்த நாயனார் புராணத்தில், நோக்க வேண்டுவதொன்று உண்டு. கருவூரில் சிவகாமியாண்டார் என்னும் அடியார் இறைவனுக்குச் சாத்தக்கொண்டுவந்த பூக்கூடையைப் பறித்தெறிந்தது சோழனுடைய பட்டத்து யானை. அதுபற்றி எறிபத்த நாயனார் தம் கையிலிருந்த எறியைக்கொண்டு யானையை வெட்டினார். இதனைச் சோழர்பெருமான் கேள்வியுற்று வந்து சிவப்பழமாக நின்ற எறிபத்தரைக் கண்டான். சிவனடியார் காரணமில்லாமல் யானையைக் கொல்லாரென்று உட்கொண்டு தன் படையாளரைப் பின்னே செலுத்தித் தான் ஊர்ந்துவந்த களிற்றினின்றும் இறங்கி, எறிபத்தரைக் கையால் தொழுதான். பின்பு, நிகழ்ந்த செய்தியை எறிபத்தர் சொல்லக்

கேட்டு, அவர் அடிபணிந்தெழுந்தான். எழுந்தவன் அவ்யானை செய்த தீங்குக்குத் தானே பொறுப்பாளியாதலால், தன்னையும் கொல்லவேண்டுமென்று, தன் வாளை எறிபத்தர் கையில் தந்தான். எறிபத்தர், இச்சோழர்பெருமான் அன்பு இருந்தபடி என்னே யென்று, அவ்வாளைக்கொண்டு தன் கழுத்தைத் துணிக்க முயன்றார். அப்பொழுது இறைவன் தடுத்து எல்லோர்க்கும் காட்சியளித்தார்.

ஈண்டுச் சோழன், முன்னாகக் கையாற்றொழுதல் மட்டும் செய்தான். பின்னர் அடிபணிந்தெழுந்தான். இதற்குக் காரணம் என்னவென்று நோக்கின், முன்னம் அவன் சிறிதே ஐயமுற்றவனாயிருந்தான். அந்த நிலைமையில் தொழுதலைமட்டும் செய்தான். ஐயம் நீங்கித் தெளிந்த பின் அடிபணிந்தெழுந்தான் என்பது புலப்படும். இதனை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் 'வந்தெதிரே தொழுதான்' என்னும் பாட்டுக்குப் பொருள் காணுதல் எளிதாம். அன்றியும், பெரியபுராணம் என்பது பெரியார்புராணம் ஆதலால், சேக்கிழார் அடிகளுக்கு அன்பின் சுவையை விரித்துப் பாடுதற்கு அது இடந்தந்தது. இராமாயணமோ அடியார் பத்தியைப்பற்றிக் கூறுவதற்கு இடமில்லாமையால் பெரும் பான்மையும் வீரச்சுவையும், இன்பச்சுவையும் சோகச் சுவையுமே கூறுவதாயிற்று. முதனூல் செய்த வான்மீகர் என்பார்க்கோ பத்திச்சுவையே தெரியாது போலுமென்று நினைக்க இடனுண்டு. கம்பரோ தமது தமிழ் இராமாயணத்தில் அக்குறைபாடு இருக்கலாகாதென்று கருதினர் கடவுளிடத்துப் பத்தியை விராதன், கவந்தன், சரபங்கர், கருடன் முதலியோர் துதிகளிலே வைத்துப் புகட்டினர். அடியார் பத்தியைப் புகட்டுதற்குக் குகனை எடுத்துக் கொண்டார். சேக்கிழாருக்குக் கண்ணப்பர் கிடைத்தாற்போலக் கம்பருக்குக் குகன் கிடைத்தான். அக்குகன் மூலமாகப் பத்திச்சுவை சொட்டும்படி பாடிய கவிதான் 'வந்தெதிரே தொழுதானை வணங்கினன்' என்பது.

இனி இப்பாட்டிற்குப் பொருள் காண்பாம். இப்பாட்டில் தொழுதல், வணங்கல், அடிவீழ்தல், தழுவல் என்னும் நான்கு வினைகள் நிகழ்ச்சியுற்றன. ஆகவே தொழுதவன் யார்?

வணங்கினவன் யார்? அடிவீழ்ந்தான் யார்? தழுவினன் யார்? என்பதை முன்னே துணிந்துகொள்ளவேண்டும். அதற்கு அடுத்த பாட்டில் 'தழுவின புளினர் வேந்தன்' என்று வந்திருப்பது ஓர் இடர்ப்பாடாக உள்ளது. தழுவினவன் புளினர் வேந்தன் ஆகிய குகனென்று கொண்டால், 'தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்' என்பது குகனைக் குறித்ததென்று கொள்ளல் வேண்டும். அவ்வாறு கொண்டால் அடிவீழ்ந்தவன் பரதன் எனல் வேண்டும். பத்தி மேலீட்டால் பரதன் குகனடியில் வீழ்ந்தான் எனினும் குற்றமில்லை. ஆயினும், அது, மேலே, 'கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழும் உயிர்ப்பனாகி, மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்' என்பதனால், முன்னே விழுந்தவனும் குகனே என்பது பெறப்படுவதனால் அப்பொருளுக்கு முரணுகின்றது. ஆதலால் அடிவீழ்ந்தான் குகனென்றே ஒருதலையாகக் கொள்ளல்வேண்டும். அடிவீழ்ந்தான் குகனாகவே, தழுவினவன் பரதன்ஆம். ஆகவே, 'தழுவின புளினர் வேந்தன்' என்பதில் 'தழுவின' என்பதற்குத் 'தழுவப் பட்ட' என்று பொருள் கொள்ளல் வேண்டும். 'இல்வாழ்வான் என்பான்' 'என்னும்' குறளில் என்பான் என்பதற்கு எனப்படுவா னென்று பொருள் கொண்டாற்போல. இது 'செயப்படு பொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே' என்னும் விதிபற்றி வந்தது.

'வந்தெதிரே தொழுதானை' என்பதிலே 'வந்து' என்னும் செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம் 'தொழுதானை' என்பதில் தொழுதல் என்னும் தன்வினை கொண்டு முடிந்ததாகும். வருதல் வினைக்குக் கருத்தா, முன்பாட்டில் 'ஒரு தனியேதான் வந்தான்' என்று குறிக்கப்பட்ட குகனே யாதலால், இங்கே தொழுதான் என்றவனும் குகனே என்பதும் ஒருதலை. வந்து எதிரே நின்று தொழுதவன் குகன் என்பது முடியவே, வணங்கினவன் பரதனென்பதும் முடிந்தது. முடியவே, ஒரு தனியே நாவாயில் வந்த குகன் பரதனெதிரே நின்று தொழுதான். தொழுத குகனைப் பரதன் வணங்கினன், வணங்கின பரதன் அடியில் குகன் வீழ்ந்தான், வீழ்ந்த குகனைப் பரதன் தழுவினன் என்பது இப்பாட்டின் செம்பொருளாகக் கொள்க.

அங்ஙனமாயின், குகனும் பாதனும் ஒருவரை ஒருவர் தொழுதார் என்றுவது . வணங்கினுரென்றுவது கூறுதலோடு அமையாமல் இத்தனை சுற்றுச் சுற்றுவதேன் என்னின், குகன் இப்போது எதிபத்தரை அடைந்த சோழன் என்ன நிலையில் இருந்தானே அன்ன நிலையில் இருக்கின்றுன். பாதன் படையோடும் வந்தமையால் இராமன்மேல் பகைகொண்டு வந்தான்போலும் என்று முந்துற எண்ணினன். பின்னர் பாதன் தவவேடம் பூண்டிருத்தலை நோக்கினன். ஆயினும் அரசாட்சியின் முறைமையானது பாதனை இராமனுக்குப் பகைவனல்லன் என்று துணிதற்கு அப்போது இடனுண்டாக்கவில்லை. ஒருகால் பாதனேடு போர் புரியும்படி நேரினும் நேருமென்று மதித்து, தன் படைகளை அணிவகுத்து நிறுத்திவிட்டுப் பாதனைக் காணச் சென்றுன். எனவே இறுமாப்போடே சென்றுன் ஆதலால், பாதன் இராமனுக்குத் தம்பியென்பதொன்று, இப்போது அரசனுயிருப்பதொன்று, இவற்றை மனத்தில்கொண்டு, அவனைக்குகன் நின்ற நிலையில் கையால் தொழுதலைமட்டும் செய்தான். பாதனே, குகன் இராமனுல் தம்பியென்று கொண்டாடப் பட்டதைக் கொண்டும், இராமனுக்குத் தொண்டு புரிந்ததைக் கொண்டும், அவன் அன்பில் தன்னினும் சிறந்தவன் என்றும் தான் தாழ்ந்தவனென்றும் மதித்து, தலை வணங்கிக் குகனைத் தொழுதான். பாதன் தலைவணங்கித் தொழவே, அவனது புறத்துத் துறவொழுக்கத்தினும் அகத்துத் துறவொழுக்கம் மிக அழுத்தமானதென்றும், அவ்வொழுக்கம் இராமனது ஒழுக்கத்தினும் மிகக் கொண்டாடப் படுவதென்றும், தன்னினும் மேலான் அன்புடையவனென்றும் புலப்பட்டதனுல், குகனுக்கு அச்சமும் நாணமும் உண்டாயின. உண்டாகவே, குகன் பாதனுடைய அடியில் வீழ்ந்து தொழுதான். பாதன் இடமிருந்தால் குகனடியில் வீழ்ந்தாலும் வீழ்வன். இடமில்லையாகவே, குகனைத் தன் தோள்களால் தழுவுதலையன்றி வேறு செயல்வகை அறியாதுயினன்.

(இதன் தொடர்ச்சி இவ்விதழிலே பக்கம் 145-ல் உள்ளது.)

உ

# சிலப்பதிகார நாடகப்பகுதி.

## காட்சி. 1.

இடம்—மாதரி இல்லம்.

உரியோர்—மாதரி, ஐயை, ஆய்ச்சியர் சிலர், கோவலன், கண்ணகி.

மாதரி :—அம்மா! கண்ணகி! கவுந்தியடிகளின் பொருளால் பெற்ற என் செல்வ மகன் கோவலனும், என் அருமை மருகியாகிய நீயும், இவ்வெளிய குடிலில் ஒரு குறையுமின்றி யிருக்கலாம். இக்குடில், உங்களைப்போன்று வரும் விருந்தினர்கட்கே கட்டப்பெற்றது. சமைப்பதற்குவேண்டும் கலங்கள், பொருள்கள் யாவும் உள்ளே யிருக்கின்றன. இதோ, நிற்கும் என் மகள் ஐயையும் அவள் தோழிகளாகிய இவர்களும் உனக்கு அடித் தோழியர்களென ஏவல் புரிவார்கள். ஐயை! அசோதை! பின்னை! இவர்கட்கு வேண்டுவனவெல்லாம் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஐயை :—அம்மா! எல்லாம் முன்னரே வந்துவிட்டன. மஞ்சனம் ஆடிச் சமைத்தற்குத் தொடங்கலாம்.

அசோதை :—அம்மா! காய் கறிகள் எல்லாம் கொண்டு வந்து வைத்து விட்டேன்.

மாதரி :—அப்படியா! என்னென்ன கொண்டு வந்துளாய்?

அசோதை :—இதோ பலாக்காய், வெள்ளரிக்காய், கொம்மட்டி மாதுளங்காய், மாங்காய், வாழைக்காய், முப்பழங்கள், இலை.

பின்னை :—தாயே! நான் பால், தயிர், வெண்ணெய், நெய் யெல்லாம் கொண்டு வந்து வைத்துவிட்டேன்.

மாதரி :—நல்லது, கண்ணகி! அதோ அவ்வடுக்குகளில் சமையற்குவேண்டும் அரிசி, உப்பு, புளி முதலியவைகளெல்லாம் இருக்கும். இன்னும் வேண்டுவன உளவேல் இவர்களிடம் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளுதி. அரண்மனையில் இன்று என் செய்ம்முறை; நான் மாலையில் வந்து காண்பேன்.

கண்ணகி :—நல்லது, தாயே போய் வருக. எனது காத்தூண் மாதர்கள் இங்கிருக்க எனக்கு என்ன குறை? (மாதரி போதல்).

ஐயை. அண்ணியாரே! நாம் உட்சென்று சமையல் செய்யலாமே!

கண்ணகி :—ஆம், போகலாம். (போதல்)

(கோவலன் அவ்வில்லினைக்கண்டு புகழ்தல்).

கோவலன்.—ஆ! இது என்ன அழகான சிற்றில்! என்றோ ஒருநாள் இருநாள் தங்கிப்போகும் விருந்தினர்க்கென்றே அமைத்த இச்சிற்றில்லின் அழகே இதுவாயின், இவ்வாயர் பெருவாழ்க்கைப் பேரில்லங்களின் வளங்களை என்னென்று கூறுவது! என்ன அழகிய கட்டுவேலிகள்! அழகுபெற விட்ட குளிர்ந்த காவணம்! பைம்பொன் பூசப்பட்டதோ என ஐயுறும் செம்மண்பூச்சு! இவர்கள் பெருவாழ்வினைக் குறித்தன்றோ, நேற்று, நம் கவுந்தியடிகள், ஆயர், பற்பல பசுக்களையுடையர்; அவைகளைக்காத்து, புலத்தலைப் புல்லார்த்தி அலைத்தலை நீரூட்டுவர்; அவற்றின்பாலில் கன்றருந்தி மிக்க தனை உலகிற்கெல்லாம் அளிக்கும் பெருவாழ்க்கையர்—என்றெல்லாம் புகழ்ந்தனர். இதனாலன்றோ, இவர்கள் 'இரும் பேருவகையின் இடைக்குலம்' என்றெல்லாம் புகழப்படுவராயினர்.

(கண்ணகி ஆய்ச்சியருடன் உணவு கொண்டு வரல், ஆய்ச்சியர் வைத்துவிட்டகலல்).

கோவலன் :—ஓ! அதற்குள் சமையல் ஆகிவிட்டதா? திருமுகம் வெயர்த்துளதே! செங்கண் சிவந்தனவே! ஆ! மெல்விரல் சிவந்தனவே! உன் சமையற் றிறங்களை நான் கண்டவன் றானே! புதுமை ஒன்றுமில்லையே.!

கண்ணகி:—என் நாத்தூண் மாதர்கள் எனக்கு உதவி செய்தனர்; இவ்வளவுதூரம் நடந்ததற்கு அவர்கள் உதவியே காரணம். நேரம் ஆகின்றது. (கால் கழுவித் துடைத்துத் தவிசிட்டு இலை போடல்.)

கோவலன்:—ஆ! என்ன அழகிய தவிசு! 'தாலப்புல்லின் வால்வெண் டோட்டுக்—கைவன் மகடூஉ கவின்பெறப் புனைந்த—செய்வினைத் தவிசு!'. ஓ! ஈனு வாழையின் இளங் குருத்தோ!.

கண்ணகி:—(படைத்து வணங்கி) அமுது செய்தருள்க.

ஐயை:—(ஓரத்தில் வந்து நின்று) தங்காய், பின்னை! இச்செல்வ மக்களின்வருகையால் நம்ஆயர்பாடி பெருவாழ்வுற்றதென்ன லாம். பண்டு, அந்த வடமதுரையில் நம்குலத்தே வந்து வாழ்வித்த அத்தூமணி வண்ணனே, இன்று இம்மதுரையில் இவ்வாயர்பாடியில் வந்தனன் என என்மனம் மகிழ்கின்றது. நமது அருமை உயிர்த்தோழியாகிய இக்கண்ணகியே, அக் கண்ணன் துணைவியாகிய பின்னைப் பிராட்டி என எண்ணி என் மனம் களிப்பெய்துகின்றது.

பின்னை:—ஆம் அக்கா! இவர்கட்கு இங்கு ஒரு குறைவுமில் லாமல் நாம் பார்த்துக்கொள்ளல்வேண்டும். இன்று மாலை யில், ஒரு திங்களுக்கு வேண்டிய பொருள்களை நாம் பார்த்து வைத்துவிடல்வேண்டும். இவர்கள் எவ்வளவுகாலம் இங்குத் தங்குவார்களோ? ஏன் அக்கா! ஒரு சமயம் விரைவில் போய்விடுவார்களோ? (இதற்குள் கோவலன் உண்டு வெளிவரல்—இவர்கள் மறைதல்).

கோவலன்:—(கண்ணகி வெற்றிலைதர, அதனைப் பெற்று அருகு சென்று) கண்ணகி! நீ. இன்று சமைத்திருந்த உணவு, யான் என்றும் அறியா இன்சுவையுடையதாக விருந்தது. அத்தகைய இனிய உணவை உண்ணுந்தோறும் பெரு மகிழ்வுறவேண்டியவனாக, கண்ணே, கண்ணகி! என் மனம் என்னையோ, மிகு துயரத்தையே அடைந்தது, அடை கின்றது. (துயரல்)

கண்ணகி :—காதல! கடந்தவைகளை எண்ணி எண்ணிக் கலங்குவதாற் பயனென்னை? 'இடுக்கண் வந்துற்றகாலை எரிகின்ற விளக்குப்போல நடுக்க மொன்றுனுமின்றி' நக வேண்டுமென்பது நீங்கள் கூறும் பொன்னுரை யன்றோ? நாம் துயர்க்கடலில் மூழ்கியிருப்பதுபற்றிக், கவன்று கவன்று, அக்கடலில் இன்னும் ஆழ்ந்துகொண்டிருப்பதினும், நமக்கு அருமையாகக் கிடைத்த நம் தாயர் மாதரியுடன், நம் தங்கையர் ஐயை, பின்னை முதலியோருடன் அளவளாவி, நம் காரியத்திற் புகுந்து, துயரினை மாற்றுவது, நலமன்றோ! காதல! என்ன மிகத் துயருறுகின்றீர்கள்.

கோவலன் :—

கண்மணி யனைய கண்ணகி! அந்தக்
கல்லத ரத்தம் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ! மடந்தை நின் மெல்லடி!

கண்ணகி, இன்னும் நின் காற்கொப்புளங்கள் மாறவில்லையே.

கண்ணகி! அந்தோ! நம் தாய்தந்தையர்—

வெம்முனை யருஞ்சுரம் போந்ததற் கிரங்கி
எம்முது குரவர் என்னுற் றனரோ!

கண்ணகி!

மாயங் கொல்லோ! வல்வினை கொல்லோ!
யானுளங் கலங்கி யாவது மறியேன்!

அந்தோ! என்ன செய்தேன் பாவியேன்!

வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்கேன்.
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றேற்கு நன்னெறி யுண்டோ!

இம்மட்டோ,

இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்!

ஆ என் அருமைக் கண்ணகி! உனக்கும்,

சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன் !
வழுவெனும் பாரேன் !—

அந்தோ! அங்ஙனமெல்லாம் தீவினையாளனாகவிருந்தும் என் கண்ணே ? கற்பரசே நீ செய்ததென்ன?

வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்டு
எழுகென எழுந்தாய் என்செய் தனையே !

கண்ணே, வா, என்றவுடன் வந்து விட்டாயே! என்னே நின் தெய்வக் கற்பிருந்தவாறு!

கண்ணகி. நாயக ! தாங்கள் அடியாளுக்கு ஏதோ பெருந்தீங்கு செய்துவிட்டதாக நினைந்து வருந்துகின்றீர்களே? அங்ஙனம் ஒன்றும் யான் அறிந்திலனே. அடியாள் தங்கட்கு அடித் தொண்டு செய்யும் பெரும்பேற்றினைச் சிலகாலம் இழந்திருந்த துண்மையே. அச்செயல் என் தவக்குறைவால் எய்தியதன்றோ! (துயரல்) அடிகளே ! அத்தவக் குறைவாலன்றே,

அடிக ளேநினது அடித்தொண் டன்றியும்,
அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்,
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்தனன் யானே!

கோவலன்.—என்ன! என்னைத் தேற்றப் புகுந்த நீயே இவ்வாறு துயர்கின்றனை. ஆம், ஆம், நீ கூறியவாறே நம் தீவினைகளே நமக்கு இத்தகைய துயரங்களைத் தந்தன. நல்லது கண்ணே! நாம் வந்த காரியத்தினை இனிப்பார்த்தல் வேண்டும். கண்ணகி !

பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய் !
நாணின் பாவாய்! நீணில விளக்கே !
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!
சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண் டியான்போய்
மாறி வருவன்; மயங்கா தொழிகநீ.

கண்ணகி. நல்லது, காதல! போய்வருக; இச்சிலம்பு விலைப் போகினும் போகாவிடினும் மாலையிற் றங்காது இங்கு வந்துவிடுக. காதல், நீங்கள் புறப்படும் இதுகாலை, என் உள்ளம் என்றுமில்லாதவாறு என்னவோ துயருறுகின்றது. (துயரல்) அன்பரே! அடியாளும் உடன்வரின் நலமென்று தோன்றுகிறதே.

கோவலன் :—கண்ணே! ஒன்றற்கும் அஞ்சற்க. நம்மால் ஆவதும் அழிவதும் ஒன்றும் இன்று. எல்லாம் இறைவன் செயல். இம்மதுரையில் வீற்றிருக்கும் நம் அருமைத் தமிழ்த் தாயை வணங்கித் துணைக்கொண்டு செல்வேன்.

தேவி செந்தமிழ்த் தாயே பராவுதும் :—

---

## காட்சி 2.

இடம்:—மதுரையில் பொற்கொல்லர்தெரு.

உரியோர்:—அரண்மனைப் பொற்கொல்லன், அவன் சுற்றம், கோவலன்.

பொற்கொல்லர் தலைவன்:—தம்பிமார்களே! உங்களிற் பலர்க்கு நம் தொழில் நுணுக்கங்கள் நன்கு தெரிந்திலவே. தங்கள் காதும் கைப்பொருளும் தொலைய, ஓயாது தட்டிக்கொண்டிருக்கும் நம்மைத், தட்டார் என்று கண்டுபிடித்த உலகம் எவ்வளவு அறிவுள்ளது பாருங்கள்! நமது ஆண்டவன் சோமசுந்தரனுக்கும் தாய் மீனட்சிக்கும் செய்யும் பணிகளிலும், தோலிருக்கச் சுளை விழுங்கும் நமக்குப் பத்தர் என்ற பெயர் எவ்வளவு பொருத்தமானது பாருங்கள்! அந்தணர்க்காயின் நூற்றுக்கு எண்பது விதமும் அரசர்க்காயின் நூற்றுக்கு எழுபது விதமும் வணிகர்க்காயின் நூற்றுக்கு அறுபது விதமும் வேளாளர்க்காயின் நூற்றுக்கு ஐம்பது விதமும் நாம் பற்றிக்கொள்ள வேண்டுமென்பது உங்கட்கு இன்னம் தெரிந்திலதே!

ஒருவன்:—என் அண்ணு! நமக்கு எல்லாம் ஒன்றுதானே, வேளாளர்க்கு இவ்வளவு, அந்தணர்க்கு இவ்வளவு என்ற வேறுபாட்டிற்குக் காரணம் என்ன?

போ. தலைவன்:—வேறுகாரணம் இல்லை. அவரவர் பாடுபட்டுத் தேடும் முறையைப் பொறுத்தது இவ்வேறுபாடு. அஃதிருக்கட்டும். நேற்று நம்முதல் மந்திரியின் வீட்டிற்குச் செய்துதந்த பொன்னுரத்தில் கலப்புப் போதாதென்பது என் எண்ணம்.

ஒருவன்:—அண்ணு! அதில் கலப்புவேலையே யில்லையே. தங்க நீர்ப்பூச்சு வேலைதானே. ஏன் அண்ணு! இப்போது கோயில் வேலை குறைந்துவிட்டது?

போ. தலைவன்:—ஆண்டவன் சோமசுந்தரன், நம்தொல்லைக்கு அஞ்சித், தனக்குப் பாம்பணியே போதுமென, ஒரு புலவன் கனவில் கூறினனும். அவர் ஒரு செய்யுள் மூலம் அதனைக் கூறியுள்ளார். அச்செய்யுள்:—

ஒட்டாக ஒட்டியும் காற்பொன்னில் மாப்பொன் உபாயமதாத்
தெட்டாதி ரான்பிழை செய்யாதி ரான்செம்பொன் மேருவினைக்
கட்டாகக் கட்டிக் கடுகள வாகிறை காட்டவல்ல
தட்டானுக் கஞ்சியல் லோவணிந் தான்சிவன் சர்ப்பத்தையே.

மற்ருெருவன்:—என் அண்ணு! அவ்வாண்டவன் நம் அரண்மனைப் புரோகிதர் கனவில், தனக்கு ஆண்டிற்கொரு முறை நடக்கும் மீனுட்சி திருமணத்தை, இனித் திங்கள்தோறும் நடத்திவரக் கூறினராமே. இவற்றுள் எது மெய்யோ? அப்படி நடக்குமாயின், நாம் மாதந்தோறும் ஒரு தாலி யாவது செய்யலாம். ஏன் அண்ணு! தாலியிற் பொன்னெடுத்தல் மாபாவமாமே!

வேருெருவன்:—போடா! உனக்கென்ன தெரியும், 'தாய்க்குச் செய்யும் தாலியிலும் காற்பங்குக்குமேல் காட்டாதே' என்பது நம் பெரியோர் வாக்கன்ருே! நம்மைப்பெற்று

வளர்த்த தாய்க்கே, கண்டு பிடித்துக்கேட்கும் தாய்க்கே, தாலிக்கு அளவு இதுவாயின், உலகமீன்ற தாய்க்கு ஒன்றும் பேசாத தாய்க்கு, தாலி செய்யுங்கால் எடுத்துக் கொள்ளவேண்டிய அளவு கூறுவானேன்? என் அண்ணு! நான்கு வருணத்தார்க்கும் பொதுவிதி கூறினீர்களே! அவர்களுள் கண்பார்க்விருந்தால்—.

பொ. தலைவன்:—"அறிந்தவர் தெரிந்தவர்களுக்கும், அதிகாரிமார் குருமார்கட்கும் அரைப்பங்கு கூட" என்பது சிறப்பு விதி. இருக்கட்டும். அதோ யாரோ ஒருவர் புதியர் வருகின்ருர்.

கோவலன்:—(சுற்றத்தினுள் ஒருவனை நோக்கி) ஐயனே, இதோ செல்லும் உங்கள் தலைவர், யான் எண்ணுகின்றவாறே, அரண்மனைப் பொற்கொல்லர் தாமே?

ஒருவன்:—ஆம், ஐயரே, அவரே அரசாது தலைமைப் பொற்கொல்லர். அவர் அணிந்திருக்கும் சட்டையே அரச வரிசையென்று காட்டுமே. கையிலுள்ள கொடிற்றுக் கோலும் அரசர் தந்ததே. இதோ, இவர்கள் உருக்குத் தட்டார், நாங்கள் பணித்தட்டார். (தலைவனை பொற் கொல்லன் அணுகி வணங்கல்).

பொ. தலைவன்:—ஐயரே! வருக! வருக! நீங்கள் எந்த ஊரினரோ? என்ன காரியமாக இங்கு வந்துள்ளீர்களோ?

கோவலன்:—ஐயீர்! நான் இருப்பது காவிரிப்பூம்பட்டினம். வணிகன். இங்கு ஒரு சிலம்பு விற்க வந்துளேன். அது மிக விலையுயர்ந்துளது. அதனைத் தாங்கள் விலை மதிக்கவும், விற்றுத்தரவும் வல்லீர் என எண்ணுகின்றேன். உங்கள் முயற்சியளவிற் கேற்றபொருள் தந்துவிடுவேன். (நகையை எடுத்தல்).

பொ. தலைவன்:—காட்டுங்கள், பார்ப்போம். பெண்கள் காலில் அணிந்துகொள்ளும் சிலம்பின் விலை மதிக்கும் ஆற்றல் என்பாலுளதோ இலதோ நான் அறியேன். ஆயினும்

அரசர்கள் முடியிலணியும் முடிக்கலன்களெல்லாம் செய்பவன் யானே!

**கோவலன்:**—ஐயீர்; என் கருத்தினை அங்ஙனம் பிழைபட உணராதீர்கள், என் சிலம்பு, மற்றச் சிலம்புகள்போல எளியதொன்றன்று. மிக விலையுயர்ந்தது. இதோ பாருங்கள், நீங்களே நேரில் அறிந்துகொள்ளலாம். அதனை நன்கு அறிந்து விலையைக் கூர்மையாக மதிக்கவேண்டும் என்பது பற்றியே அங்ஙனம் கூறினேன், வேறில்லை. (சிலம்பினைத் தருதல்.)

**பொ. தலைவன்:**—அப்படியா! ஆயின் தங்கள் கருத்தறியாதது பற்றி என்னை மன்னித்திடுக. அவ்விடம் அமருங்கள். நான் பார்த்துச் சொல்லுகிறேன். (தனியே) ஓ இச்சிலம்பு மிக விலையுயர்ந்த தென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. ஓ! தலைமையான மாணிக்கங்கள்! ஓ, ஓ, முதன்மையான வயிரங்கள்; ஆ, ஆ, அம்மணிகள் பதிப்பதற்கு அமைந்துள்ள கேவணங்களின் சிறப்பினை என்னென்பேன்! ஓ, உயர்ந்த கிளிச்சிறைப் பொன்னாலே ஆக்கப்பெற்றது! உட்கருவின் அழகினை என்னென்பது! உள்ளிடு மணிகள் யாவையோ! (ஆட்டிப்பார்த்தல்) முத்தின் ஒலியினின்றும் வேறுபடுகின்றதே! ஒரு சமயம் இரத்தினங்களாகவே இருக்குமோ! அங்ஙனமாயின் அம்மம்ம! இதன் விலையினை உள்ளவாறே மதிப்பாரும், இதன் விலைதந்து வாங்குவோரும் இவ்வுலகத்தே யாவருளர்? இந்தப் பாண்டிய நாட்டையே தந்து, நம் அரசன் வாங்கினால் வாங்கலாம். வாங்கினும் அதனை அணிபவர் யாவர்? அவ்வரசன் தெய்வமாகிய தமிழ்த்தாய்க்கு அணிந்தால் அணியலாம். இவையெல்லாம் இருக்கட்டும். (கோவலன்பால் அணுகி) ஐயரே, நீங்கள் கூறியவாறே இச்சிலம்பு மிக விலையுயர்ந்ததென்பதில் தடையில்லை. இப் பெருவிலைச் சிலம்பினை வாங்குவார் அரசனை யன்றிப் பிறர் இலர். ஆகவே அரசனிடம் தெரிவித்து யான் வருமளவும், நீங்கள் அருள்கூர்ந்து, என்

சுற்றத்தினருடன் அதோ என் சிறுகுடிற் பாங்கருள்ள கோட்டத்தில் அமர்ந்திருங்கள். விரைவில் வந்துவிடுவேன்.

கோவலன் :—நல்லது போய்வருக.

பொ. தலைவன்:—(போகும்போது) ஆம் அதுவே செய்யத்தக்கது. அரசன் தேவி தன் பொற்சிலம்பினை நேற்றுத் தேடியதாகத் தாதி கூறினள். இன்று காலை, அச்சிலம்பு என்னிடம் சீர் செய்வதற்குத் தந்தது நினைவில் வந்துவிடலாம். உடனே அதனைக் கொண்டுவருமாறு அரசன் கட்டளையிடுவன். யான் எங்கிருந்து கொடுப்பேன்? குடிக்கும் கூத்திக்கும் பங்கிட்டு விட்ட அச்சிலம்பு எங்கிருந்து வரும்? அந்தோ! அப் பொருளைத் தேடிவர யான் எமனுலகுக்கு அனுப்பப் படுவேனே! இருக்கட்டும். அச்சிலம்பு போன்றுளே இது இருக்கிறது! எனக்குமாறாக, இங்கு வந்திருக்கும் என் நண்பனை எமனுலகுக்கு அனுப்பிவிட்டால் என்ன? ஆம், அவனுக்கு இங்கு யார்? கேள்வி ஏது? இதுதான் அரண்மனைச் சிலம்பு! இதனைத் திருடியவனே இந்த வணிகன்! இவன் இதனை என்னிடம் விற்கக் கொண்டுவந்தான்! யான் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டேன்! அரசனிடம் கூறினேன்! விசாரணை நடக்கின்றது! நானும் என் சுற்றமும் மெய்க்கரி கூறினோம்! இவன் பாடு தீர்ந்தது. அரண்மனைக்குச் சிலம்பு வந்தது. எனக்கு உயிர் நிலைத்தது. (இம்மட்டோ! ஆட்சியாளர் மடல் என் மார்பில் தொங்கும்.) நல்லது, நான் அரசனிடம் செல்வேன்.

## காட்சி 3.

இடம்—அரண்மனையின் ஒரு பகுதி.

உரியோர்—அரசன், ஏவலர், பொற் கொல்லர் தலைவன்

அரசன் :—ஆ! இது என்ன விந்தையாக விருக்கின்றது. நமது தேவிக்குத் திடுமெனப் பிணக்கம் வந்துவிட்டதே! நம்மோடு உடனிருந்து நாடக மகளிர் ஆடல் பாடல்களை நோக்கிக் கொண்டிருந்தனளே; ஏனோ சடுதியில் முகம் வேறு பாடடைந்தது? தலை நோயெனக் கூறிச் சென்று விட்டனளே! ஆம், ஆம். நோய்களிலெல்லாம் முதன்மை பெற்று நிற்கும் மன நோய்க்குத் தலை நோய் எனல் தகும்! தகும்!! அம்மம்ம! என்னே பெண்களின் புலவி நுணுக்கம் இருக்குமாறு! தம்மினும் யாரோ ஒருத்தி நம்மை நினைக் கின்றுளாம். சும்மா விருந்தால் யாரையோ நினைத்துக் கொண்டிருக்கின்றேமாம். கண்ணே, நின்னை இம்மையிற் பிரியேன் என்றால், இம்மையில் இம்மையில் மட்டும், ஆயின் மறுமைக்குத் துணையாகும் மாற்றாள் யாவளோ? என வினவுகின்றனர். இங்ஙனம் எத்தனையோ வகையான புலவிகள்! இன்று யான் செய்த பிழை என்ன? நாடக மகளிர் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்தினைக் கேட்டு மகிழ்ந் திருந்ததொன்றே யன்றோ! அம் மகளிர் உருவப் பொலிவு என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டதென்பதே தேவியின் கருத்துப் போலும். இருக்கட்டும். தேவியைக் கண்டு இன்னுரைகூறி அவ்வூடலைப் போக்கி வருவோம். ஓ அங்கு வருவது யார்? நம் அரண்மனைப் பொற்கொல்லனன்றோ! நல் வேளையாயிற்று. சிறந்த அணிகலன்கள் கொண்டு வருவானேல் இவ் வமையத்திற் கேற்றனவாகும்.

பொ. கொல்லன்:—அரசே போற்றி! எம் ஆண்டவா போற்றி! அரசரேறே! திருடன், திருடன்; அரண்மனைப் பணியை, தேவியின் சிலம்பினை, அஞ்சாது திருடிய திருடன்; காவலாளர்கள் கண் விழித்திருப்ப, வாயில் வழியே சென்று

திருடிய திருடன்; கன்னக் கோலின்றிக் கவைக்கோலின்றித் திருடிய திருடன்; அரசே, அச்சிலம்பினை விற்க வந்து எஞ் சிறிய குடியில், அகப்பட்டுவிட்டான், அகப்பட்டுவிட்டான்; தப்பிவிடுவான், தப்பிப் போய்விடுவான்; மந்திரம் வல்லவன், மாயமாய்ப் போய்விடுவான்.

அரசன்:—அடே, யாரோ தன் சிலம்பை விற்க வந்திருக்கலாம், அது நம் சிலம்புதான் என்பது நீ எங்ஙனம் கண்டாய்?

பொற்கொல்லன்:—அரசே! அது, அடியனேன் செய்ததுதானே. செய்த எனக்குத் தெரியாதா? உலகினில் வேறு எங்கும் இல்லாப் பெருவிலைச் சிலம்பாயிற்றே அது? அத்தகைய சிலம்புடைய ஒரு செல்வன், அதனை விற்க என் குடிலுக்குத் தனியே வருவானேன்? சோணாட்டினனும், பாண்டிய னாட்டிற்கு விற்க வந்தானும்; இங்கு நேற்றுத் திருடியதை ஏதோ கிடைத்தது லாபம் என்று விற்றுக்கொண்டு ஓடிப் போகப் பார்க்கிறான்.

ஏவலாளன்:—அரசரேறே! போற்றி! போற்றி! எங்கள் பெருந் தேவியார் கோயிலில், நேற்றுச் சிலம்பு காணமற்றேடிக் கொண்டிருந்ததை, நாயினேன் மனைவி கூறினள்; அறிவேன் அரசே!

மற்றொருவன்:—அரசரேறே! சிலம்பு காணமலிருப்பது உண் மையே. அடியேங்களுக்கெல்லாம் தெரியும்.

அரசன்:—ஓ, அப்படியா? ஏவலாளர்காள்! இப்பொற்கொல்லன் பின்னே போமின். இவன் கூறும் ஆளிடம் நம்தேவியின் சிலம்பு இருப்பது உண்மையாயின், அவனைப் பிடித்துக் கொண்டு வருவீர்களாக.

பொற்கொல்லன்:—அரசே, அவன் மந்திரன் வல்லனுயிற்றே. பகற்பொழுதிலே காவலர்கள் கண் விழித்திருக்கும்போதே அவர்கள் அறியாமல் மறைந்துசென்ற மந்திரம் வல்லா னுயிற்றே! நாயேங்கள் பிடித்துவரும்போது போய்விட்

டால் எங்கள் தலைகள் போய்விடுமே. அவன் மாயமாய்ச் சிலம்புடன் மறைந்துவிடுதல் திண்ணம், திண்ணம், அரசே!

அரசன்.—அடே, மூடன்! நாம் போகும் அவசரம் தெரியாமல் வழிமறித்து நின்று தொல்லை செய்கிறான்! அடே ஏவலர்காள்! இவன் கூறியவாறு அவன் கையில் நம் அரண்மனைச் சிலம்பு இருக்குமாயின், அவன் மந்திரம் வல்ல திருடனென்றும், தப்பி விடுவானென்றும் உங்கட்குத் தோன்றுமாயின், அவனைக் கொன்றேனும் நம் சிலம்பினைக்கொண்டு வருக. போமின், போமின். (அரசன் போய்விடல்.)

பொற்கொல்லன்:—(தனியே) அப்பா எமன் வாயினின்று தப்பினேன், தப்பினேன்; என் நண்பனை எனக்குப் பதிலாக எமனுக்கு விருந்திடப் போகிறேன்.

(யாவரும் போதல்.)

---

## காட்சி. 4.

இடம்:—பொற்கொல்லர் தெரு.

உரியோர்:—பொற்கொல்லன், அரசன் ஏவலர், கோவலன்.

பொற்கொல்லன்:—ஐயீர்! இதோ இங்கு வந்திருப்பவர்களே அரசன் ஏவலாளர்கள். அரசன் அரண்மனையில் ஒருசிலம்பு காணாமற்போய்விட்டது. அதுபற்றியே இதைப் பார்த்துப் போக வந்திருக்கிறார்கள்.

கோவலன்:—நல்லது, இதோவிருக்கிறது, பாருங்கள்.

பொற்கொல்லன்:—பார்த்தீர்களா? இதுதான் அரசன் தேவியார்க்கு உரியது. அரண்மனையிலிருக்கும் மற்றொரு சிலம்புக்கு இதுதான் இணை. சமயத்தைக் கைவிடாதீர்கள்.

விட்டு விட்டால் ஏமாந்து போய் விடுவீர்கள். வந்த காரியத்தை உடனே முடித்துக்கொண்டு போவீராக.

ஒருவன் :—ஐயா, இப்படி வருக. நமக்குள் ஒருவாறு பேசி முடித்துக்கொண்டு அப்புறம் இவரிடம் வருவோம்.

பொற்கொல்லன் :—நல்லது, போவோம். (எல்லோரும் விலகி நின்று ஆராய்தல்).

ஒருவன் :—ஏனையா பொற்கொல்லரே! இவரா கள்வர்? உமது கண்ணில் திருட்டுச் சாயம் பூசப்பட்டிருக்கிறது போலும்! இவரைப் பார்க்கும்போதே இவர் ஒரு பெருஞ் செல்வக் குடியிற் பிறந்து வளர்ந்தவர் என்பது தெரியவில்லையா?

மற்றொருவன் :—ஆம், ஆம், இவன் திருடனென்று சொல்லப் படுவானுமல்லன்; கொல்லப்படுவானுமல்லன். எவனோ பெருங்குடிச் செல்வ வணிகன்.

வேறொருவன் :—அண்ணன்மார்களே! பத்தர் சொல்வதையும் நன்றாய்க்கேட்டு எண்ணிப் பார்ப்போம்.

பொற்கொல்லன் :—அப்படிச் சொல் தம்பி! இது என்ன இலேசான வேலையா?

கோவலன் :—ஐயீர், பத்தரே! வேலையின் அருமை யறிந்து தக்க விலை தருவதாயிருந்தால் சொல்லுங்கள். அன்றேல், என்னை விட்டு விடுங்கள்.

பொற்கொல்லன் :—அடாடாடா! என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்! நான் ஒருத்தன் நடுவே இருந்தும் உங்களை விட்டு விடுவேனா? அப்படி விட்டு விடுவதாக எண்ணமில்லை. ஏதோ ஒருவழியாக முடித்துவிடுகிறேன். இதோ வந்து விட்டோம். சற்றுப் பொறுத்திருங்கள். (இப்பால், ஏவலாளர்களைப் பார்த்து) தம்பிமார்களே, உங்கட்கு உலகியலறிவு போதாது. அதனிலும் கள்வர்கள் திறங்களை நீங்கள் கேட்டும் அறிந்திலீர்கள்; பாவம் :—

சிந்து.

ஏமாந்து போகாதீர்—ஏவலர்களே
இவனைவிட் டரசனுற் சாகாதீர் (ஏமாந்து)

தெள்ளிய முகங்கண்டு—இவன் முழுத்
திருடனென் றறியாமல் நிய்ங்குகிறீர்
கள்ளர்கள் திறமறிவேன்—அவற்றிற்சில
கழறுகி றேன்உற்றுக் கவனித்திடீர்

மந்திரம் வல்லவர்கள்—அவற்றையவர்
வழுத்திடில் தேவரென மறைந்திடுவார்
தந்திரம் வல்லவர்கள்—இந்திரன்
தன்மார்பின் ஆரமும் தாங்கொள்ளுவார்

தெய்வங்கள் தொழுதெழு வார்—கைக்கொண்ட
செழும்பொருள் காட்டித்தப்பிச் சென்றிடுவார்
எய்தும் மருந்தறிவார்—அதனால்
இருந்தவர் தாமிருந்த இடம்பெயரார்

நிமித்தங்கள் பலிக்கிற்செல்வார்—இல்லாவிடில்
சேருமெய்ப் பொருளையும் நெஞ்சினினையார்
தமக்குறு பொழுதறிந்தே—கவர்ந்தகள்வர்
தம்மை விலக்கும்பெரி யோருமுண்டோ

உரியதோர் இடமறிவார்—அவர்தமை
உலகினிற் காணவல் லாரெவரே
கருவிகள் ஏற்பகொண்டு—பொருளையவர்
கைப்பற்றில் காணவல் லவருமுண்டோ. (ஏமாந்து)

போற்கோல்லன் :—ஏவலர்களே, இங்ஙனமெல்லாம் களவுநூலின் கரைகண்ட இவர்கள் செயல்களை யாவர் கண்டறிவார்? அரண்மனையில் யானறிய மெய்மெய்யாக நடந்ததொரு திருட்டினைக் கேளுங்கள். முன்னாளில் ஒரு திருடன் தூதனைப்போலப் பகலெல்லாம் அரண்மனையிற் றங்கியிருந்தான். இராவந்ததும் பெண்ணுருக்கொண்டு இளங்கோ வேந்தன் பள்ளியறையிற் புகுந்து மறைந்துகொண்டான்.

அவ்வேந்தன் மார்பில் வைர ஆரத்தை எடுத்தான். அவ் வேந்தன் துயில் நீங்கி உடைவாளை உருவிக் குத்தக் குத்த, அக்கள்வன் அவ்வாளின் உறையைக் கொண்டு அக் குத்துக்களை வாங்கிக் கொண்டிருந்தான். பின் அரசன் மல்யுத்தம் செய்ய, தூணைத் தன்போலக் காட்டி மறைந் தான். அரசனுக்குப் பேசவும் நாவெழவில்லையாம். அந்தக் கள்வனை இப்பால் இன்றுவரைக் கண்டவர்கள் இல்லை. இங்ஙனமெல்லாம் எத்தனையோ.

ஒருவன் :—ஆம் அண்ணன்மாரே! யானறிந்ததொன்று. நல்ல மாரிக்காலம். நள்ளிருள். ஊர்க்காவல் செய்திருந்தேன். ஒரு திருடன் கன்னக்கோலுடன், திருடிய பொருள் களுடன் வந்தான். வாளை உருவி வீசினேன். வாளைப் பிடுங்கிக்கொண்டான். அவ்வளவு தான். அவனையும் என் வாளையும் கண்டார் இதுவரை யாருமிலர். வாளைப் பிடுங்கியவுடன் யான் ஓடிய ஓட்டம்போல், பந்தயத்திற்கு ஓடுபவரும் ஓடமாட்டார்கள்!

மற்றொருவன் :—இத்தகைய இக்கள்வனை விட்டு விட்டால், நமது தலை போய்விடும். (வாளை வீசல். திரை.)

கோவலன் :—ஆ. தெய்வமே.

---

## காட்சி 5.

இடம் :—மாதரி இல்லம்.

உரியோர் :—(மாதரி, ஐயை முதலிய ஆய்ச்சியர் எழுவர், கண்ணகி, மற்றொருபெண்.)

மாதரி :—ஐயை! இன்று விடியலில் அரண்மனை முரசங்கேட்ட வுடன் இன்றும் நம் செய்ம்முறையென்று தயிர் கடையச் சென்றேன். என்னென்பது! பால் உறையவில்லையே!

முதல் நாள் வெண்ணெயும் உருகவில்லையே. விடைகளோ கண்களிலிருந்து தாரை தாரையாக நீருகுக்கின்றன.

ஐயை:—ஆம் அம்மா! நம் பசுத்திரள்கள் நடுங்கிக் கதறுகின்றன; கன்றுகள் துள்ளி விளையாடவில்லை. பசுக் கழுத்துமணிகள் அற்று விழுந்து கிடக்கின்றன. தாயே! இங்ஙனமெல்லாம் நடப்பது தீங்கு வருவதற்கு அறிகுறி என்பீர்களே! என்ன செய்வது அம்மா?

மாதரி:—ஐயை அஞ்சாதே! முன்னம் ஆயர்பாடியில், எருமன்றத்தே கண்ணன் தன் முன்னோனுடன் "ஆடிய குரவைக் கூத்துக்கள் பல உண்டு. அவற்றுள் பின்னைப் பிராட்டியுடன் ஆடிய குரவைக்கூத்தினை நாம் ஆடினால் கண்ணபிரான் திருவருளால் நமக்கு எத்துன்பமும் நீங்கும். இக்கண்ணகியும் பார்த்து மகிழட்டும். நீ சென்று அக்கூத்தாடுதற்குரிய உன் தோழியர் அறுவரை அழைத்து வா. (ஐயை போதல்.)

கண்ணகி:—ஏன் அம்மா! நீங்கள் கூறிய பின்னைக்காகத் தானே கண்ணபிரான் ஏழு விடைகளைத் தழுவியதென்பார்கள். அதென்ன விடை தழுவி மணஞ்செய்யும் முறை?

மாதரி:—அம்மா! எங்கள் இடைப்பெண்கள் பிறந்த காலத்தே, எங்கள் வீட்டில் பிறந்திருக்கும் ஆண் கன்றுகளையெல்லாம் நாங்கள் தன்னாட்டியாக வளரவிட்டு, கயிறுகொண்டு கட்டாது விட்டுவிடுவோம். அவை புலியேற்றினும் வலியுடையனவாக வளரும். பெண்கட்கு மணப்பருவம் வந்ததும், அவ்வகளை அஞ்சாது அடக்கும் ஆயர் மகனுக்கே எங்கள் பெண்களை மணஞ்செய்து தருவோம். அங்ஙனமின்றி, உயிரைக் காற்றாக எண்ணாது ஒரு பொருளாக மதிக்கும் பேடியர்கட்கு, எம் ஆயர் மகளிர்தோள் உரியனவாதல் ஒருபோதுமில்லை. இப்போது வரப்போகும் பெண்களெல்லாம் அங்ஙனமே ஒவ்வொரு வீரனை மணஞ்செய்து கொள்ளவிருக்கும் கன்னியர்களே; அவர்கள் வந்ததும்

அவர்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் வளர்ந்துவரும் ஏறு களின் பெயர்களுடன் அவரவர்களை அறிவித்திடுவேன். அவ்வவ் வேறுகளைத் தழுவியடக்கும் வீரர்களையே அவ்வவர்கள் மணஞ் செய்துகொள்ள இருப்பவர்கள்.

கண்ணகி:—ஓ. ஓ. அப்படியா! சிறந்த வீரர்களைக் கண்டறிந்து மணஞ்செய்து கொள்வதற்குரிய நல்லவழியே யிது. எங்கள் வணிகர் குலத்தில் பெரும்பொருள் உடையவனையே சிறந்த வனுக மதிக்கின்றார்கள். அவ்வாறே ஒவ்வொரு குலமும் ஒவ்வொன்றைச் சிறப்பாக நாடும்போலும். (ஐயை முதலிய வர்கள் வரல்)

மாதரி:—அம்மா ஐயை! நம் கண்ணகிக்கு, இப்பெண்களுள் யார் யார் எவ்வெக்காளைகளை அடக்குபவரை மணஞ் செய்து கொள்ள விருப்பவர் என்பதைக் கூறுவாயாக.

ஐயை:—நல்லது தாயே.

காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள்.
நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியவிப்
பொற்றொடி மாதராள் தோள்.
மல்லல் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
முல்லையம் பூங்குழல் தான்.
நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யர்குமிப்
பெண்கொடி மாதர்தம் தோள்.
பொற்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிந்
நற்கொடி மென்முலை தான்.
வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக்
கொன்றையம் பூங்குழ லாள்.
(மற்றையோர் ஐயையை அறிமுகப்படுத்தல்)
தூநிற வெள்ளை யடர்த்தாற் குரியளிப்
பூவைப் புதுமல ராள்.

கண்ணகி:—இவ்விவரங்களை அறிய மிக்க மகிழ்ச்சியாக விருக்கின்றது.

மாதரி:—நல்லது, மக்காள், இனி நீங்கள் கண்ணபிரான்மீது பாடும் குரவைப் பாட்டினைப் பாடியாடுக. நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

மாதரி:—நல்லது! நங்கைமீர், இப்போது, அக்கண்ணபிரானொடு ஆடிய பின்னைப் பிராட்டியின் அணி நிறங் குறிக்கும் அழகிய பாடலைக் கூறுவீர்களாக.

இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்
அறுவை யொளித்தான் அயா அயரும்
நறுமென் சாயல் முகமென் கோயாம்.

வஞ்சஞ் செய்தான் தொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தாள் நிறையென்கோ யாம்
நெஞ்சங் கவர்ந்தாள் நிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்.

தையல் கலையும் வளையு மிழந்தே
கையில் ஒளித்தாண் முகமென் கோயாம்
கையில் ஒளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்.

மாதரி :—ஓ, மிகவும் நன்றாயிருக்கின்றது ! இனி, 'கோவா மலையாரம்' என்று தொடங்கும் உள்வரி வாழ்த்துப் பாடல்களைப் பாடியாடுக. கண்ணகி! மூவேந்தரும் திருமாலின் தோற்றம் எனும் உண்மையைக்கொண்ட அப்பாடல்கள் மிக அழகியனவாகும்.

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுலம் மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்.

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையான் என்பரால்.

முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிறே ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்.

மாதரி :—நல்லது மக்காள் ! இனி, வடவரையை என்று தொடங்கும் முன்னிலைப் பரவற்பாடல்களைக் கூறியாடுக.

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல் வண்ணன்! பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே;
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் ! மாயமோ மருட்கைத்தே.

அறுபொரு ளிவனென்றே யமரர்கணம் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே;
யுண்டவாய் களவினா லுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் ! மாயமோ மருட்கைத்தே.

திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
விரண்டடியான் மூவுலகும் இருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய்! மாயமோ மருட்கைத்தே.

மாதரி :—மிக நன்று. படர்க்கைப் பரவலும் பாடி முடித்திடுக.

மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கைக் கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே! (க)

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே! (உ)

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராய ணாவென்னா நாவென்ன நாவே! (ஙூ)

மாதரி :—இங்ஙனமெல்லாம் ஏத்தப்பெற்ற நம் கண்ணபிரான், நமக்கு வரக்கூடிய தீங்குகளிருப்பின், வாராது தடுத்தருள்வானாக. நம்து அரசன் செங்கோல் நம்மையெல்லாம் காப்பதாக. நான் சென்று வையையில் நீராடித் திருமாலைப் போற்றி வருவேன். ஐயை! நீங்களும் நீராடிப் போந்து கண்ணகி நங்கைக்கு வேண்டுவன செய்திருங்கள். (போதல்.)

ஒருபெண்:—(ஓடிவரல்) (மெல்லென) அக்கா! என்ன பாவம்! என்ன அநியாயம்! இந்தத் தீவினையும் உண்டா! இந்த அம்மா நாயகனைக்கள்வனென்று வெட்டி விட்டார்களாமே!

ஐயோ பாவம்! எவன் எதைத் திருடினனே இவர்கள் தலையிலேயா அந்தப்பழி வந்து சேரவேண்டும். (சற்று உயர்ந்த குரலில்) ஐயோ, அந்த அம்மாளிடம் எப்படிச் சொல்வது?

கண்ணகி:—ஆ! என்ன! என்னவோ யானறியாமல் பேசி வருந்துகின்றீர்களே! ஐயோ, என்நாயகன் இன்னும் வந்திலரே! யாரேனும் வேற்று நாட்டினன்றானே என்று தீங்கேதேனும் செய்திருப்பாரோ! எல்லாவோ! என்ன அம்மா நடந்தது?

காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்குமென் னெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்குமென் னெஞ்சாயின்
ஏதிலார் சொன்னது எவன்வாழி யோதோழி.

இந்த அம்மா சொல்லியது என்னவோ! கள்வன் என்ற சொற்போற்றேன்றியதே. அந்தோ! என் நாயகன் சிலம்பினையாரேனும் திருடிக் கொண்டார்களோ! அதுபோனாற் போகிறது; என் நாயகன் எத்தீங்குமின்றியிருக்கிறாரா? அவர் எங்கே யுள்ளாரம்மா! சொல்லுங்கள் நான் போய் அழைத்து வருகிறேன்.

நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்
அன்பனைக் காணாது அலறுமென் னெஞ்சன்றே
அன்பனைக் காணாது அலறுமென் னெஞ்சாயின்
மன்பதை சொன்ன தெவன்வாழி யோதோழி.

ஆ, இவ்வாய்ச்சியர் வீட்டில் இதுகாறும் இல்லாமல் இன்று காணப்பட்ட தீக்குறிகள் நேற்று இங்குவந்த எங்களைப் பற்றினவாகுமோ! ஆ. தெய்வமே! ஒன்றும் தெரிந்திலதே! என்னிடம் எப்படிச் சொல்வதென்று மயங்கி அழுகின்றீர்களே. அம்மா! அம்மா! நடந்ததென்னவென்று சொல்லம்மா!

தஞ்சமோ தோழி தலைவன்வரக் காணேன்
வஞ்சமோ உண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்குமென் னெஞ்சாயி
னெஞ்சிலார் சொன்ன தெவன்வாழி யோதோழி.

அம்மா! சொல்லாயா!

ஒரு பெண் :—

'அரசுறை கோயில் அணியார்' சிலம்பை
அம்மணி! அரண்மனைச் சிலம்பை உன் நாயகன்
'கரையாமல் வாங்கிய கள்வனும் என்றே'
'கரையாமல் வாங்கிய கள்வனும் என்றே'

கண்ணகி :—ஆ! என் நாயகனைக் கள்வன் என்று?

ஒரு பெண் :—ஆம், அம்மணி,

கரையாமல் வாங்கிய கள்வனுமென்றே
கொடிய புன்மாக்கள் கொலைகுறித் தனரே.

(கண்ணகி கேட்டு, ஆ என் அரிய காதல! என்று விழுதல்).

ஆ என்னுருயிரே! ஐயோ வென் தெய்வமே!
யாரே கொன்றனர் நின்னை அன்பே! அன்பே! அன்பே!

பாவியென் தீவினையால் பாவுசோ றுடுவிட்டிப்
பாழும்நகர்க்கேன் வந்தோம்! அந்தோ! அந்தோ! அந்தோ!

அந்தோநம் தந்தைதாயர் அளவில்மா நிதிவிட்டு
அற்பச் சிலம்பு! விற்க வந்தோம்! வந்தோம்! வந்தோம்!

வந்தவிடத்தி லிவ்வூர் மதியில்லா மன்னவனுல்
மாண்டாயே என்னருமை மன்னு! மன்னு! மன்னு!

ஆ, என் அருமைக் காதல! என்னே என் தீவினையிருந்த வாறு! இத்தீவினையேனும் கூடச்செல்ல நினைத்தேனே! அங்ஙனம் தான் சென்றேனு! ஆ, என் ஆருயிரே!

நீ செல்லுங்கால், நல்ல சகுனம் இல்லையென்று இவ்வாய்ச்சியர் கூறினரே! பாவியேன் அப்போதாவது புறப்பட்டு வந்தேனோ! இவ்வாய்ச்சியர்கள் தீக்குறிகள் கண்டதாகக் கூறிக்குரவையாடினார்களே! அப்போதெல்லாம் என்உள்ளம் அஞ்சிற்றே! பாவியேன் வெளிவந்து தேடிக்காண நினைத்தேனே. தனிவர அஞ்சினேனே! எ பாழும் அச்சமே! இனி நீ என்னை என் செய்வாய்! உன்னாலன்றோ யான் என் ஆருயிரைத்தேடிக் காணாதொழிந்தேன். ஒ, இங்ஙனம் இனியும் அழுது புலம்பியிருப்பேனோ' என்னாருயிரை இழந்த நான், இவ்வுலகத்துப் பெண்டிர் சிலரெனக் கைம்மை நோன்பு இயற்றி, உயிர் வைத்திருப்பேனோ! ஆ, என் அன்பா! இதோ எழுகின்றேன்.

இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ!

நறைமலி வியன்மார்பின் நண்பனை இழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனு மடவோயான் அவலங்கொண் டழிவலோ!

தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்கும் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி யழிவலோ!

ஆ என்னரிய காதலா! நீ எவ்விடத்தாயோ! உன்னை எங்குக் காண்பேனோ! எங்ஙனம் கண்டு கொள்வேனோ! ஒ என்னருமைத் தங்கைமீர்! நீங்கள் எல்லோரும் கேட்பீர்களாக! நீங்கள் எல்லோரும் நன்கு கேட்பீர்களாக!! எ காய் கதிர்ச் செல்வனே! உலகெலாம் பார்த்திருக்கும் சுடர்ப் பெருஞ்செல்வனே! உண்மை கூறுதி! என் நாயகன்,

என்னருமைக் காதலன், பூம்புகார்ச் செல்வன், உயர்ந்தோங்கு செல்வத்தான், வருநிதி பிறர்க்கார்த்தும் வள்ளல், மண்தேய்த்த புகழினன், மதிமுக மடவார் கண்டேத்தும் செவ்வேள், என் காதலன்—ஒரு கள்வனு! உண்மை கூறுதி! (வானிலையுரை)—போதிலார் திருவே! மாதரார் தொழுதேத்தும் மாதராய்! வடமீனின் மிக்க கற்பாசே! நின் கணவன் கள்வன் அல்லன், அல்லன். அவனைக் கள்வனென்று கூறிய இவ்வூர் விரைவில் எரிவாய்ப் பட்டழியும்; மாதராய் நீ நின் கணவனொடு ஒளியுலகத்தே நெடிது வாழ்வாய்.)

(தொடரும்.)

---

'வந்தெதிரே தொழுதானை வணங்கினன்'
என்னும்
கம்பராமாயணப் பாட்டின் உரை.

---

(முற்றொடர்ச்சி 120 பக்கம்.)

---

இனி, இப்பாட்டின் உரை:— வந்து எதிரே தொழுதானை (குகன்) வந்து எதிரே நின்று கையால் தொழுதான், அவனை; மலரிருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும்—தாமரைமலரில் உறையும் பிரமதேவனும் தன்னை வணங்கும் தகுதியுடைய பரதனும், வணங்கினன்—தலையால் வணங்கினன்; அவன்—குகன்; அடி வீழ்ந்தான்—பரதன் அடியில் வீழ்ந்து வணங்கினன்; தகவுடையோர் சிந்தையினும்

சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்—அறிவொழுக்கங்களால் சிறந்தோருடைய மனத்திலும் முடியிலும் வீற்றிருக்கின்ற பெரும் புகழையுடைய பரதன்; தந்தையினும் களிகூரத் தழுவினன்—குகனை அவன் தந்தையைக் காட்டிலும் உவகை மிகத் தழுவினன்' என்றவாறு.

அந்தணனும், அவனும் என்பவற்றுள் உம்மை உயர்வு சிறப்பு. திருமால் உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமதேவனும் வணங்கும் தகுதியுடையவன் என்றார் பரதனை, பரதன் திருமாலின் கைச்சக்கரத்தின் அவதாரம் ஆகையாலும், திருமால் அவதாரமாகிய இராமனுக்குத் தம்பியாதலாலும் பரதன் மறைகளில் வல்லவன் என்பதுபற்றியும். பிரமனால் வணங்குதற்குரியனும் பரதனென்று வெளிப்படக்கூறாது மலரிருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும் என்றது எப்படியெனின், அவை இங்கே தகாதசெயலைப் பாதுகாக்கவந்த அடையொடு புணர்ந்த சொற்கள். இதனைத் தோடபரிகாரம் என்பர். இங்கே பரிகாரம் கூற வேண்டியது என்னையென்றால், பரதனோ இராமனுக்குத் தம்பி. உலகத்தை ஆள்கின்ற அரசன். குகனோ வேடுவர் தலைவன். அவன் பரதனால் வணங்கப்படும் தகுதியுடையனல்லன், ஆயினும் இராமனுக்கன்பன் என்பதுபற்றிக் குகனை இத்தவிடத்தில் பரதன் வணங்கினன். அப்படி வணங்கினன் ஆயினும் அவன் குகனில் தாழ்ந்தவனல்லன். மற்று அவன் இயற்கைப் பெருமையை நோக்கின் பிரமதேவனாலும் வணங்குதற் குரியவன் என்றவாறு. குகன் பரதனுக்கு மூத்த தம்பியென்பது இராமர் கருத்தாக உரைக்கப்படினும், இலட்சுமணனாவது சத்துருக்கனாவது அக்குகனுக்கு வணக்கம் செய்ததில்லை. இலட்சுமணனைக் குகன் வணங்கினனென்பது சொல்லப்பட்டுள்ளது.

'தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்' என்பதும் பரதன் தகாத செயலைப் பரிகரிக்க வந்ததே. இங்கே பரதன் குகனைத் தழுவியதும் தன் அரசு நிலைமைக்குத் தகாததே. 'பற்றொடுத்தன்ன பல்சூற் கவடியான்' 'தாழ விட்ட செந்தோலன் தயங்குறச், சூழ விட்ட தொடுபுலி

வாலினான்,' 'பெண்ணை வன்செறும் பிற்பிறங் கிச்செறி-வண்ண வன்மயிர் வார்க்குயர் முன்கையன்'. என்னும் கோலத்தை உடையவன் குகன். இவனைப் பரதன் தழுவுதற்குப் பரிகாரம்வேண்டியதாயிற்று. பரதன் தகவுடையோரால் புகழப்படுதல் இராமாயணத்தில் பலவிடத்தும் காண்க.

இவ்வாறு பரிகாரம் கூறுதல் கவிமரபு என்பதை

விட்டினுக் கமைவ தான மெய்ந்நெறி வெளியிற் றாகக்
காட்டுறும் அறிஞ ரென்ன அன்னவள் கழறிற் றெல்லாம்
கேட்டன னென்ப மன்னோ கேள்வியாற் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வி னுண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்றான்
(சவரி பிறப்பு நீங்கு படலம்.)

என்பதனாலும் அறிக. இவற்றில் ஒன்றைக் குகனுக்கு ஏற்றிக் கூறலாகாதோவெனின், அவனை யாண்டும் 'எயினர்கோன்' 'கிராதர் வேந்தன்' என்று வழங்கியதேயன்றி அவ்வாறு கூறப்படாமையறிக.

இனித் தொழு தெழுவாள், தொழு தெழுவார் என்பதன் முடிபு தனியே காண்பாம்.

# 'தொழுதெழுவாள்' 'தொழுதெழுவார்' என்னும் தொடர்மொழிகளின் பொருளும் இலக்கண முடிபும்.

திருவாளர் ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

இவ்வரிய தொடர்மொழி இரண்டும் முறையே,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை' என்னும் திருக்குறளிலும்,

'தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூஉய்ச்சிற்றில் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவள நீறெழ நீறணி யம்பல வன்றன்வெற்பில்
புனைமலர்க் கொம்பான் னாயன்ன காண்டும் புனமயிலே' என்னும்

திருக்கோவையாரிலும் தொடுக்கப் பெற்றுள்ளன. இவ்விரு அருமந்த நூல்களுக்கும் முறையே மிகவும் 'நுட்பயான உரையெழுதிய பரிமேலழகரும் பேராசிரியரும் இவ்வரிய தொடர்மொழிபற்றிக் கூறிய பொருளும் இலக்கணமுடிபும் ஒன்று. அதனை மறுத்துப் பிரயோக விவேகநூலார் கூறிய ·பொருளும் இலக்கண முடிபும் ஒன்று. 'பிரயோக விவேக' நூலார் கூறியவாறே கூறினார் 'இலக்கணக்கொத்து' 'நூலாரும் ' இலக்கண விளக்க' நூலாரும். ஆகவே இவ்விருதிறப்பட்ட உரைகளுள்ளே கொள்ளற்பாலது யாதோ என்று ஆராயப் புகுந்தவழி, உரையாசிரியர் இருவரும் கூறியது ஒருவாற்றால் பொருந்தினும், பிரயோக விவேகநூலார் முதலியோர் கூறியது எவ்வாற்றானும் பொருந்தாதென்பதும் நூலாசிரியர் இருவர் கருத்தோ, இவ்விருதிறத்தார் கொள்கையின் வேறானதென்பதும் எம்மால் துணிந்து கொள்ளப்பட்டது. அதனை இவ் விரிவுரையில் விளக்குவாம்.

'தெய்வந் தொழாஅள்' என்னும் திருக்குறளின் உரை:— பிறதெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழா நின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழைபெய்யும்- எ-று. தெய்வந் தொழுதற்கு மனத்தெளிவது துயிலெழுங்காலத் தாகலின் தொழுதெழுவாள் என்றார். தொழாநின்று என்பது தொழுதெனத் திரிந்து நின்றது. எ-று.

'திணைவளங்காத்து' என்னும் திருக்கோவையாரில் 'தொழுதெழுவாள் வினைவளம் நீறெழ'—என்பதற்கு உரை:— தொழாநின்று, துயிலெழுவாருடைய வினையினது பெருக்கம் பொடியாக. தொழுதெழுவார் என்றது துயிலெழுங்காலத்தல்லது முன்னுணர்வின்மையின் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார்—எ-று.

பிரயோகவிவேகம்-சூ. 9. உரை:—'வேர்த்து வெகுளார் விழுமியோர்'. 'கொழுநற் றொழுதெழுவாள்', 'தொழுதெழுவார் வினைவளம்', என்புழி வெகுண்டு வேரார், எழுந்து தொழுவாள், எழுந்துதொழுவார் என முன்பின்னாகப் பிறழ்ந்தது. வடநூலாரும் 'வாய் பிளந்துறங்கினன்', 'குறட்டைவிட்டுறங்கினன்' எனவும் காட்டுவர்....................இனிக் 'கொழுநற் றொழுதெழுவாள்', 'தொழுதெழுவார் வினைவள்நீறெழ' என்னும் திருவள்ளுவரினும் திருக்கோவையாரினும், பரிமேலழகரும் பேராசிரியரும், தொழா நின்றெழுவாள் தொழாநின்றெழுவார் எனத் துணைவினையாக உரைப்பர். எழுதல் துயிலொழிதல் ஆகலின், எழுந்துதொழுவாள் என முன்பின்னாகப் பொருள்படுதலன்றி, கருபுவந்தான், ஓடிவந்தான் என்பனபோலத் தொழாநின்று துயிலொழிதல் கூடாதென்க. 'வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும், நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதின், தந்தையும் தாயும் தொழுதெழுக' என்பது, துயிலொழிந்து பின் தந்தையும் தாயும் தொழுது பின் காரியத்திற் செல்க எனப் பொருள்பட்டு வருதலானும் அவருரை அசம்பாவிதம் என்க. எ-று.

இப் பிரயோக விவேகநூலார், எழுதல் துயிலொழிதல் என்று முன்னே பொருள் கூறினர். அது பரிமேலழகரும்

பேராசிரியரும் கூறியபடியே. 'ஆயினும் அவர் பின்னே (தொழுது) பின் காரியத்தில் செல்க என்று கூறினர். அது முன்னெடுபின் மலைவாதல் அறிக. எழுதல் துயிலொழிதல் எனப் பொருள்கொண்டால், துயிலெழுந்து என முன்னே வந்துள்ள தனுல் கூறியது கூறலாதல் அறிக.

தொழுதல் என்பது கையின் வினையென்றும், கும்பிடுதற் பொருட்டென்றும் 'வந்தெதிரே தொழுதான்' என்னும் பாட்டின் உரையுள் விளக்கப்பட்டது. ஆயினும் அதனை ஓரோவழி தலை, மொழி, மனம் இவைகளுக்கு ஏற்றி அவற்றின் வினைபோலச் சொல்வதும் வழக்கினுள் உண்டு.

> 'சுவாமிநாத குரவனை அநுதினம்,
> மனமொழி மெய்களிற்றொழுதவன் அருளால்.
> (நன்னூல்-சங்கர-உரைப்பாயிரம்)

'தலையி னாற்றொழ வேதருந் தன்மையோய்.'—(கம்பர்-மீட்சி)
'தொழுதுகொண் டுண்க உகாஅமை நன்கு.'—(ஆசாரக்கோவை)
என வழங்குவது காண்க.

இவ்வாறு வருவதனை 'செவிகைப்பச் சொற்பொறுக்கும்' என்னும் திருக்குறளில் நாவின் புலத்தைச் செவியின்மேல் ஏற்றிச் சொன்னாற்போலவும், 'நுண்ணியநூல்' என்னும் திருக்குறளில், பொருளினது நுண்மையை நூன்மேல் ஏற்றிச் சொன்னாற் போலவும் வருவதோர் மரபு வழுவமைதியென்பர். சிவஞான முனிவர், சூறுவளியில் ('மலைமகளொருபால்' என்னும் சூத்திர மறுப்பில்) ஒப்புமைபற்றிக் கூறியதென்றதும் அது. சங்கர நமச்சிவாயப் புலவர் இலக்கணை யென்பர்.

ஆகவே திருக்கோவையார் உரையாசிரியராகிய பேராசிரியர், 'தொழுதெழுவார் வினைவளம் நீறெழ' என்புழி, தொழுதலை மனத்தின்மேல் ஏற்றி, மேற்கண்டவாறு உரை கூறினர், அவ்வாறு கூறுவதில் ஒருவகையால் சிறப்புண்மை நோக்கி, எழுந்தபின் கையால் தொழுவார் என்பதைக்காட்டினும் துயிலொழிவார் மனத்தால் வழிபட்டுக்கொண்டே எழுவார்

என்பதில் சிறப்புள்ளதே. அந் நயம்பற்றி அவர் கூறியவாறே கூறினர் திருக்குறளுரையாசிரியராகிய பரிமேலழகரும். அற்று யினும், இத் தொடர்மொழிகளுக்கு உண்மைப் பொருள் அவர் கூறியபடியன்று. என்னையோவெனின், மணிவாசகப்பெருமான் இயற்றிய திருவாசகத்தே 'நான்முகன் முதலா வானவர் தொழுதெழ' (போற்றித் திருவகவல்) எனவந்துள்ளது. இங்கே எழுதல் என்பதற்குத் துயிலொழிதல் பொருளென்றால் இமையாத நாட்டமுடைய வானவர்க்கு அஃது ஏலாமையால், அவ்வாறு பொருள் கூறுதல் ஆசிரியர் கருத்தன்றாம். ஆகவே திருக் குறளினும் திருக்கோவையாரினும் வந்த தொழுதெழுவாள், தொழுதெழுவார் என்பனவற்றிற்குப் பொருள் உரையாசிரியர்கள் கூறியவாறன்றி வேறெனவே துணியப்படும். அற்றேல், அத் தொடர்மொழிகளை ஆசிரியர் எப்பொருள்பற்றி வழங்கினரோ வெனின், அதனை அவற்றின் இலக்கண முடிபு இன்னதென்று துணிந்துகொண்டபின்னர் விளக்குவாம்.

## செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

வினையெச்சங்களிலே, செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் உய்த்துணரவேண்டிய பல சிறப்பிலக்கணங்களை யுடையது. இதிலே உரையாசிரியர் பலரும் தடுமாறினர். அவர் தடுமாற்றங்களைக் களைந்துவிட்டு நேரான முடிபுகளைத் தமிழில் இலக்கணத்திற்கு வரம்புகண்ட சிவஞான முனிவர் சூத்திர விருத்தியுள்ளும் சூறாவளியிலும் விளங்கக் கூறினர்.

'முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின' (தொல் காப்பியம்) முதலில் நான்கும் வினைமுதல் கொள்ளும்' (நன்னூல்) இச்சூத்திரங்களால் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் தன் வினைமுதல் வினையையே கொண்டு முடியும். பிறவினை முதல்வினை கொண்டு முடியா. தன் வினைமுதல் வினை—தன் கர்த்தாவினை. பிற வினைமுதல்வினை பிறகர்த்தாவினை.

'அவன் உண்ணச் சென்றான்' என்பதில் உண்ண என்பது செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இந்த வினையெச்சம்

சென்றான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது. உண்ணுதல் வினைக்குக் கர்த்தா எதுவோ அதுவே செல்லுதல் வினைக்கும் கர்த்தாவாக உள்ளது. உண்பவனும் அவனே செல்லுபவனும் அவனே. ஆதலால் இங்கே செய என்னும் வினையெச்சம் தன் கர்த்தாவினையைக்கொண்டு முடிந்தது.

'மழை பெய்யக் குளம் நிறைந்தது' இங்கே பெய்ய என்பதும் செய என்னும் எச்சம் ஆயினும், அது நிறைந்தது என்னும் பிற கர்த்தாவின் வினையைக் கொண்டு முடிந்தது. எப்படியெனில், பெய்தல் வினைக்குக் கருத்தா மழை. நிறைதல் வினைக்குக் கருத்தா குளம். இப்படிச் செய என்னும் வினையெச்சத்திலும் வேறு சில வாய்பாட்டு வினையெச்சத்திலும் தன் கருத்தா வினையைக்கொண்டு முடிவனவும், பிற கருத்தா வினையைக்கொண்டு முடிவனவும் உள. அவற்றின் பாகுபாடு அறிந்து கொள்ளல்வேண்டும்.

செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திலோ எல்லா விடத்தும் தன் கருத்தா வினையைக்கொண்டே முடியவேண்டும். பிறகருத்தா வினையைக்கொண்டு முடியா. 'அவன் உண்டு சென்றான்' என்புழி உண்டு என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அது சென்றான் என்னும் தன் கருத்தா வினையைக் கொண்டு முடிந்தது.

'மழை பெய்து குளம் நிறைந்தது' என்று சொல்லுகிற வழக்கமும் உண்டு. இங்கே பெய்து என்பது செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் காணப்படுகின்றது. ஆயின் அதற்கு முடிபு நிறைந்தது என்பதே. அப்படியே கொண்டால் பெய்து என்னும் செய்தெனெச்சம் பிற கருத்தாவின் வினை கொண்டு முடிந்தது எனல்வேண்டும், என்றால் அது முற்கூறிய விதிக்கு முரணுகின்றது. ஆகையால், இங்கே பெய்ய என்னும் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சமானது பெய்து எனத் திரிந்து நின்றதாகக் கொள்ளல்வேண்டும் என்பதே இலக்கண நெறி.

உரையாசிரியருட் பலர் செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சங்களிலே பிற கருத்தாவின் வினையைக்கொண்டு முடிவனவும் உளவென்று மயங்கிக் கூறினர். அது சிவஞான முனிவரால் மறுக்கப்பட்டது. நன் பொருண்மாலையாசிரியராலும் மறுக்கப்பட்டுள்ளது.

இனி, செய்தென்னும் எச்சத்தின் பாகுபாடுகள் :—

1. அவன் படித்துயர்ந்தான்—இது காரண காரியப் பொருளில் வந்தது. படித்தல் காரணம். உயர்தல் காரியம். 'ஈந்து புகழ்பெற்றான்' 'வளர்ந்துயர்ந்தனை' என்பதும் அது.

2. உண்டு சென்றான், இங்கே செல்லுதற்கு உண்ணுதல் காரணம் அன்று. உண்ட பின் சென்றான் என்பது பொருள். கூடிப் பிரிந்தார் என்பதும் அது.

3. ஆடி வந்தான், பாடி வந்தான்-இங்கே ஆடி, பாடி என்னும் வினையெச்சங்கள் இறந்த காலத்தை உணர்த்தவில்லை. ஆடுதல், பாடுதல் ஆகிய தொழிலும் வருதற்றொழிலும் உடனிகழ்வனவாதலின் உடனிகழ்ச்சி வினையெனவும் துணைவினையெனவும் கூறப்படும். இப்பொருட்கு ஆடாநின்று வந்தான், பாடாநின்று வந்தான் என்று வரல்வேண்டுமென்பது பண்டை உரையாசிரியர் கருத்து. ஆடிக்கொண்டு வந்தான் ; பாடிக்கொண்டு வந்தான்; தொழுதுகொண் டுண்க என்பது உலகவழக்கு.

'வேர்த்து வெகுளார் விழுமியோர்' இங்கே வேர்த்தல் வினைநிகழ்ச்சியின் பின் வெகுளல் நிகழ்ந்ததன்று. வெகுளல் வினைநிகழ்ந்த பின்னர் அதன் காரியமாகிய வேர்த்தல் நிகழும். ஆகலின் வெகுண்டுவேரார் என நிற்கற்பாலது நிலைமாறிவேர்த்து வெகுளார் என நின்றது. 'கண்டு காட்டல்' (சிவஞானபோதம் சூ. 11) என்பதும் அது. இனி, இங்கே 'வேர்க்க வெகுளார்' என்பதிலே 'வேர்க்க' என்னும் செயவெனெச்சம் 'வேர்த்து' என்னும் செய்தெனெச்சமாகத் திரிந்ததெனக் கொள்ளலாகாதோ வெனின், ஆகாது ; அவ்வாறு செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத்திரிவது 'மழைபெய்து குளம்நிறைந்தது' என்புழிப்போலப்

பிறகருத்தாவினையைக்கொண்டு முடியுமிடத்தேயாம். 'வேர்த்து வெகுளார்' என்புழி வேர்த்தலும் வெகுளலும் தன் கருத்தா வினையே யாதல் அறிக.

கோழி கூவிப்பொழுது புலர்ந்தது. இங்கே கோழிகூவிய பின் பொழுது புலர்தல் நிகழ்ச்சியின்றி, பொழுது புலர்தலானது கோழி கூவுதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆதலின் கோழியைக் கூவுவித்துப் பொழுது புலர்ந்தது என்றுபொருள் படும். படவே, கூவுவித்து என்பது விவ்விகுதி செய்யுள் விகாரத்தால் தொக்குக் கூவியென நின்றதென்ப. 'உறற்கால் யானை ஒடித்துண்டு எஞ்சிய யா' 'குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்' என்பதும் அது.

'.........தானதுவாய்.........தானும்இறை' (சிவஞா சூ. 10) ஆய் ஆம் என்புழிச் செய்தெனெச்சம் காலமுணர்த்தி நில்லாது 'மற்று நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க்கு அமிழ்தொக்கும் இவன்' என்புழிப்போலத் தன் வினைமுதல் வினையாதல் மாத்திரையே உணர்த்தி நின்றது.

'பயந்து காத்தழிக்கும் மற்றை மூவர்' (திருவாசகம்–திருச் சதகம்) இங்கே செய்தென்னும் வாய்பாட்டெச்சங்கள், எச்சப் பொருள் தாராது, செவ்வெண் மாத்திரையே குறித்து நின்றன. 'பாத்திரமும்...சக்கரமும் சுந்தித்துச் சுழலும் (சிவஞான சித்தியார் 10-6), கற்றறிதல் (குறள்) இரந்து குறையுறுதல் (இ-அகப்) என்பதும் அது.

'நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியானந்தனாய்த் தற்பரமாய்' (சிவஞானபோதம் சூ. 9-2) என்புழி ஆக்கச்சொல் உண்மை குறித்து நின்றது. (அதன்கண்) 'அறிவாய்' என்புழி ஆக்கம் வேறுபாடு குறித்து நின்றது. 'சிவன் முத்தாகி' என்புழி ஆக்கம் உடைமைப் பொருள்குறித்து நின்றது. இது வடமொழி மதம்.

'அமைந்து விடயியா' (சிவஞான-சூ. 11-). இது வேறு வினையாய் நின்றதெனப்படும். அமையவுமாட்டா விடயிக்கவு

மாட்டா என்று பொருள்படும். உரத்துத்தரியாது என்பதும் அது.

இவ்வாறு பல பொருள்படவரும் செய்தெனெச்ச வாய்பாட்டு வகையுள்ளே, ஓடிவந்தான் என்பதுபோல உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது 'தொழுதெழுவாள்' 'தொழுதெழுவார்' என்பது பேராசிரியர் கொள்கையும் பரிமேலழகர் கொள்கையும். 'வேர்த்துவெகுளார்' என்பதுபோலச் சொல் நிலைமாறி வந்தது என்பது பிரயோக விவேக நூலார் முதலியோர் கொள்கை.

பேராசிரியர் பரிமேலழகர் உரை, ஆசிரியர் கருத்துக்கு ஒத்ததன்று என்பதும், பிரயோக விவேகநூலார் உரை முன்னொடு பின் மலைவென்பதும் முன்னே காட்டப்பட்டன. அன்றியும், 'தொழுதெழுதல்' என்னும் அரிய தொடர்மொழிவழக்கு, சங்க விலக்கியங்களிலும் தேவாரம் திருமந்திரம் முதலியவற்றிலும் வழங்கியது காணுதும்.

'தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலால் தம்மையரும்
தாம்பிழையார் தாக்கொடுத்த கோல்'—(கலி-காமர்கடும்புனல்)

'முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்
துன்னருந் துப்பிற் றொழுதெழா—மன்னர்'—(புற-வெ-மாலை.)

'அழிதகவில்லா அரனடியாரை
... ... ... ...
தொழுதெழ வையகத்தோ ரின்பமாமே'—திருமந்திரம்

'மாலைக்கண்ணித் தொழுதெழுமினோ வினைகெட'-திருவாய்மொழி.

'இமையவர் தொழுதெழும் இன்னம்பர் மேவிய' தேவாரம்—

'விரும்பினாய்த் தொழுதெழுவார் மெய்ம்மறப்பும்
உண்மகிழ்வும் வியப்போ வன்றே—சூளாமணி.

இவற்றுளெல்லாம் எழுதல் என்பது துயிலொழிதல் என்னும் பொருள்பட வாராமை அறிக.

பிரயோக விவேகநூலார் மேற்கோள் நூலாக எடுத்துக் கொண்ட ஆசாரக்கோவையிலேயும் மேலே,

'நாளத்தி கோல்நின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
தானறியும் ஆற்றால் தொழுதெழுக அல்கந்தி
நின்று தொழுதல் பழி.'

'இருதேவர் பார்ப்பார் இடைபோகார் ஒும்பினும்
மிக்கார் வழுத்தின் தொழுதெழுக' என்பவைகளிலே
எழுதல் துயிலொழிதல் என்னும் பொருளில் வாராமை அவர் அறிந்திலர்போலும்.

கலித்தொகை உரையாசிரியராகிய நச்சினர்க்கினியர் 'தொழுதெழலால்' என்பதற்கு 'வணங்கி யெழுதலால்' என்று உரை கூறினர். புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர் 'தொழுதெழா' என்பதற்குப் 'பணிந்தெழாத' என்று உரை கூறினர். ஆகவே இவ்விருவர் உரையாசிரியரும் தொழுதெழுதல் என்பதற்கு அடிபணிந்தெழுதல் பொருளாகக்கொண்டார் என்பது விளங்கும்.

'சில மின்னதென் றருந்ததிக் கருளிய திருவே
நீல வண்டினம் படிந்தெழ வளைந்துடன் நிமிர்வ
சோலை வேங்கையின் கொம்பர்கள் பொன்மலர் தூவிக்
காலி னிற்றொழு தெழுவன நிகர்ப்பன காணுய்—
(கம்ப-சித்திரகூடம்)

என்பதனால் கம்பரும் தொழுதெழுதல் என்பதை அடிபணிந்தெழுதற் பொருளில் வழங்கினர் என்பது தெளியப்படும்.

திராவிடமா பாடியத்தில் 'கண்டுகாட்டல்' என்பது வேர்த்து வெகுளார் என்பதுபோல மாறி நின்றதென்றூர் சிவஞான முனிவரும். 'தொழுதெழுதல் போல' என்று கூறினரிலர். அவர்க்கும் தொழுதெழுதல் என்பதற்கு அடிவீழ்ந்து தொழுதெழுதலே கருத்தென்பது,

'திருத்தகு மணிமே லண்ணல் அணங்குடன் திகழ நோக்கி
உருத்திரர் முதலோர் யாரும் தொழுதெழுந் துவகைபூத்தார்'

என்பதனுல் அறிக. (காஞ்சி-திருமணப்படலம்)

'தூயமா மலர்கள் தூவித் தொழுதெழு மார்க்கண் டேயன்'
இதுவும் அப்பொருளையே உணர்த்தும். (தேவாரம்-திருநாவு)

ஆசாரக்கோவையில் 'நின்று தொழுதல் பழி' என்றதனால் அடிவீழ்ந்து தொழுதலே முறையென்பது முடிந்தது.

இனி அதுவே பொருளாயினும் அதனைத் தொழுதல் என்பதே உணர்த்துவதாக, எழுதல் வினையைக் கூட்டியுரைப்பானேன் எனின், அது அடிப்படவந்த வழக்கென்க.

'தொண்டர்தம் பாதந்தன்னில் தொழுதுவீழ்ந் தெழுந்து நின்று' என்னும் திருத்தொண்டர் புராண வழக்கையறிக.

இத்துணையும் கூறியவாற்றால், தெய்வப்புலமைத் திருவள்ளுவனர் வாக்கிலே எழுந்த 'கொழுநற் றொழுதெழுவாள்' என்பதற்கு, கணவனது அடியிற் பணிந்து 'தொழுதெழுவாள்' என்பதே செம்பொருளாதல் காண்க. மணிவாக்கின் எழுந்த 'தொழுதெழுவார்' என்பதற்கும் அப்படியே கொள்க. 'எண் குணத்தான் தாளை வணங்காத் தலை' என்ற ஆசிரியர்க்கு மனவழிபாடே அமையுமென்றல் கருத்தன்றென்க.

அற்றேல், தொழு தெழுவாள், தொழு தெழுவார் என்பவற்றின் இலக்கண முடிபு என்னையோவெனின், உண்டு சென்றான் என்பது உண்டபின் சென்றான் என்னும் பொருளில் வந்தாற்போலத், தொழுதபின் எழுந்தாள், தொழுதபின் எழுந்தார் என்னும் பொருளில் வந்தன. தொழுது என்பதற்கு முன்னே 'அடிபணிந்து' என்பதனை அவாய்நிலையால் வருவித்து உரைக்கப்படும் என்க.

முற்றும்.

# திருத்தக்கதேவரும் கம்பநாடரும்.

ஆசிரியர், அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்,
தோரமங்கலம்.

(முற்றொடர்ச்சி 88-வது பக்கம்.)

ஒருவர், தாம் விரும்பியதோர் பொருளை நெடுங்காலமாக அவாவி எதிர்நோக்கிக் காத்திருந்து கிடைக்கப் பெறுவரேல் அவ்வருமைப்பாடுதோன்றப் பாராட்டிப் பலவகையானும் பயன் தருமாறு பல்வகையாகத்துய்த்து, மகிழ்ச்சி கொள்வாரன்றோ? இதனைக் கதையில் விளக்கவேண்டிய அமையத்தே நம் இருபெருங் கவிஞர்களும் எங்ஙனம் விளக்குகின்றனர் என்று பார்ப்போம். திருத்தக்கதேவர், சச்சந்தனென்னும் அரசன் விசயை என்னும் தன் மாமன் மகளைக் காதலித்து நெடுநாளாகத் தன் உள்ளத்தில் நீங்காத காமவேட்கையோடு கருதியிருந்து மணந்து அவளோடு இன்பம் நுகர்கின்றான் என்பதனை விரிக்கப்புகுந்து,

... ... ... ...

மாதருங் களிறனுனு மாகணப் புணர்ச்சிமன்ற
லாதரம் பெருகுகின்ற வன்பினு லன்னமொத்துந்
தீதிலாத் தினைப்பினுமான் செல்வமே பெரிதுமொத்தார்

... ... ... ...

பொன்னனு எமிர்தமாகப் புகழ்வெய்யோன் பருகியிட்டான்

... ... ... ...

மன்னிய மதுவின்வாங்கி மாதரும் பருகியிட்டாள்

......வேலான்—

கவளமார் களிறுபோன்றுன் காதலி கரும்பையொத்தாள்
தவழ்மதுக் கோதைமாதர் தாமரைப்பூவதாக
உமிழ்நகை வேலினுனு மொண்சிறை மணிவண்டொத்தான்.

...கண்ணன்,

ஒளிக்கவின் கொண்டகாமத் தூழுறுகனியை யொத்தாள்
அளித்தயில்கின்ற வேந்தன் அஞ்சிறைப் பறவையொத்தான்.

எனமொழிகின்றார்.

முதலில் அவர்கள் உறுப்பொன்ற முயக்கலின் நாகமும் சாரையும் பிணைவது போன்றார்கள் என்றும், அம்முயக்கம் உள்ளும்புறமும் மென்மை தோற்றலான் அன்னங்களின் முயக்கம் போன்றதென்றும், வாய் முதலிய உறுப்புக்களைச் சுவைத்தின்புறுதலான் அவ் வேட்கை மீக்கூரும் ஆமான் புணர்ச்சியை ஒத்ததென்றும், தழுவிப் புணர்தல் கூறிய பின்னர், அவளை அமிர்தமாகக் கொண்டு அவன் பருகி இன்புற்றான் என்றும் அவளும் அவனை மதுவாகக்கொண்டு களித்துப்பருகி மகிழ்ந்தாள் என்றும், இருவர் எய்தும் இன்பத்தையும்கூறி, அவன் நெருக்கிப் புணர்தலிற் கரியை நிகர்த்தான் அவள் கரும்பை ஒத்தாள் என்றும், பின் மென்மை தோன்றக் கூடலின் அவள் மலரையும் அவன் வண்டையும் ஒத்தார்களென்றும், கொங்கை கன்னம் வாய் முதலியவற்றில் நகக்குறிதோயக் கூடியவாற்றால் அம்மங்கை கனியை நிகர்ப்ப, அவன் அதனை வடுப்படுத்துண்ணும் வாவல் (வௌவால்) போன்றானென்றும் இங்ஙனம் பல்லாற்றானும் பயன்பெறத் துய்த்தவாறு கூறினர். இவ்வாறு தலை மகனும் தலை மகளும் ஆராக்காதல் கூர்ந்து ஆடிய செய்தியை யுரைத்தற்கு நம் கம்பருக்கும் பற்பல அமையமிருந்தும் கூறாதுவிடுத்து இராமன் அநுமனிடம் கொடுத்துதவிய கணையாழியைப் பெற்ற சீதையின் உள்ளமகிழ்ச்சியை விதந்து கூறுகின்றார். உயிர்ப் பொருட்களிரண்டுங் காதலிப்பது வியப்பன்று; உயிரில் பொருளொன்றைக் கண்டு அது தன் காதலனுடையதெனக்கொண்ட மகிழ்ச்சி மீதூரப் பாராட்டுதல் அவன்பால் அவள்கொண்டிருந்த அளவற்ற அன்பை வெளிப்படுத்துவதாகலின், அதனையே கூறுதல் நன்றெனக் கருதினர்போலும்.

இருந்து பசியாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்து மமுதாகிய தறத்தவரை யண்மும்
விருந்து மெனலாகியது வியுமுயிர் மீளும்
மருந்து மெனலாகியது வாருமணி யாழி.

அக்கணையாழி, நாயகன் 'வருவாரோ வாராரோ என ஐயுற்று வாடி வாராதொழியானென நம்பிப் பன்னெடுநாள் திக்குகளனைத்தையும் இமையாது நோக்கிக் காத்திருந்த தனக்குத் தன்முயற்சி சிறிதுமின்றி வலியக் கிடைத்துழுதி தந்ததாகலின், நெடுநாட் பசியால் மெலிந்து துன்புற் றிளைத்திருந்தோர்க்கு வாயிற் புகும் அமுதத்தையொத்தது; அஃதன்றியும், அதனைப் பெற்ற அக்கணமே, கண்குளிர நோக்கி முறுவல்பூத்துச் சிரத்திற் றாங்கி, அரக்கரூர் வந்த நீட்டுப்போகக் கண்ணீரால் ஆயிரக்கலச மாட்டித் தழுவி முத்து முத்தாடி மேன்மேலும் அதனை ஒரு நிலையில் வையாது பாராட்டிப் போற்றிக் குலாவுகின்றாளாதலின் அம்மோதிரம், கடைமையறிந்து இல்லறம்புரியும் சான்றோரை யடைந்த தகுதியுள்ள விருந்தினரையும் ஒத்துப்பெருமைபூண்டது; பின்னும், சற்றுமுன் உயிர் துறப்பதற்குத் துணிந்தமுயன்ற அவளைத் தடுத்து உய்யச் செய்ததாகலின் இறக்கும் தறுவாயில் உயிரைமீட்கும் சஞ்சீவியையும் போன்றது; அவ்விரலணி என்று வினையுவமம் பயனுவமம் பெறப் புனைகின்றார். அக்கணையாழியைப் பெற்றபோது அவளுள்ளத் தன்மையை வெவ்வேறுவமங்களால் விளக்கி அவை ஒவ்வோர் செய்கையால் குறிக்கப்படுவதையும் மிக நயமாக எடுத்துக் காட்டுகின்றார்,

இழந்தமணி புற்றரா வெதிர்ந்த தெனலானள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்தவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையு மொத்தாள்

அவ்வாழி, * நாகப்பாம்பின் தலையின் விளங்கும் மாமணிபோன்றதாக, இவள் அதனை முன்னிழந்து துன்புற்றுப் பின்பெற்று

---

* ஆயிரம் யாண்டுவரை உயிர்த்திருக்கும் நாகம் தலைக்கண் சுடர்வீசும் மணியையுடைத்தாகி இருக்குமென்றும், அம்மணியை இழப்பின் உயிர் வாழாது சாமென்றும் கூறுப.

மகிழ்ந்துய்ந்த நாகத்தை நிகர்க்கின்றாள்;' அம்மோதிரம், இழந்து போனதாக எண்ணப்பட்டு மறைந்துகிடந்து பின் கிடைத்த பழைய உரிமைப்பொருளை ஒத்ததாக, இவள் அதனைப்பெற்றிலே மெனவருந்திப்பின் பெற்ற உரியவர்களைப் போல்கின்றாள்; அக் கணையாழி அரும்பெறல் மகவாக, இவள் பலகாலம் மலடியாக விருந்துபெற்ற அன்னையை நிகர்க்கின்றாள்; அவ்விரலணி, முன்னிருந்து ஒளி மறைந்து கெட்டுப் பின்தோன்றிய கண்களை ஒப்பதாக, இவள் அங்ஙனம் இழந்த கண்களைத் திரும்பப்பெற்ற வரையும் போல்கின்றாள் என நான்குவமம் கூறினர். உவமானத் துக்கும் உவமேயத்திற்குமுள்ள பொதுத் தன்மையை இக்கவியிற் புலப்படுத்தாதுவிடினும், பின்வருஞ் செய்யுட்களில்,

'வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தாற்
றாங்கினண் மலர்க்கண்மிசை யொத்தின டடந்தோள்
வீங்கினள்...........'

"மோக்குமுலை வைத்துற முயங்குமொளிர் நன்னீர்
நீக்கிநிறை கண்ணிணை ததும்ப கெடுநீள
நோக்கும் நவலக்கருது மொன்றுறுநவல் கில்லாள்
மேக்குயிர் விம்மலள் விழுங்கலுறு கின்றாள்."

என்று சில குறிப்புகள் தருகின்றார். அநுமன் உதவிய ஐயன் விரலாழியை வாங்கித் தலைமீதுகொண்டாளாகலின் இழந்தமணியை எற்ற நாகம்போன்றாள்; அதனை, முலைத்தடத்துவைத்து மிகப் புல்லி மூக்கான் மோக்கின்றாளாகலின் தான் அரிதிற் பெற்றெடுத்த அருமந்த மகவை உச்சிமோந்து பால் கொடுக்கக் கொங்கை யோடணைத்துப் புல்லிமகிழும் மலடியையும் ஒத்தனள்; அதனைக், கண்களில் ஒத்திக்கொண்டும் உவகையால் பெருகுங் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பலகால் நோக்கிக்கொண்டும் இருத்தலின் பழந்தனம் இழந்து பின் பெற்றவரையும் நிகர்வாளாயினள்; தன் கரத்தேந்திய அம்மோதிரத்தைக் கண்களால் நீளநோக்கிக் கொண்டிருப்பதன்றி வேறொன்றும் கூறாளாயும், கூறவிருப்பினும் இன்ப மிகுதியால் வாய் திறத்தற்கியலாதவளாகியும் இருத்தலால் முன்னிருந்த கண்களை இழந்து கெடுநாட்கப்பாற் பெற்ற ஒருவர்,

கண்முன் எதிர்ப்படும் பொருட்களை (இதுகாறும்) காணப்பெறாத குறைதீர உற்றுற்றுப்பார்த்து மகிழ்தல்போல் இவளும் மகிழ்வா ளாயினள்—என நாம் உய்த்துணரக் குறிக்கப்பட்டன. இவ் வகைச் செய்கைகளால் நால்வகையுவமங்கள் காட்டினாரேனும், சிதையின் உள்ள நிலைமையையும் இவைகொண்டு நாம் கருதற்கும் இடனுண்டு.

தன் தலைமணியை இழந்த நாகம் உயிர்துறக்கும் அமயத்தே அதனைப் பெற்றுயிர் பிழைத்தாற்போன்று இவளும் வெறுப்பால் தற்கொலை சூழும்காலத்துப் பெற்றுய்யலானாள். தன் உரிமை நாயகனைப் பிரிந்து கவன்று இனி அவர் திருவடிகளைக் காணப் பெறேன் என இருந்த நிலைமையில் இவ்வாழி பெற்று அவரையே நேரிற் கண்டாற்போல் மகிழ்கின்றாளாதலின் பழந்தனம் இழந்து பெற்றவரை நிகர்த்தனள். கணவனைப் பிரிந்து, வேறிடத்திருந்து பழியுற்றாள் என உலகம் நிந்திக்கும் இழிவுதீரக் கணையாழியை எற்றாளாகலின் மலடி என்னும் வசைநீங்க அரும்பெறல் மகவைப் பெற்றவளையும் ஒத்தனள். அன்புடைய காதலனையின்றி நோக்கும் திசைகள் பாழ்பட அழுத கண்ணீரொடு உலகப்பொருட்களில் யாதும் பயன்படாதனவாகக் காண்கின்றாட்கு அவன் வருகையை உணர்த்தவும், தன்பால் அன்பு முன்போன்றிருத்தலைத் தெரிவிக்க வும் வந்த ஆழியைப் பெற்றுக் களிகூர்கின்றாளாதலின் போன கண்ணைப் புதிதாய்ப் பெற்றாரையும் போன்றனள் என உரைப்போர் திறமைக்கேற்ப வேண்டுவ கூட்டி விரித்துரைத்தற்கு இக் குறிப்புக்கள் மிக இடந்தந்து நிற்றல் காண்க.

தேவர்—நாயகனோடு நாயகி ஆடிய வின்பம் புகன்றார்.

கம்பர்—நாதன்தந்த கணையாழியை, அவன் கையாகவே கொண்டு சீதை மகிழ்ந்த மகிழ்ச்சியை உரைத்தார்.

தேவர் கூறியது—மெய்புறு புணர்ச்சி இன்பம்.

கம்பர் கூறியது—உயிரோடொருங்கு தோன்றிய அன்பின் பெருக்க இன்பம்.

தேவர்-தலைவன் தலைவிகளைக் கூட்டி இன்பம் காட்டுகின்றார்.

கம்பரோ பிரிந்த தலைவிக்குத் தலைவன் அனுப்பிய கணையாழியைக்கூட்டி இன்பங் காட்டுகின்றார்.

இருவரும், உள்ள நிலைமையையும், அதனாற்றோன்றும் மெய்ப்பாடுகளையும் விரித்துரைத்தலில் நிகரற்றவர்களே.

தேவருக்குக் கதைப்போக்கிற் கிடைக்கும் அமையங்களைவிடக் கம்பர்க்கு மிகவும் கிடைத்தற்கு விரிந்த நூல் கிடைத்தது. தேவர் விரித்துக்கூறும் அரிய கருத்துக்களினும் விழுமிய கருத்துக்களைக் கம்பர் சில சொற்களாற் குறித்துணர்த்தும் ஆற்றலையுடையவரென இக் கவிகள் புலப்படுத்துகின்றனவல்லவா?

இனித் தேவர்— சீவகனுக்கு இலக்கணையை மணம் புணர்க்குங்கால் அவளை நன்றாக அணிந்து நோக்கும் சிலதியர்களின் மனநிலையை விளக்கும் முகத்தால் அவளது பேரழகினை வாய்ப்பக் காட்டத்தொடங்குகின்றார்.

கம்பரும்—இராமன் திருமணக்காலத்தே சீதையைக் கவின் மிக அணிந்து நோக்கும் எவன் மகளிர் கருத்தையுணர்த்தும் வாயிலால் அவளது அளவிடற்கரிய அழகின் நலத்தைக்காட்டப் புகுகின்றார்.

இங்ஙனம் இருவர்க்கும் வாய்த்த ஒரேவிதமான அமையத்தில் அவர்கள் எவ்வாறு கூறுகின்றார்கள் என்பதை நோக்குவோம்.

தேவர்—

வாண்மதர் மழைக்கணோக்கி வருமுலைத் தடமுநோக்கிக்
காண்வர வகன்ற வல்குற் கண்விருப் புற்றுநோக்கிப்
பானுவண் டாற்றுங் கோலச் சிகழிகை வடிவுநோக்கி
யாண்விருப் புற்றுநின்று ரவ்வளைத் தோளினரே.

'இலக்கணையை மணக்கோலம் புனைந்த மகளிர் அவளது கண்கள், முலைகள், அல்குல், பூமாலை சூட்டிய முடி இவற்றை நோக்கி அவளை நுகர்தற்குரிய ஆண்மையைத் தாம் விரும்பி நிற்பாராயினர்'. என்கின்றார். கம்பரோ—

கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்க்து ணும் வண்டுபோல
அஞ்சொற்கள் கிள்ளைக்கெல்லா மருளினு ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறிநின்றார்
மஞ்சர்க்கு மாதரார்க்கு மனமென்ப தொன்றே யன்றோ.

'சீதையை மணவுணி புனைந்த மங்கையர்கள் தாமரைப் பூவிற் றேனையுண்ணும் வண்டுகள்போல அவளது கண்கொள்ளா அழகை முகந்துண்டு தங்கள் மொழி குழறித் தன்மையும் தடுமாற்றமடைந்து நின்றார்கள். காரணம் யாதோவெனில் ஆண்களோ பெண்களோ யாவர்க்கேனும் காதல் கொள்ளும் மனம் ஒரு தன்மைத்தே யாமன்றோ' என மொழிகின்றார்.

ஒரு பெண்ணைக் கண்டு வேறு பெண்கள் விரும்புவார் களாயின், அப்பெண்ணின் அழகு மிக மேம்பாடுடையதாக விருக்குமன்றோ? எனக்கருதி அவ்வாறுரைக்கவந்த புலவர்களில் ஒருவர் (தேவர்) 'கண்ணுற்ற பெண்கள் அவளை அநுபவித்தற்கு ஆண்களாகப் பிறந்தோமிலமே என்று பேதுற்றார்கள்' என்றார். மற்றவர் (கம்பர்) 'அவ்வழகைப் பருகிய மாதர்கள் வாய் குழறத் தம் பெண்மையில் தடுமாற்ற மடைந்தார்கள்' என்றார். கற்பிற் சிறந்த ஓர் மாது, பலரால் அநுபவிக்க வேண்டுமென்னுங் கருத்தோடு நோக்கப்படுவளாயின் அஃது இழிவு பயப்பதாகு மெனக் கருதியே, தேவர் கூறியவாறு கூறாது அவளது பேரழகு ஏனை மங்கயரை மயக்கி நிலைகுலையச் செய்தது என இங்கிதம் பெறக் கூறிச்சென்றது தகவுடைத்தேயாம். ஈண்டும் கம்பர், தேவரை வெல்கின்றார்.

(தொடரும்.)

# பட்டமதன வித்தாரமாலை.

(பண்டிதர், நாராயணசாமியார் வெளியீடு)

மதுரைத் தமிழ்ச்சங்கத்திற் பால பண்டித வகுப்பிற் கல்வி பயின்றுவரும் எனதருமை S. குமாரசாமிக் கவுண்டரென்பவர் தமது நண்பரொருவரிடமிருந்த சுவடியினின்றும் பெயர்த்தெழுதி வைத்திருந்த பிரதியை, யானங்குச் சென்றகாலத் தென்பாற் றந்து இந்நூல் மிகச் சுவையுடையதாய்க் காணப்படுகின்றதாதலால் நுங்களாலாவது புரிகவெனக் கூறினர். யான் கொணர்ந்து படித்துப் பார்த்தேன் சுவை பழுத்த நவைதீ நூலாய்த் தோன்றினமை கண்டு வெளி வந்துலவுறச் செய்ய நினைந்தும் முன் வேறு யாவராலேனும் வெளிவிடுக்கப்பட்டுளதோ வெனும் ஐயம் தடைப்படுத்தியதால் உசாவி வெளிவந்திலதெனத் தெளிந்து யாவருங்கண்டு களிக்குமாறு தமிழ்ப்பொழில் மூலம் வெளிவந்து கமழுமாறு புரியத் தொடக்கினன்.

இந்நூலையியற்றிய கடிகைமுத்துப் புலவரேன்பவர் சமுத்திர விலாச முதலிய அருமந்த நூல் பலவற்றை இயற்றியவரென்பது யாவருமறிந்தொன்றாகும். இவர் எட்டையபுரத்துச் சமத்தான வித்துவான் எனப்புலவர் பலர் கூறக்கேட்டுள்ளேன்.

இந்நூலைப் பின் றனி நூலாக வெளி விடுக்குங்கால் நூலாசிரியர் திறனும் நூலின்றிறனுங் கண்டு குறிப்புரை முதலிய வற்றோடு சேர்த்து வெளிவிடுக்க நினைத்துளேன். இப்போது இங்குச் சிறிது வெளியிடுகின்றேன்.

உ

சிவமயம்.

# பட்டமதன வித்தாரமாலை.

காப்பு

பூமருவும் வாழ்வு பொருந்துமரு தப்பனுக்கு
மாமதன வித்தார மாலைசொல—நாமகிழத்
தாங்கயமா ளுந்தலைமு னுகரஞ் சத்திகொண்ட
காங்கயனும் பிள்ளையார் காப்பு.

நூல்.

நீர்பூத்த வேலை யுடுத்த நிலமடந்தை
தார்பூத்த மொய்ம்பு தழீஇக்கொள்ளச்—சீர்பூத்த
தண்கமலை கண்களினுந் தாளமங்கை பாணியினும்
வெண்கமலை நாவினிலும் வீற்றிருக்கக்—கொண்கனென்றே
மற்றத் திருமகளிர் சூழமருங் குடைவாழ்
கொற்றத் திருமான் குடிகொள்ள—வுற்றிருந்தோன்
சிவலன் முன்னோன் திருவேங் கடகாதன்
ஆவலுறு மைந்தன்மரு தப்பனெங்கோன்—பூவுலகில்
ஆதாவு செய்வனென்றே யாசைகொண்டு பின்றொடரு
மாதர் தமைவருத்து மன்மதனே—காதறந்து
மாயாப்ர பஞ்சம் வளர்க்குநீ கண்ணனுக்குச்
சேயாய்த் துவாரகையிற் செல்லுநாட்—டாயான
கோவியற்கு நெற்றிக் குறுவேர் வரும்பினுன்கை
யேவினக்கு ளாகாதா ரில்லையே—பூவெடுத்துப்
போரென்று சீறிப் புறப்பட்டாற் புண்ணியவான்
ஆரென்றும் பாரா யதுகண்டோம்—பார்தந்த
வேதன் மனைவிதனை மெல்லிதழூக் குள்ளொழித்தான்
மாதவனுந் தன்மனையை மார்பின்வைத்தா—னீதலாற்

சங்கரனு மாதைத் தணக்கொருநாண் மோனமதாய்த்
துங்கவட வானிழலிற் றோன்றுதலு—மங்கும்போய்
இக்குவலைத் தம்புதொடுத் தெய்தா யதுநுதலிற்
கக்கு மனற்பிறக்கக் காயமாய்த்—தைக்குமந்தக்
கொப்புளமாம் புண்ணைக் குளக்கிணன்று சொல்வதன்றி
வெப்பமுடன் போரிலுன்னை வென்றானோ—வப்படியே
வென்றா லவனெடுத்த வேடந் தவறாம
னின்றானோ காமமுற்று நீத்தானோ—மன்றல்புரிக்
தாதிக்கஞ் செய்யுமுன்னை யஞ்சியன்றோ பார்வதிக்குப்
பாதிச் சரீரம் பகுத்தளித்தான்—பூதலத்தின்
மக்கட் பரப்பை வகுத்ததுதான் வேதாவோ
தக்கநெடு மாலோ சதாசிவனோ—முக்கணனுஞ்
சீதானும் வேதாவுஞ் சிட்டித்தா ரானாலுங்
காதல்விளைத் தாண்பெண் கலவாமல்—மேதினியின்
மைந்தர் பிறப்பதுண்டோ மாரனே நீபுரியு
மந்தவினை யாட்டென் றறியோமோ—முந்தப்
பறப்பனவா யூர்வனவாய்ப் பைந்தருவா யுன்னாற்
பிறப்பனவு முண்டே பெரியோர்—சிறப்புரைக்கில்
அந்த வலாரி யறியா ககுட னொரு
கந்தனிவர் களென்றுங் காட்டாரோ—சுந்தரமாய்
விண்ணெல்லாந் தான்புரந்த வேந்தனுக்கு மெய்ந்நிறைந்த
கண்ணெல்லா நீபொருத காயமன்றோ—பண்ணவர்தாம்
உன்வரவைக் கண்டா லொளிக்கவன்றோ கண்ணிமையார்
பொன்வரையை விட்டுப் புறம்போகார்—மன்மதனே
யெங்கே யிருந்தாலு மென்னகலைக் கோட்டுமுனி
சங்கேத முன்னைத் தடுத்ததோ—மங்கையர்மேல்
ஆவலுறக் கோசிகன்மே லம்புதொட்டாய் சூரனுமாய்த்
தேவசபை கண்டான் றிலோத்தமைக்காய்—மேவுமந்தச்
சூதறியாச் சுந்தோப சுந்தருயிர் மாய்த்ததுவு
மாதவனே வுன்கை வனசமோ—காதன்மிக
ஆகிய தானவருக் காரமுத நீக்கினது
மோகினியா நீபிடித்த முல்லையே—மோகப்
பிரமனொரு சிரசைப் பிச்செறிந்து போட்ட

தானல்ல வுன்கைய சோகே—யரியரனோ
காதல்கொடுத் தேதாரு காவனத்து மாமுனிவர்
மாதவந்திர்த் தாரதுவ்வுன் மாம்பூவே—யீதல்லான்
மாலதிக மாந்தாண்டு மாமுனியைத் தானெரித்தான்
நீலமுகி லோவுனது நீலமே—ஞாலத்தில்
திக்கு விசயஞ் செலுத்திவந்த ராவணனு
மிக்குடைய போரிலுன்னை வென்றானோ—விக்குத்
தொடுஞ்சாப நீவளைக்கத் தோற்றொருத்தி வாயா
விடுஞ்சாப மேற்கொண் டிருந்தான்—கடுங்கோப
மாரவுன் கைக்கணையான் மாமோகங் கொண்டவரை
யாராலுஞ் சொல்லி யடக்குவதோ—போராலே
தைவருமுன் னம்பாலே தம்பி தமையனெனு
மைவருமோர் மாதை யனுபவித்தார்—மெய்வரம்பு
காமியருக் குண்டோநின் கைக்கணையால் ராதைதயனு
மாமிதனக் காசைகொண்டான் மாயோனு—மாமப்
பிரமன் றிலோத்தமையைப் பிள்ளையென்று பார்த்தோ
சுரதவகை செய்யத் தொடர்ந்தான்—குருவான
பொன்மனைவி தன்னைப் புணர்ந்தான் மதிக்கடவுள்
மன்மதனே யுன்மகிமை மட்டுண்டோ—வுன்மலைவா
லிசன்து ரோணன் மனைவியல்குற் கேக்கமுற்றுத்
துச்சகனைத் தையமிடச் சொன்னானே—பூசலா
லுன்னியவு னம்புக் குடைந்துமா லாயர்குலக்
கன்னியர்தஞ் சேலை கவர்ந்தானே—பின்னங்.
குருகுலவேந் தன்பரவர் கொம்பனையைச் சேர்ந்தான்
முருகன் குறத்திகலன் மொய்த்தான்—உருவிலியுன்
பேரம்பு தைத்தாற் பெருமைகுலம் பார்ப்புதுண்டோ
ஈரம் பெருநெருப்புக் கில்லையே—மாரனே
மாது விரும்பு மணவாள னைத்தனக்குத்
தூது விடுத்தான் சுரபதிதான்—எதுசெய்வான்
மங்கைதம யந்திமறுக்க நளன் வடிவாய்ச்
சங்கைபுறச் சென்றானுன் சண்டைக்காத்—தங்கமல
ரம்பா லரம்பையருக் காசைகொண்டோர் வேள்விசெய்து
வெம்பாத புங்கவராய் மேவுவார்—தெம்பாக

வெந்தவித சீநினைத்தா யென்றாலு மூவுலகு
மந்த விதகடக்கு மங்கசனே—வந்தவர்க்குத்
தானே சுகந்தரலாற் சங்கரனென் றார்சிவனை
யானேறி யின்பமருள் வேனென்றே—யூனை
யுலர்த்து தவசா லொடுங்கிப் புலனும்
புலர்த்தி சிறைக்கோலம் போல—வலைந்தோர்கள்
இம்மையிலே பட்டசள மெல்லாங்கண் டோமினிமேற்
செம்மையுட னென்னசுகந் தேடுவரோ—அம்மம்மா
காமா வுனைப்பணியுங் காமுகரைக் கண்டோமே
பாமா மலர்ப்பா யமளியின்மேற்—றாமே
சயனசு கம்பெறுவார் சார்ந்தபுல னைந்தும்
பயனுறவே யின்பம் பலிக்க—மயலகலப்
பக்கந் தனிலிருந்து ‡ பாவையர்கை மேற்கொடுக்கச்
சொர்க்கம் பெறுவார் சுகம்பெறுவார்

‡ பாவையர் கைமேற்கொடுக்க எனப்பிரித்துப் பொருள்கொள்க.

உ

சிவமயம்.

# நன்னூல் முன்னூற்பா.

பண்டிதர், நாராயணசாமியார், திருவையாறு.

முகவுரை பதிக மணிந்துரை நான்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

இச் சூத்திரத்தை யான் ஊன்றிப் படிக்குங்காலத்து 'முகவுரை' முதலியவற்றின் வைப்புமுறையும் அவற்றிற்குத் தனித்தனி உரையாசிரியர்கள் கண்ட பொருளன்றிச் சிலவற்றிற்கு வேறுபொருளும் புலப்பட்டன; அவற்றை யீண்டெழுதுவான் துணிந்தனன்.

பாயிரங்கூறியே நூல்கூறுதல் மரபுபற்றிய செய்கையாதலின் அதனை இத்துணையதென வகுத்துப் பின்னிலக்கணங் கூறி யுணர்த்துவான் றொடங்கியவர், பாயிரம் நூலின் முகத்தே ஒரு தலையாக நின்றாலன்றி நூல் சால்புடையதாகா தென்பது இம் 'முகவுரை' முதலிய காரணக்குறிகளான் நன்கு விளங்குதலின், முன்னோர், தனித்தனியே ஒவ்வோர் காரணம் (மூலம்) பற்றிக் கூறிய பாயிரப் பெயர் வேறுபாடுகளை யெல்லாம் தொகுத்து இச்சூத்திர முகத்தான் உணர்த்தினரென்க.

## வைப்பு முறை

'முகவுரை, பதிகம், அணிந்துரை என்னும் இம்மூன்றனுள் 'நான்முகம்' முதலியன அடங்குதற்கு ஏற்புடையனவாதலால் இம் 'முகவுரை' முதலிய மூன்றும் முன்னர் வைத்தற்கு ஏற்புடையனவாயின. 'புறவுரையும், தந்துரையும்' நான் முகத்தின் கண் நிற்றலான் முகவுரையின் கண்ணும், நூலினுட்

கூறும் பலவகைப் பொருளையுந் தொகுத்துக் கூறின் பதிகத்தின் கண்ணும், நூலினது பெருமை முதலியன விளங்க அலங்கரித்து (அழகுபடுத்தி) உரைப்பின் அணிந்துரையின் கண்ணும் அடங்கு மென்க.

அன்றியும் 'புறவுரை, தந்துரை" யென்ற துணையானே, பாயிரம் நான்முகத்தே இன்றியமையாததாய் நிற்றற்குரிய தென்பது மற்றைய காரணக் குறிகளான் இனிது விளங்குமாறு போன்று இனிது விளங்காமையானும் அவை பின் வைத்தற் கேற்றவாயின வெனினுமாம்.

அவற்றுள்ளும் 'புறவுரை' யென்னின் அது நூற்புறத்தே நூற்குறுப்பாய் நிற்குமுரையெனப் புலப்படுவதுபோலத் 'தந்துரை' யென்ற துணையானே அங்ஙனமினிது புலப்படாமையின் புற வுரைக்குப்பின் வைக்கப்பட்டதென்க. அன்றித் 'தந்துரை' யின் 'புறவுரை' பற்றியுடைமையான் தந்துரை, பின்வைத்தற் றகுதி பெற்றதெனினுமாம்.

இனித் தந்துரையாவது-நூற்குள்ள நுதலிய பொருளல்லன வற்றை அதற்குத் தந்துசொல்வது என இந்நூலுரையாசிரியர் எழுதியதுகொண்டு! நூற்குள்ள நுதலிய பொருளல்லனவாவன மதம் அழகு முதலியன எனக்கூறி இம்மதம் அழகு முதலிய வனவெல்லாம் நூற்குமிக இன்றியமையாதனவாதலால் இவற்றை யுணர்த்தும் 'தந்துரையை' 'புறவுரை' க்கு முன்னிறுத்தலா மெனின் மதம் அழகு முதலியன நூலிலக்கணமாமென்ப துடம்பாடாகலான் நூலிலக்கணங் கூறுதல் பொதுப்பாயிரமாம் என்பது எல்லா ஆசிரியர்க்கும் ஒப்பமுடிந்த தன்றென்பது,

" ஈவோன் றன்மை ஈதலியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
வீரிரண்டாகும் பொதுவின் றொகையே "

எனவரும் பழஞ் சூத்திரத்தானும் நக்கீரனார் முதலியவுரை யாசிரியர் உரையானும் தெரிதலால் எல்லாவாசிரியர்க்கும் ஒப்ப முடிந்த முன்னுன்கையும் உணர்த்தும் புறவுரையை முன்னிறுத் தினரென்க.

'புனைந்துரை' 'அணிந்துரை' யின் மாட்டு மடங்குதலின் புறவுரை தந்துரைகட்குப் பின் வைக்கப்பட்டதென்க. சிறப்புடைய முகவுரையின்கண் தங்குதலின் 'நான்முகம்' அவைகட்கு முன்னிறுத்தப் பட்டதென்க.

'முகவுரை' யென்ற துணையானே யெல்லா மடங்குதலின் அதனை முன்னும் எதனை யறிவதற்கு மாணக்கன் முற்படுகின்றானே அதனுட் (அந்நூலுட்) கூறும் பலவகைப் பொருளையுந் தொடுத்துக் கூறும் பதிகத்தை அதன் பின்னும் அவற்றை அழகுபடுத்தி யுரைக்கும் அணிந்துரையை அதன் பின்னுமாக நிறுத்தினரென்க.

'நான்முகம்' என்ற துணையானே எல்லா மடங்குதலின் நான்முகத்தை முன்னிறுத்தலமையுமெனினும் ஆன்றோரெல்லாரும் முகவுரையென்றே பெரும்பாலும் வழங்கலின் அதனையே முன்னிறுத்தினரென்க.

நான்முகமென்பதுமுகவுரையென்பதுபோலச்சிறந்தகாரணக் குறியாகலானும், அம்முகவுரையிலடங்குதலானும், நான்முகம் என்ற துணையானும் பதிகமும் அணிந்துரையுமடங்குதலானும் புறவுரை தந்துரையென்பவைகட்கு முன்னிறுத்தினரென்க.

அங்ஙனமாயின் முகவுரைக்கயலில் நிறுத்தலாமெனின் அதனல் ஒருபொருள் வேறுபாடு தோன்றுமையானும், பொருள் வேறுபாடுடையவற்றை யொருங்குவைத்து வேற்றுமையில்லாதவற்றைப் பின் வைத்தல் நன்றாகலானும் அயலில் நிற்றற்கேலாதாயிற்றென்க.

புறவுரை தந்துரைகள் பொருள் வேறு பாடுடையவேனும் வேறு காரணத்தால் பின்னிறுத்தினரென்பது முற்கூறியவுரையாற்றெளிக.

அணிதல் புனைதல் இரண்டும் அலங்கரித்தலை யுணர்த்தும் ஒருபொருட் கிளவிகளாயினும் அணிதல் என்பது வழக்குப் பயிற்சியுடைமையான் அணிந்துரையை முற்கூறினரென்க.

உவமையணி உருவகவணி விலக்கணி தீபகவணி சங்கீரண வணி சொல்லணி எழுத்துச் சொற்பொருள் யாப்பணி அணியியல்

" சந்தி பொருத்தித் தகுஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழப் புதவணித்தா—முந்தையோர்
செய்புள்போற் செய்த திருக்கோயில் "

'நிதலை யணிந்த தேங்கொண் மென்முலை' 'மணிமிடை பொன்னின் மாமை சாயவென்—அணிநலன் சிதைக்குமார் பசலை யதனல்' "கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்—நெஞ்சு பிணிக்கொண்ட வஞ்சி லோதி—பெருநா ணணிந்த சிறு மெல்லாக மொருநாள் புணரப் புணரின்—அரைநாள் வாழ்க்கையும் வேண்டல னியானே" 'விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல் மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி' 'அணி மிகு மென் கொம்பூழ்த்த' 'அணிவய லூரனொடு' 'அணிநிரை வாள் முறுவலம்பா வெயிற்றி' 'அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி' 'அணிநலந் தனியேவந் தருளுவது மழகாமோ' என வருவன வற்றாலும் பிறவற்றாலும் 'அணி' யென்பது பயில்வுடைத்தாதல் காண்க.

'அணிந்துரை' யென்பது பயிற்சியுடையதென்பதற்கும் புனைந்துரையிற் சிறந்ததென்பதற்கும் வேறு காரணங்க ளொன்றும் வேண்டியதில்லை;

" மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ ணல்லார்க் கணியும்போல்—நாடிமுன்
ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது "

என இந்நூலாசிரியர் கூறியதே போதியதாமென்க.

இனிப் புனைந்துரை யென்பது அணிந்துரை யென்பது போலன்றி இரு பொருட்படுதற் கேற்றதாகலானும், பின்னுரைத் தாரெனக் கோடலுமமையுமெனவொன்று.

* இனி, அணி யென்பது பெயராயும் வினையாயு நிற்கும்; புனை யென்பது வினையாயே நிற்கும்; அவ்வகையானு மணி சிறந்ததாதல் புலனு மாதலின் அதனடியாகப் பிறந்த அணிந்துரையை முற்கூறினுரெனக் கோடலுமொன்று.

இக் காரணக் குறிகளெல்லாவற்றினுஞ் சிறந்தன, 'முகவுரை, தான்முகம்' என்னுமிரண்டுமே யாதலால் அவற்றை முதலினும் நடுவினு நிறுத்தினுரெனினுமாம்.

'முகம் என்பது வடமொழியாதலானும், இந்நூலாசிரியர் வடமொழி முடிபுகளையுங் கொண்டுள்ளாராகலானும் அங்ஙனங் கொள்வேன் என்பதற் கறிகுறியாக முகவுரையை முன்னர் நிறுத்தினு'ரெனக்கூற வருவாருளராயினும் அவர் கூற்று, 'முகம்' என்னுஞ்சொல் தமிழில் வழக்கில் பயின்று வருதலேயன்றிச் செய்யுளினும் பலவிடங்களினும் பயின்று வருதலானும் முகப்பு, முகடு, முகத்தல் என்பன முதலியவற்றேடு ஒத்து வருதலானும் அவ்வுறாமென்க. வடமொழிபோன்ற தமிழ்மொழியை வடமொழித் திரிபென்றே கோடல் நிரம்பாதென்க.

ஒரு இல்லிற்குள்ள முன்னிடம், உள்ளுறைவோர் விளக்கமுற வெளியினிகழும் பொருளையறிவதற்கும், உண்ணிகழ்வனவற்றை வெளியிலுள்ளார் அங்ஙனமறிதற்கும் ஏதுவாக இருப்பதால் முகப்பு எனப்பெயர் பெறுவதுபோல, வெளியில் நிகழும் புலனைத்தையும் சேர, அள்ளிக்கொள்ளுவதுபோன்று நுகர்வதற்கு ஆன்மாவிற்குக் கருவியாயிருத்தலானும், ஆன்மாவினிடத்து நிகழுவனவற்றைப் பிறர் சேர அறிவதற்குக் கருவியாதலானும், முகம் எனப் பெயர்பெற்றதென நுண்மாணுழை புலத்தினர் கொள்வாராதலானும் தமிழ்ச் சொல்லாதலறிக. முக பகுதி அம் கருவிப்பொருளை யுணர்த்தும் விகுதியென்க. எல்லாப் புலன்களையுஞ்சேர முகந்து கொள்வதற்கு (நுகர்தற்கு) முகமே ஏற்ற கருவியாம், ஐம்பொறியுமதன்கணிகழ்தலின் என்க.

சீவக சிந்தாமணியில் 'எல்லாப் புலன்களுக்கும் விருப்பஞ் சேரலின், 'முகப்ப' என்றார்' என எழுதிய நச்சினார்க்கினியரது அருமந்த வுரைப்பகுதி யீண்டு நினைவிற்கு வருகின்றது.

---

* ஈண்டு புனை, யணி என்ற வடிவத்தைப்பற்றியே கூறிறென்க.

ஆன்மாவின் பண்பினை முகங்கருவியாக அறியலாமென்பது

" முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்"

என்னும் பொய்யா மொழியாற் றெளிவுறு மென்க.

இனி ஒருமொழியில் அம்மொழியை வழங்குகின்ற மக்களின் சிறந்தவுறுப்பும் வழங்குதற்கு இன்றியமையா வுறுப்பும் ஆகிய அக்கருவிக்குப் பிறமொழிப் பெயரையிட்டு வழங்கினரென்றல் எத்துணையும் பொருத்த மின்றென்க.

* 'முகம்' என்பது வடமொழியிலும் பயின்று வந்துள தெனின் முகத்தின் கண்ணே தொழிற்கருவியும் அடங்கியுள்ளது.

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவெனக்கொள்ளிற் பொருந்துமென்க. வடமொழிக்கே புரியதெனின் தமிழிற்கே புரியதுதான் வடமொழிக் கண் சென்றது எனக்கூறின் மறு மாற்றம் இன்றி விட நேருமென்க.

ஆதலால் இரு மொழியிலும் பயில்வுடைமையால் இரு மொழிக்கும் உரியதெனக் கோடலமையுமென்க.

இந்நூல் இருமொழியிலக்கண முதனூல்களையும் பின்பற்றிச் செய்யப்படுவதால் இருமொழிக்கும் பொதுவாகிய 'முக' வுரையை முற்கூறின ரெனினுமாம்.

இனி எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் ஆகிய அவற்றின் தொடக்கத்தில் மங்கலங் கூறியுள்ளார், இப்பாயிர அதிகார முதலிலும் மங்கலங் கூறவேண்டுமாதலான் மங்கலமொழியாகிய முகம் என்னுஞ் சொல்லை யுறுப்பாகவுடைய முகவுரையை முன்னிறுத்தினரெனினும் அமையும் என்க.

(தொடரும்.)

* முகம் எனவே தமிழில் வருதலானும் வடமொழியில் வேறு வடி வாகத் திரிதலானும், காரணங்களானும் வேறு படுதலானும் பிறர் மதம் பற்றி இங்ஙனம் கூறினனென்க.

# உடல்இயலும் உடல்நல வழியும்.

## பதினோராவது படலம்: முடிபுரை.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
உரத்தநாடு.

(முற்றொடர்ச்சி 120 பக்கம்.)

நமது மூன்றடுக்கு மாளிகை:—இதுகாறும் கூறியவற்றால் நம்முடல் எத்துணை அருமையான, அழகான, வியக்கத்தகுந்த, அரிய பொருள் என்பது விளங்கும். இதை நம் ஆருயிராகிய வேந்தர் வாழ்வதற்கென்றமைக்கப்பட்ட ஒரு மூன்றடுக்கு மாளிகைக்கு ஒப்பிடலாம். மக்களுட் சிறந்த அறிவாளிகளும், செல்வர்களுஞ் சேர்ந்து எத்துணையோ செலவழித்துக் கட்டியும் நம் மாளிகையிலுள்ள அரிய எற்பாடுகள் யாவையும் ஒருங்கே அமையும்படி கட்டக்கூடாத அத்துணை நலம் வாய்ந்த நன் மாளிகையாம் நம்முடல் என்பதை நாம் உணரவேண்டும். இறைவர் நம்மன்னர்க்குக் கட்டிக்கொடுத்திருக்கிற இவ்வரிய மாளிகைபோல் நாம் நமது கையாற் கட்டுகிற மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் உருண்டும் புரண்டும், எழுந்தும் விழுந்தும், ஓடியுந் தாவியும் வேண்டிய விடங்களுக்குச் செல்லக் கூடியனவா? சிறிதாய் ஒன்றரை அடி நீளத்திருந்து ஐந்தரை அடி நீளமும் அதற்குத் தக்கபருமனும் பருக்கக் கூடியனவா? வேறு சிறு மாளிகைகளைப் பிறப்பிக்கக் கூடியனவா? இல்லையே! இது மட்டுமா? ஒருவன் இவ்வரிய மாளிகையின் அறிவுடை ஏற்பாடுகளில் ஒன்றையாவது பின்பற்றி வீடுகட்டும் வழிகண்டு பிடிப்பானேயாயின் அவன் எத்துணைப் பெரிய செல்வன் ஆகலாம்! எத்துணை நன்மை உலகிற்கு அளிக்கலாம்! அதற்கு அளவேயில்லை! இவ்வரிய எற்பாடுகள் யாவை, இம்

மாளிகையின் பலப்பல பங்குகள் யாவை, அவற்றின் அரும் பயன், தொழில் யாவையென ஆராய்வாம்.

நமது தமியங்கி வண்டி :—வியப்பு வாய்ந்த நமது மாளிகையின் அடிப்படை மிக்க வலிவுள்ளதே! ஆனால் அது புவியினுள் புதைக்கப்படவில்லை!! இதனால் இம் மாளிகை அசைந்து, விழுந்து, சரிந்து போய்விடுமென்று நினைப்பீர்கள்! அவ்வாறுகாதபடி ஒன்றற்கொன்றுதவும் இரு தூண்களால் இம்மாளிகை தாங்கப்படுகிறது! இதனால் இம்மாளிகை உயர்ந்து நல்ல காற்றோட்ட முடையதாகிறது; மிகுதொலை தெரியக் கூடியதாகிறது. இத் தூண்களின் அடிப்பங்கு பரந்து விளங்குவதாலும், ஐவைந்து ஊன்றிகளுடனிருத்தலாலும் நம்மாளிகை எளிதில் விழுந்துவிடுவதில்லை. இத்தூண்கள் நடுவிலும், உச்சியிலும் மடங்கிக் கொடுத்து வேண்டியபொழுது மாளிகையைக் குறைந்த உயரமுடையதாக்குகின்றன! இதுமட்டுமா? இத் தூண்கள் நமது மாளிகையை வேண்டியவிடத்திற்குச் சுமந்து செல்லும் அருமையான நீங்காத் தமியங்கி வண்டியாகவும் இருக்கின்றன! இவ்வண்டிக்கென அகலமான தனிப்பாதை ஏற்படுத்த வேண்டியதில்லை; அதைக் கப்பி போட்டுக் கெட்டியாக்கவும் வேண்டியதில்லை! இவ்வண்டி மேட்டிலும் ஏறும், பள்ளத்திலும் இறங்கும், சேற்றிலும் போகும். அவ்வாறு போகும்போது முன்கூறிய ஊன்றிகள் நன்றாய்ப் பதிந்து சருக்காமலிருக்கும். இவ்வூன்றிகளைப் பயன்படுத்தாததுடன் நில்லாது மேலைநாட்டாரின் தாழ்ந்த பழக்கங்களைக் கைக்கொண்டு சிலர் அவைகளை நெருக்கித் தோலுறைகளால் மூடிவைப்பதால் நாளடைவில் இவ்வூன்றிகள் இன்னுஞ் சிறுத்துக் குறைந்தும் போய்விடக்கூடுமென அஞ்சவேண்டியதாயிருக்கிறது. இதுவன்றி இவருட் சிலர் இவ்வாறுள்ள அருமையான தமியங்கி வண்டி உடனிருந்தும் அதைச் சிறிதும் பயன்படுத்தாது 4000, 5000 ரூபாய் செலவழித்து ஒரு வண்டி வாங்கி அதற்கொரு பாகனையும் ஏற்படுத்தி நாள்தோறும் நாலைந்து ரூபாய் செலவழித்து இவ்-

வண்டியிலேயே போவதும் வருவதுமாயிருக்கின்றனர். இதனால் இவருடனிருக்கிற வண்டி சிறிது சிறிதாக வலுவற்றுச் செயலற்றுப் போவது என்ன குறைபாடு !

நமது படைத்தலைவர்கள் ;—இவ்வண்டி ஓய்ந்து சாய்ந்து நமது மாளிகை நீண்டு கிடந்த பின் எழும்பொழுது அதற்கு உதவியாயிருப்பன இரு ஊன்று கோல்கள். இவ்வூன்றுகோல்களே நமது மாளிகை நடுவில் இடம், வலமாக நின்றுகொண்டு அதற்கு இடையூறுவாராமல் காத்துக்கொண்டிருக்கும் நல்ல படைத்தலைவர்களாவர். யாரேனும் எதிர்த்தால் இவர்கள்தான் முற்சென்று தாக்குவர் அல்லது தடுப்பர். இவர்கள் ஒவ்வொருவரிடத்தும் ஐந்து சிற்றாள்களுளர். இவர்கள்தான் வில், வாள், துப்பாக்கி முதலியன ஏந்தி வெகு திறமையுடன் சண்டையிடுபவர்கள். இவர்களுள் ஐவருக்கு ஒருவர் விழுக்காடு பதின்மருக்கும் இரு அருங்குள்ளர்களுளர் ; இவர்கள் கட்டையாகவும் இருப்பர். இக்குள்ளர் ஒவ்வொருவரும் மற்றைய நால்வரையும் ஒவ்வொருவராகவோ பலராகவோ அண்டி வேலை செய்யக்கூடியோராதலின் இவர்கள் ஒத்துழைப்பால்தான் பலவகைப் போர்களும் நடக்கின்றன. இச்சிற்றாட்களும், படைத் தலைவர்களும் சேர்ந்து இவ்வகைக் கொடுந்தொழில் புரிவதன்றி நம்மாளிகையிலுள்ள மிகப்பல உயிர்களுக்கும் வேண்டிய உணவைத் தங்கள் பேருழைப்பால் தேடியுந் தருகின்றனர். இவ்வாறு கடவுளைப்போல் ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் புரிவதில் இவர்களுள் இடதுபக்கலில் உள்ளோர் சிறிது சோம்பலுடையவராவர் ; திறமையுங் குன்றியவராவர். ஆனால் வலது பக்கலில் உள்ளோர் ஒரு சிறிதும் பொறுமையின்றித் தாமே முன் வந்து எவ்வேலையையுஞ் சலிக்காது செய்வர். இதனால் இடதுபக்கலில் உள்ளோர்க்கு இழிதொழிலும் இடுவாருமுளர். என்ன சொல்லினும் அடிமைகளைப்போல் முணுமுணுக்காது வருந்தி உழைப்பவர் இவர்களைவிட உலகில் வேறெவருமிலர்! இவையன்றி இச்சிற்றாட்களே தங்கள் திறமையால் ஓவியக்காரர், பாணர், தச்சர், கொல்லர், சேணியர் முதலியவர்களாகிப் பல அரிய வேலைகளையும் பழக்கத்தால் செய்கின்றனர். இவர்கள்

ஒவ்வொருவரிடத்தும் ஒரு அரிய படைக்கலமிருக்கிறது. இது அவர்களுக்கு உறுதிகொடுப்பதன்றிக் கிள்ளவும், வெட்டவும் வெகு அருமையாய்ப் பயன்படுகின்றது. இவைகளையெல்லாம் அடக்கியாளுகின்ற படைத் தலைவர்களாகிய ஊன்றுகோல்களும், இவைகளுக்கு இணையாகிய தமியங்கி வண்டியாகிய இரு தூண்களும் நம்மாளிகைக்கு எத்தனை வகையில் உதவியாயிருக்கின்றன பாருங்கள்! இவைமட்டுமா? நம்மாளிகை நீரித் குளித்துத் தோணிபோல் மிதந்துசெல்ல நேரும்பொழுது தக்க பழக்கத்தால் இந்நான்கும் நான்கு துடுப்புகளாக அமைந்து தள்ளி அத்தோணியைப் பலவழிகளிற் திருப்பிச் செலுத்துகின்றன. என்னே இவைகளின் பெரும்பயன்!

நமது சுவர்கள் :—இவை நான்கும், நமது வியப்பு வாய்ந்த மாளிகையுஞ்சேர்ந்து இருநூற்று ஆறு தனிச்சுவர்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இச்சுவர்களும் ஐவேறு வகையாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, பல அறைகளாகி உள்ளுள்ள மென்மைவாய்ந்த பொருள்களையெல்லாங் காப்பாற்றிக்கொண்டு இருக்கின்றன. வேறெச்சுவரும் இவைகளைப்போல் முரிந்தால் வேண்டிய பசையை உண்டாக்கிக்கொண்டு ஒன்றாக ஒட்டிக் கொள்ளும் இயல்புடையதன்று; வேறெச்சுவரும் நமக்குக் கடப்பாரை, மண்வெட்டி, கோடரி, அரிவாள் முதலிய கருவி போன்றிருந்து பொருள்களைக் கிளப்பவுந் தூக்கவும், பிளக்கவும் இன்னும் இத்தகைய பல வேலைகளைச் செய்யவும் உதவுவதில்லை; வேறெச்சுவரும் நமது வீட்டின் மூலை முடுக்கு, இண்டு இடுக்குகளுக்கெல்லாம் தூயகாற்றைச் சுமந்துசென்று கொடுக்கத் தக்க கூலியாட்களைப் பல்லாயிரக் கணக்காய்ப் பெற்றுத் தருவதில்லை! வேறெச்சுவரும் வீட்டிற்கு வேண்டிய வேலைக் காரர்களைத் தாங்கிக் கொண்டிருப்பதில்லை!!!

நமது வேலையாட்கள் :—இவ்வாறுள்ள நமது சுவர்களால் தாங்கப்பட்டு நம்மாளிகையிலிருக்கிறவர்களைப்போல் ஒரு பெரிய அரண்மனையிலுங்கூட நினைக்குமுன் தட்டாது வேலை செய்யக் கூடிய ஐந்நூற்றுச் சில்லரை வேலைக்காரர்களைக் காணமுடியாது.

இவர்களுள் ஒருவகையினர் முற்கூறிய சுவருள் ஒன்றை ஒரு கையாலும், மற்றொன்றை மற்றொரு கையாலும் பிடித்துக் கொண்டு தொங்கிக்கொண்டே அவைகளைத் தக்க கருவிகளாகக் கொண்டு எவினை வேலை செய்கின்றனர். இவர்களே நம் மாளிகையைச் சுமந்து செல்லுபவருமாவர். மற்றொருவகை வேலையாட்கள் தாமாகவே குறிப்பறிந்து மூவா மருந்தாய் எவாமல் நின்றுணர்ந்து பல வேலைகளைச் செய்துகொண்டே யிருக்கின்றனர். இவர்கள் ஒருநொடிப்பொழுது வேலை நிறுத்தஞ் செய்யினும் நம்மன்னர் இம்மாளிகையைவிட்டு அப்பால் சென்று விடவேண்டியதுதான். எனினும் இவர்கள் இறுதிக்காலம்வரை சலிக்காது வேலைசெய்துகொண்டே யிருக்கின்றனர்! என்ன பொறுமை! இவர்களை இவ்வேந்தரின் அமைச்சர் வந்து தடுத்தாலும் தட்டாது அவ்வேந்தரிடத்துள்ள அன்பின்மிகையால் வேலை செய்துகொண்டேயிருந்து அவர் இம்மாளிகை முதலிய வற்றால் அடையும் இன்பதுன்பங்களிற் சலித்து நீங்கும்போது தான் இவர்கள் தங்கள் வேலைகளை நிறுத்துவர், என்ன போன்பு!! இவர்கள் ஒருவருக்கொருவர் மிக ஒற்றுமையாய்த் தொலைப்பேசிக் கம்பிகளின் (Telephone Wires) வழியே செய்தி தெரிவித்துக் கொண்டு வேண்டிய அளவுப்படி வேலைசெய்வர்! இவையன்றி இவ்வைகூறு வேலைக்காரர்களுஞ்சேர்ந்து நம்மாளிகை குளிர்ந்து போய் வேந்தரை வெளிக்கிளப்பாவண்ணம் வேண்டிய தீயை மூட்டிக்கொண்டே யிருக்கின்றனர்! என்ன வேலைப்பாடு!!

நமது சட்டை:—இவ்வுள்தியன்றி வெளித்தியும் மிகினுங் குறையினும் நம்மாளிகைக்கு நோய் செய்யுமாதலின் அவ்வாறுகாதபடி இவ்வேலையாட்கள் யாவருஞ்சேர்ந்து (என்ன ஒற்றுமை!) அணிந்துள்ள அருமையான சட்டையொன்று இத்தீயை அளவுபடுத்திக்கொண்டே யிருக்கிறது! என்ன அறிவு! இச்சட்டையைப்போல் பிடிப்பாய் இடத்திற்குத் தக்க தடிப்புடனும் வலுவுடனும், நமது வேலையாட்கள் வீங்கினுஞ் சுருங்கினும், வளரினும், இளைக்கினும் தாமும் உடன்பட்டு ஒட்டியிருக்கக்கூடிய முழுமீட்சியுடையதொரு சட்டையை ஒரு தையற்காரனும் தைக்க முடியாது; அவனுக்கு இத்தகைய

துணிபோல் எக்கடையினுங் கிடைப்பதரிது. இச்சட்டை கிழிவதுமில்லை, பீத்தலாவதுமில்லை; அமைச்சரின் அறியாச் செய்கைகளால் ஓட்டையாயினும் பின் தானாகவே மூட்டிக் கொள்ளும்! இதற்கு வெள்ளையடித்தலும், நிறம் பூசலும் (Varnishing, painting) தேவையில்லை. ஏனெனில் இது எப்பொழுதுந் தன்னைத்தானே புதுக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் இதை நாள்தோறும் ஒரு முறையாவது கழுவலும் நாலுநாளைக்கொருமுறை நெய்பூசிக்கழுவலும் இன்றியமையாததாயிருக்கிறது. ஏனெனில் இச்சட்டை இதிலுள்ள பல சாக்கடைகளின் வழியாகத் தண்ணீரையும், அழுக்கையும் நீக்கி நமது மாளிகையை எப்பொழுதும் தூய்மையாக்கிக் கொண்டேயிருக்கிறது. என்றாலும் இது தண்ணீரையுங் காற்றையும் உள்விடாது. என்ன விந்தை! இன்னும் இச்சட்டையின்மேல் படுபவைகளின் தன்மைகளையெல்லாம் (அவற்றின் வன்மை, மென்மை, சூடு, குளிர், விரைவு, மெது முதலியவற்றை) அறிவிக்கும் ஒற்றர்களிற் பலர் இதில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். என்ன இடம்பாடு!

நமது கீழறைக்கு:—இவ்வருஞ் சட்டையைப் போர்த்துக் கொண்டிருக்கும் வேலையாட்களும், அவர்களைத் தாங்குகிற சுவர்களும் மூன்றடுக்குகளாகும்படி இணைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் கீழடுக்குத்தான் தக்க காப்புடையதன்று. இதனால் இது வெகு எளிதில் கொழுத்துப், பருத்துச், சரிந்து பானைபோலாகும். இயல்புடையது. இதனுள் இருக்கிற ஒரு களஞ்சியத்துள் கொள்ளுவதற்குமேல் உணவுப் பொருள்களைப் போட்டுத் திணித்துத் திணித்து வைத்தால் அது பருக்காமல் வேறென் செயும்? இதனால் அக் களஞ்சியம் படும்பாட்டை உணர்கின்றார்களில்லையே! ஐயோ!! கொடுமை!!! இக்களஞ்சியம் நாம் கட்டுகிற குதிர், களஞ்சியங்களைப்போலன்றிப் பிடிக்காதவற்றை அப்படியே வந்த வாயால் தள்ளிவிடும்; சிறிது, மிகுதியாயின் எதிர்க் கழித்துவிடும்! இதற்குப் பிடித்தவற்றைக் கடைந்து கடைந்து கூழாக்க இதன் சுவற்றில் ஏவாமல் வேலை செய்யும் மூன்று இடைச்சிகளுளர். இவர்களுக்கு வேண்டிய கரை நீர்களைத்

தயாரிக்க இச் சுவற்றிலேயே ஊற்றுகள் போன்ற பலப்பல பொருட்டிரிபுக் கூடங்கள் (Chemical Laboratory) இருக்கின்றன. இவைகளிலும் பிற் கூறப்படும் இவைபோன்ற மிகப் பல கூடங்களிலும் வேலை செய்கின்ற எண்ணிறந்த மக்களைப் போல் பொருட்டிரிபின் (Chemistry) கூறிய நுட்பங்களை யெல்லாம் உணர்ந்த அறிவுடை மருத்துவர் உலகில் இல்லவே இல்லை; இனி யுண்டாகப் போவதுமில்லை யென்று சொல்லலாம்! ஏனெனில் இவர்கள் கூட்டுப் பொருள்களை (Compounds) மிக எளிதில் தனிப்பொருள்களாகப் பிரித்துப் பின் அத்தனிப் பொருள்களைக் கொண்டு தக்க, மிகச் சிக்கலான கூட்டுப் பொருள்களை ஒருவகை ஒலி, வெடி, ஆட்கொலையுமின்றிக் கட்டுகின்றனர்! என்ன வேலைப்பாடு!! இவ்வாறே நம் களஞ்சியச் சுவரின் கூடங்களிலுள்ள மக்கள் உப்பிலிருந்து உப்புப் புளிப்பை இதுகாறும் ஒருவராலுங் கண்டிராத வழியில் செய்கின்றனர்; இதுவன்றி இன்னுஞ் சிறந்த ஊன் கரை பொருளையும் உண்டாக்குகின்றனர். இவை யாவுஞ் சேர்ந்து உணவுப் பொருள்களைக் கூழாக்குகின்றன. இதற்கெல்லாம் அடிப்படையான நமது களஞ்சியம், மாளிகையின் மேலடுக்கி லிருக்கிற பெருவாசலில் துவங்கி, நடுவடுக்கில் செல்லும் போது ஆழகிப் பின், கீழடுக்கில் வந்ததும் குதிர் போல் உப்பிப் பின் நீண்டு சிறுத்த குழாயாகி ஈரிடத்தில் மடங்கிக் கொல்லை வாயிலில் முடிகின்ற நமது மாளிகையின் நடுவே செல்கின்ற, ஒரு செஞ் சுக்தின் மிக அகன்ற பங்காகும். இதற்கும் சிறுத்து நீண்ட பங்கிற்கு மிடையே ஒரு அறிவுடைக் கதவு இருக்கிறது. அது உணவுப் பொருள் கூழான பக்குவங் கண்டு விடும் பான்மையது! இவ்வாறு விடப்படும் பாகில் கரைபடாதுள்ளதைக் கரைக்கவும், கரைபட்டதை உறிஞ்சவுந்தான் சிறுத்து நீண்ட பங்கிருக்கிறது. கரைப்பதற்கு உதவியாக ஈண்டும் இடைச்சிகளிருந்து கடைவ தன்றி மூன்று பெரும் வேலைக் கூடங்களிலிருந்து (Laboratory) மூன்று வகையான கரை நீர்கள் உண்டாகி வந்து விழுகின்றன. இவைகளுந் தக்க மருத்துவர்களா லுண்டாக்கப்பட்டு ஊணவைக் கரைத்துச் சமைத்துப் பதன் படுத்துகின்றன. இச்சமையலைப் போல் நம் சமையல் அறிவுடையதுமன்று, தக்கப் பக்குவம்

படுத்துவது மன்று. இவ்வாறு பக்குவ மடைந்ததை உறிஞ்ச எண்ணிறந்த சிறு நாக்குகள் இக் குழாயின் சுவற்றிலேயே தொங்கிக்கொண்டிருக்கின்றன. இவைகள் அறிவுடை மருத்துவர்களாய் நம் மாளிகையில் வாழ்பவர்க்கு வேண்டியவற்றையே உறிஞ்சிக்கொண்டு வேண்டாததை விட்டுவிடுவர். இவ்வாறு மிஞ்சிய சக்கை அடுத்துள்ள மொத்தக் குழாய்க்கு அனுப்பப் பட்டுப் பின் ஒரு சாக்கடை வழியே வெளித்தள்ளப் படுகிறது. இது இவ்வாறாக முன் நாக்குகளால் உறிஞ்சப்பட்ட உணவு எல்லாம் பல வழிகளிற் சென்று சேர்ந்து ஒரு பெரிய கரிய செய் குன்றிற்கு வந்து சேருகிறது. இக்குன்றும் நமது மாளிகையின் மற்றைய உறுப்புகளைப்போல் ஒரு தொழிலுடன் நில்லாது பல தொழில்களைச் செய்கிறது. முதலாவதாக ஒரு பெரிய சூட் டடுப்பாக இருந்துகொண்டு நம் மாளிகையில் வாழ்வோர்க்குத் தீங்கிழைக்கும் நச்சுக்களையெல்லாம் தக்க மருத்துவர்களினுதவியால் பொறுக்கித் தொகுத்து எரித்து விடுகிறது. நம் சுவர்கள் பெற்றுத் தருகிற செங் கூலிகள் இறப்பவர்களை யெல்லாம் எரிக்கும் சுடுகாடுமாக இருக்கிறது. இரண்டாவதாக நம் மாளிகையில் ஏதேனும் தட்டாக விருக்கும் பொழுது உதவுவதற்காக இரும்பு, கொழுப்பு, அக்காரம், மாப்பொருள்களைச் சேமித்து வைக்கும் குதிராகவும் இருக்கிறது. மூன்றாவதாக நம் செஞ்சந்தின் ஒரு பங்காகிய சிறு குழாயில் வந்து விழுகின்ற ஒரு கரை நீரை உண்டு பண்ணுகிறது. இக் குன்றிற்கு உதவியாக நம் மாளிகையில் உண்டாகிற நச்சுகளைப் பிரித்து நீருடன் கலந் தனுப்புகிற இரு உயிர் முந்திரிக் கொட்டைகளும் இக் கிழடுக்கிலே தானிருக்கின்றன. இவை மீதூணினால் பேருழைப்பிற்குட்பட்டுக் களைத்து வேலையை ஒழுங்காய்ச் செய்யாது நம் மாளிகையைப் பல வழிகளில் வருத்தக்கூடும். இவை பிரிக்கும் நச்சுப்பு நீர் தங்குவதற்கு ஒரு அண்டாவாகக் கிழடுக்கிலேயே இருக்கிறது. அது நிறைந்தால் அந்நீரை வெளித்தள்ளத் தக்க ஒரு பிச்சுங் குழாய் இக் கிழடுக்கின்கீழ்த் தொங்கிக் கொண்டிருக்கிறது. இதனருகே சில மாளிகைகளில் ஒவ்வொரு அரிய அறையுண்டு. அதில் இரு கொட்டைகளிருந்து கொண்டு இம் மாளிகையைப் போன்ற வேறு மாளிகைகளைப் பிறப்பிக்கக் கூடிய வித்துக்களை

உண்டாக்குகின்றன. வேறு சில மாளிகைகளில் இவ் வித்துக்கள் முளைக்கக்கூடிய நன்னிலம் இருப்பதன்றி அவ்வித்துக்கள் முளைப்பதற்கு வேண்டிய எரு, தழை, நீர் முதலிய யாவும் உண்டாக்கப் படுகின்றன! என்ன அரிய ஏற்பாடு!!

நமது நடு வடுக்கு :—இக்கீழடுக்கையும் இதற்குமேலுள்ள நடு வடுக்கையும் தடுத்துநிற்பவன் ஆமைபோன்ற ஒரு ஏவாவேலையாள். இவனுக்குமேல் நாற்புறமுங் கவிந்துகொண்டு கெட்டியாய்க் காக்கிறசுவர்கள் பக்கத்திற்குப் பன்னிரெண்டாக இருபத்திநான்கு உண்டு. இவைகளுக்கிடையேயும் பல ஏவாவேலையாட்கள் தொங்கிக்கொண்டிருக்கின்றனர். இவ்வேலையாட்கள் யாவரும் இந்நடுவடுக்கைப் பெரும்பகுதி அடைத்துக் கொண்டிருக்கிற இருபெருந்துருத்திகளை இயக்குகின்றனர். இவர்கள் ஓயாது நொடிக்குப் பதினெட்டு முறையாக ஊதிக்கொண்டிருப்பதால்தான் நம்மாளிகைக்கு நல்ல காற்று கிடைக்கிறது; அழுக்குக் காற்றும் நீங்குகிறது. எவ்வாறெனின் இத்துருத்தி விரியும்பொழுது மேலடுக்கில் உள்ள பெரிய வாயிலுக்குமேலுள்ள இரு சிறு பலகணிகளின் வழியே தூயகாற்று உட்புகுகிறது. இப்பலகணிகள் மிக வியக்கத்தக்கன. இவைகளைப்பற்றி மேலடுக்கை ஆராயும்பொழுது பார்ப்போம். ஈண்டு இவை உட்புகும் காற்றை தூசு, நச்சுக்கூடுகளின்றி வடிக்கட்டுவதன்றி, போதிய சூடும், ஈரமும் அடையும்படி செய்கின்றனவென்பது நோக்கத்தக்கது. இவ்வாறு சென்ற காற்றே துருத்தி சுருங்கும்பொழுது அதே பலகணிகளின் வழியே அழுக்குக் காற்றாகி வெளிப்படுகிறது. இவ்வாறு இத்துருத்திக்குமட்டும் நல்ல காற்றுவந்தால் போதுமா? நமது மாளிகையின் எல்லாப் பங்குகளிலும் உட்கார்ந்து உழைத்துக்கொண்டிருக்கிற எண்ணிறந்த மக்களுக்கும் தூயகாற்று வேண்டுமன்றோ? அவர்கள் கழிக்கிற அழுக்குக்காற்றை வெளிப் படுத்த வேண்டுமன்றோ? இதற்குத்தக்க வழிதான் நம்மாளிகை முழுதும் பரவிச் சுற்றிக்கொண்டிருக்கிற செந்நீராகும். இந்நீரே நம்மாளிகை முழுவதும் பேராறுகளாகவும், சிற்றாறுகளாகவும்,

கால்வாய்களாகவும், சிற்றோடைகளாகவும் ஓடிக்கொண்டிருக்கிறது; இதுபாயாத இடமில்லை. இந்நீரைப்போல் அரிய உயிருடைய நீர் உலகில் வேறொன்றுமில்லை! நம் சுவர்கள் உண்டாக்குகிற செங்கூலிகள் எண்ணிறந்து இதில் மிதந்து செல்வதாற்றான் இது செந்நீராகின்றது. இக்கூலிகள் மிகச் சிறுவர்களேனும் சுமந்து செல்லக்கூடிய தூய உயிர்க்காற்று மிகுதியாகவே இருக்கிறது. இவர்கள் இந்நீரில் மிதந்து குருத்தியிலிருந்துசென்று மூலை, முடுக்கு, இண்டு இடுக்குகளிலெல்லாம் உள்ள மக்களிடம் தப்பாது தூயகாற்றைத்தந்து கறுப்பர்களாக மாறுகின்றனர். அம்மக்கள் உண்டாக்கும் கரிக்காற்றை இச்செந்நீரிலுள்ள உப்பு ஒன்று கரைத்துக் கொண்டுவந்து குருத்தியில் சேர்க்கிறது. இவ்வாறு போம்போதும் வரும்போதும் ஓடுகிற ஆறுகள் வாய்க்கால்கள் ஓடைகள், நீராறுகள் நீர் வாய்க்கால்கள் நீரோடைகளாயிருப்பதன்றி காற்றாறுகள் காற்று வாய்க்கால்கள் காற்றோடைகளாகவும் இருக்கின்றன! என்ன விந்தை!! இதுவன்றி இந்நீரே நம்மாளிகையில் வாழ்கின்ற மக்கள் யாவருக்கும் வேண்டிய நீரையுஞ் சுமந்துசென்று கொடுக்கிறது. நீர் நமக்கு எவ்வளவு இன்றியமையாததோ அதைப்போல் இம்மாளிகையிலுள்ளோர் யாவருக்கும் இன்றியமையாததொன்று. இதனின் நம்மாளிகையின் முக்காற்பங்கு நீரே யாமென்று கணக்கிட்டிருக்கின்றனர். இவ்வாறுதவும் நீரையன்றி நம் மாளிகையில் வாழும் எண்ணிறந்த, பலதிறப்பட்ட மக்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய கட்டியுணவையும் இச்செந்நீரே சுமந்துசென்று தருகின்றது. இதுவன்றி அவர்கள் கழிக்குங் கட்டிக் கழி பொருள்களையுங் கரைத்து நீக்குகின்றது. இவையெல்லாம் போதாமற்போலும் எண்ணிறந்த வெள்ளை வீரர்களையும் காவற்காரர்களையும் இந்நீரே சுமந்து செல்கின்றது. வீரமென்றால் இவர்க்கே தகும்! எதிரிகள் எங்கே எங்கேயென்று தேடித்திரிந்து சண்டையிடும் வீரர்கள் இவர்களைப்போல் நம் படைகளில் ஒருவரும் இலர். சண்டைக்குச் செல்லினும் இரண்டிலொன்றுதான்; ஒன்று எதிரி இறக்கவேண்டும்; அல்லது தான் சாகவேண்டும்! இவ்வாறு சண்டையிட, எதிர்த்து நீந்தியும், வாய்க்கால்களின் கரையைப் பொத்துக்கொண்டு புறம்பேயும்

போவர்!! என்ன அக்கறை!!! இவைமட்டுமன்றி நம் வாய்க்கால்களின் கரையில் எங்கேனும் ஓட்டையுண்டாயின் அங்கேயுள்ள செந்நீரை உறையச்செய்து ஓட்டையையும் அடைப்பர். என்ன வேலைப்பாடு!

இவ்வாறுள்ள வீரர்களையும், கூலியாட்களையும், உணவுப் பொருள்களையும், கழிபொருள்களையும், நீரையுங் காற்றையுஞ் சுமந்து செல்லுகிற இந்நீரை நம்முடலின் எல்லாவிடங்களிலும் பாவும்படி இறைப்பதற்கு இவ்விரண்டாம் அடுக்கிலேயே ஒரு அரிய ஏற்றம் சிறிது இடப்புறமாய் உளது. நாம் செய்கிற ஏற்றம் கீழுள்ள ஊற்றுநீரை மேலிறைக்கிறது. ஆனால் இவ்வேற்றம் இறைக்கும் நீர் இதற்குமேலுள்ள (இடது) ஊற்றில் ஊறுகிறது. இந்நீர் இறைபடும்பொழுது வந்தவழியே சென்று விடாதபடிக்கு ஊற்றிற்கும் ஏற்றத்திற்குமிடையே ஒரு ஒருவழிக்கதவுளது. இவ்வாறு இறைக்கப்படுஞ் செந்நீர் நமது மாளிகை முழுதும் பலவாய்க்கால் வழியே பாவிக் கருநீராகித் திரும்பி பல வடிகால் வழியே சென்று முற்கூறிய ஊற்றிற்கு அண்டையிலுள்ள வேறொரு வலது ஊற்றில் ஊறுகிறது. இவ்வூற்றும் இக்கருநீரை கீழுள்ள இன்னொரு வலது ஏற்றத்திற்கு ஒருவழிக் கதவின் வழியே அனுப்பவே அது இக்கருநீரைச் செந்நீராக்கத் துருத்திக்கு அனுப்புகிறது. ஆங்கு இக்கருநீர் கடற்பஞ்சைப்போல் இருக்கிற எண்ணில்லா அறைகளிலும் பாய்ந்து பாவி வெளியிருந்து வருந்தூயகாற்றால் செந்நீராகிப் பின்வடிந்து முதற்கூறிய இடது ஊற்றில் ஊறிப் பின் முற்கூறியபடி நம் மாளிகை முழுவதும் பாவுகிறது. இவ்வாறு சுற்றிச் சுற்றி வருவதற்காக ஏற்றமும், தூய்மையாக்குவதற்காகத் துருத்தியும் ஓயாது அல்லும் பகலும் உழைத்துக்கொண்டே வருகின்றன. இவ்விரு வேலையாட்களுக்கன்றி கீழடுக்கிலுள்ள ஏவா மக்களுக்கும் ஓய்வு இரவில் சிறிது மெதுவாய் உழைப்பதனாலேதான் உண்டாகிறது. இவ்வாறு இவை மாளிகையின் இறுதிப்பொழுதுவரைக்கும், பெற்றதைக் கொண்டு மகிழ்ந்து, வேலை நிறுத்தஞ் செய்வதேயில்லை! என்ன பொறுமை!!

நமது மேலடுக்கு :—இதுதான் நடுவடுக்கின்மேல், நடுவே நிற்பதொரு உப்பரிகையாகும். இதிற்றான் நமது வேந்தர் பெரும்பகுதியாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இவருக்கு நான்கு அமைச்சர்களுண்டு. அவருள் ஒருவர் உணர்வர், ஒருவர் நினைப்பர், ஒருவர் தெளிவர், ஒருவர் தற்பெருமைகொண்டு யாவற்றையும் அறிவர். இந் நால்வரிடத்தும் ஐந்து ஒற்றர்களும் ஐந்து ஆட்சியாளர்களும் உளர். இவர்களுக்கென்றேற்பட்டுள்ள மிக அரிய கருவிகளைப்போல் உலகில் ஒருவருக்கும் இல்லை. ஐந்து ஒற்றர்களுள் ஒருவர் இவ்வுப்பரிகையின் உச்சியில் முன்புறமாக உள்ள இரு தொலைப்பார்வையாடியின் வழியே எல்லாப் பொருள்களையும் பார்த்து அவற்றின் வடிவம், நிறம், தொழில் முதலியவற்றைக் கண்டு வந்து அறிவிக்கின்றனர். இத் தொலைப்பார்வையாடிகள் பெரும்பகுதி அதன் பெயருக்கேற்ப தொலைப்பொருள்களையே பார்ப்பதற்கென்றேற்பட்டிருக்க அவைகளைக் கிட்டத்துள்ள நன் பொருள்களையே பார்த்துப் பார்த்துக் கெடுத்துக் கொள்ளுநவாருமுளர். என்னே இவர் அறியாமை! மற்றொரு ஒற்றர் இவ் வுப்பரிகையின் இரு புறங்களிலுமுள்ள இருதொலை கேட்பியின் வழியாகத் தொலைவிலுண்டாகிற ஓசை, ஒலி யெல்லாம் கேட்டுக்கொண்டே யிருக்கின்றனர். இவர் நம் அமைச்சர்கள் அடங்கி ஒடுங்கியிருக்கையிலும் வேலை செய்து கொண்டே யிருப்பாதலின் நமது மாளிகையை இரவு முழுதும் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் இடங்களில் இளைப்பாற விடுவது என்ன அறியாமை! இத் தொலைக்கேட்பியின் விரிந்த வாய்வழியேதான் ஒலி அலைகள் சென்று கேள்வியை உண்டாக்குகின்றன. தொலைப்பார்வையாடிகளுக்கு இடையிலிருந்து துவங்கி கீழ்நோக்கி வருகின்ற இரு துளையின் வழியில் இருந்துகொண்டே மூன்றாவது ஒற்றர் நாற்றத்தை உணர்வர். இவர் நந்துருத்திக்குக் காற்றுச் செல்லும் பலகணியை அண்டியிருப்பதால் கெட்ட காற்றுவரின் விரைவாய் ஊதி அல்லது தும்மி வெளிப்படுத்தி விடுவர். நல்ல, மணமுடைய காற்றுவரின் விரும்பி இழுப்பர். இதுவன்றி இவர் நம் மாளிகையின் முன் வாயிலுக்குச் சற்று மேலிருப்பதால் நம்மாளிகைக்குட் செல்லும் உணவுப்பொருள்கள்

மணமுடையதாயிருப்பின் வாயூற உண்ணச் செய்வர்; விளக்கெண்ணெய்போல் வெறுக்கத்தக்க மணத்துடனிருப்பின் தள்ளிவிடச்செய்வர்! இருவருக்குக் கீழுள்ள முன் வாயிலிலுள்ள செங்குள்ளராகிய நான்காவது ஒற்றர் தன் மேற்படுபவர்களின் சுவையை உணர்ந்து நம் வேந்தருக்கு உண்டு காட்டியாக விளங்குவர். இவர் நம் மாளிகைக்குள் கட்டி, நீர்ப்பொருள் செல்லும் முன் வாயிலில் இருப்பதால் கெட்ட சுவையுடைய நச்சுப்பொருள்வரின் தட்டாது நீக்கிவிடுவர்; நற்பொருள்வரின் விருப்புடன் விழுங்கிவிடுவர். இவ்விரு வழியாலும் இவரை ஏமாற்றி நம் களஞ்சியத்தையும், சிறுகுழாயையும், செய்குன்றையும், பொதுவாக நம் மாளிகையையும் வருத்துவோர் மிகப்பலர். எவ்வாறெனின் அபின், கஞ்சா, கள், சாராயம், புகையிலை முதலியன தீய சுவையுடையனவாயிருந்தும், அவைகளை உண்ணப் புகும்போது இவ்வொற்றர் வேண்டாம் வேண்டாமென்று தடுத்தும் அவர் சொல்லைக் கேட்காது உண்டு உண்டு பழக்கத்தால் வேண்டாமென்று சொன்ன அவைகளைப் பெரிதும் விரும்பும்படி செய்து முற்கூறியுள்ளபடி உடலையும் உறுப்புக்களையுங் கெடுத்துக் கொள்ளுகின்றனர் சிலர். தீஞ்சுவையுடைய பொருள்கிடைக்கிலோ அவற்றை மிகுதியாக உண்டு நோவடைவர் சிலர். ஆனால் நம் அமைச்சர் அறிவு ஆற்றலுடையவராயிருத்தால் இவ்விரு தீய செய்கைகளும் நடவா. இச்செங்குள்ளர் நீர்ப்பொருளாக்கித்தான் சுவைப்பாராதலின் நம்மாளிகையுட் புகுகின்ற கட்டிப்பொருள்களைத் தூளாக்க முப்பத்திரண்டு திருவைக்கற்கள் பதினாறு பதினாறாக இருந்துகொண்டு வெட்டிக்கிழித்தும் அரைத்தும் மாவாக்குகின்றன. இவை அரைக்கும்பொழுது அரைப்பட்டுக் கீழ் விழுந்தவைகளை நன்றாய் அரைக்கும்படி தள்ளிக்கொடுப்பவர் நமது செங்குள்ளரே. இவர் ஒன்றல்ல பதினாறு பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்குபோலிருந்தும், நாள்தோறும் பன்முறை தவறாது வேலை செய்யினும், இவர் அகப்பட்டு அரைபடாதபடி அவ்வளவு திறமையுடன் வேலை செய்கின்றனர். இவ்வாறு மாவாக்கப்படுகிற உணவுப்பொருளைக் கூழாக்கி சுவைக்க சுற்றிலுமுள்ள ஆறு அரிய கிணறுகளிலிருந்து நீரானது குமிழி பரிந்து ஊறிக்கொண்டேயிருக்கிறது. இந்நீரையும் எவ்வளவு பயன்

படுத்தக்கூடுமோ அவ்வளவு பயன்படுத்தாது பலர் நம்மாளிகையை நலியவைப்பதன்றித் திருவையையும் எளிதில் இழந்து விடுகின்றனர். நமது ஐந்தாவது ஒற்றர் இம்மாளிகையின் நுனி முதல் அடிவரை உள்சட்டையில் இருந்து அதன் மேற்படுபவைகளின் வன்மை, மென்மை, சூடு, குளிர், விரைவு, மெது முதலியவற்றை அறிவிக்கின்றனர்.* இவ்வாறு இவ்வைவர் உணர்த்தும் செய்திகளன்றி நம் மாளிகையினுள்ளேயே பல ஒற்றர்களிருந்து கொண்டு பசி, நீர்வேட்கை, நிறைவு, அருவருப்பு, ஒக்காளம், மயக்கம், களைப்பு, பழு, நொய்ம்மை, உள்வலி, நடுக்கல், அச்சம், கூச்சம், தூக்கம், நோய் முதலிய பலப்பல செய்திகளையுந் தெரிவித்துங்கொண்டிருப்பதால் நம் மாளிகைக்கு வேண்டிய செய்தல் எளிதாகிறது. இவ்வாறு உணர்த்துஞ் செயலில்லாத, நாம் கட்டுகிற வீடுகள் நமக்குத் தெரியாமலே பழுதடைந்து திடீரெனக் கெடுவது நாமறிந்ததே.

இவ்வொற்றர்கள் தெரிவிக்குஞ் செய்திகளுக்குத் தக்கவாறும் நம் அமைச்சர்களின் ஆழ்ந்த எண்ணங்களுக்குத் தக்கவாறும் நடப்பவர் ஐந்து ஆட்சியாளர்கள் ஆவர். இவர்களுள் மிகத் திறமை வாய்ந்தவர் ஒரு வாயாடியாவர். இவர் முற்கூறிய செங்குள்ளருடைய பேருதவியாலும், நம் மாளிகையின் முன் வாயிலிலுள்ள இரு கதவுகளின் உதவியாலும், இவ்வாயிலுக்கு அடுத்தாற்போல் செஞ்சந்தின் துவக்கத்தில் உள்ள ஒரு பேசிப் பாடும் பெட்டியிலிருக்கிற இரு அரிய யாழ் நரம்புகளின் உதவியாலும் பல்வகை ஓசை ஒலியெலாம் உண்டாக்கி, நமது அமைச்சரின் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிப்பர்; அவர் உணர்ச்சியைப் பல பாடல்கள், இசைகளால் வெளிப்படுத்திப் பிறரை மகிழ்விப்பர். இவ்வரிய கருவிகளுக்கு இணையான இசைக் கருவிகள் மக்களால் செய்யப்படுவதில்லை; தக்க பழக்கத்தால் இவைகளுக்கிணையான இசை வேறொன்றுந் தருவதில்லை!

---

* இவ்வைந்து ஒற்றர்களைப்போல் நம்மனோர் பல கருவிகளைச்செய்ய முயன்றும் தொலைப் பார்வையாடியும் தொலைக் கேட்பியுந்தான் கண்டு பிடித்திருக்கின்றனர். ஏனைய தொலைமோப்பி, தொலைச்சுவைப்பி, தொலை ஊறி கண்டுபிடிக்கப்படவில்லை.

மக்களால் பயன் படுத்தப்படுகிற தொலைப்பேசி யவ்வளவு தொலை இவர் ஒலி செல்லாவிடினும் அத் தொலைப்பேசிக்கு அடிப்படை இவரொலிதானன்றோ? * இரண்டாவது ஆட்சியாளரே முற் கூறப்பட்ட இரு படைத்தலைவர்களாவர். மூன்றாவது ஆட்சி யாளர் தாம் நமது தமியுந்தி வண்டியாகிய இரு தூண்கள். நான்காவது ஆட்சியாளர்* தாம் நம் அமைச்சரின் கட்டளைப்படி நமது செஞ்சத்தின் கடையிலுள்ள பெருங் குழாயில் சேரும் சக்கைகளையும் அண்டாவில் சேரும் அழுக்கு நீரையும் நீக்குந் தோட்டியாவர். இவர் நீக்கும் வழிகளாகிய இரு ஒட்டையன்றி நம்மாளிகையில் பார்வை, கேள்வி, மோப்பக் கருவிகளையுடைய ஆறு வாயில்களிலும் ஆறு ஒட்டையும், சுவை வாயிலில் எல்லா வற்றினும் பெரிய ஒரு ஒட்டையும் ஆக ஒன்பது பெரு வாயில் களிருக்கின்றன. இவையன்றி நமக்கு ஊற்றந்தருஞ் சட்டையிலும் மிகப் பல சிறு ஒட்டைகளிருக்கின்றன. இவைகள் யாவற்றின் வழியேயுங் கழிபொருள் வெளிப்படுவதால்தான் நம் மாளிகை தூய்மையாகிறது. இனி ஐந்தாவது ஆட்சியாளர் உழவராயிருந்து நம் மாளிகைபோல் பிறமாளிகையை உண்டாக்கத்தக்க வித்திட்டுப் பண்படுத்தி விளைவித்து நமக்கு இன்பை யூட்டுவர். இவ் வின்பையன்றி இவ்வாட்சியாளரின் செயல்களை யெல்லாம் அமைச்சர்களுக்கு அறிவிப்போரே ஒற்றர்களாவர்.

இவ்வாறு வேலை செய்கின்ற நமது ஒற்றர்கள் இருந்த விடத்திருந்தே அமைச்சருக்கு அறிவிக்கத் தக்க எண்ணிறந்த தொலைப்பேசிக் கம்பிகளுள. அவைகள் வழிவரும் செய்தி களைக்கேட்ட அமைச்சர் அச்செய்திகளுக்குத் தக்க செயல்களைப் புரியும்படி ஆட்சியாளருக்குக் கட்டளையிட்டத் தொலைக் கட்டளைக் கம்பிகளுமுள. இவை யாவற்றையும் ஒற்றுமைப்படுத்தி உணர்த்தப் பலசேர்க்கைக் கம்பிகளுமிருக்கின்றன. இக்கம்பிகள் சேருகின்ற இணைச்சாலைகள் (Telephone Exchange) நான்கு. * ஈண்டுள்ளவர்கள் செய்திக்குத் தக்க கட்டளையிடும்படி இணைப் புக்களைச் செய்துகொண்டே யிருக்கின்றனர். இவ்விணைச் சாலை களில் கீழுள்ள நீண்ட இணைச்சாலை அமைச்சரையன்றி எதிர்ச்

* இவையாவும் நம்மாளிகையின் பின் பக்கில் இருக்கின்றன.

செயல்களைத் தாமேபுரிகின்றன. இதன் உச்சியிலுள்ள முடிச்சுப் போன்ற சிறு இணைச்சாலையொன்று அமைச்சருக்குத் தெரியாமலே தானாகவே நம்மாளிகையின் நிலைக்குத் தக்க செயல்களைப் புரிகின்றது. இதற்குமேல் அடுக்கடுக்காயுள்ள இரு இணைச்சாலைகளுந்தான் ஏனைய உயிர்களின் மாளிகைகளில் இருப்பதைவிட மிகப் பருத்து இருக்கின்றன. இவைசெய்யுஞ் செயலெல்லாம் அமைச்சர்களின் நேர் ஆணைக்கு உட்பட்டனவே. இவை செயல்புரிவதன்றி பழஞ்செயல் நினைப்புக்களையெல்லாம் பதிவு செய்து வைத்திருக்கிற பதிவுச்சாலை (Record or Register Office) ஆகின்றன. இவற்றுள் சிறிதாயுள்ள கீழ்ச்சாலை ஆட்சியாளர்களையெல்லாம் இயக்கி எல்லாச் செயல்களையும் ஒற்றுமைப் படச்செய்கிறது. இதன்மேலுள்ள மேற்சாலை ஒற்றர்கள் அனுப்புஞ் செய்தியை நன்குணர்ந்து, எண்ணி, எண்ணிய வண்ணஞ் செயல்புரியக் கீழுள்ள இணைச்சாலைகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும், வேலையாட்களுக்கும் நேரேயும் வேறுவழியிலுங் கட்டளைகளை அனுப்பி அவைகளை அடக்கி ஆளுகின்றது. இதில் தான் நமது அமைச்சர்கள் வாழுகின்றனர், அவர்களுக்கு உள்ளும் புறம்புமாக அவர்களால் அறிதற்கரியவராய் அவர்களை அறியக்கூடியவராய், இறைவன் அறிவிக்க அறியும் இயல்புடையவராய் இம்மாளிகையில் நீக்கமற நிறைந்திருப்பவருமாவர் உயிராகிய நம் வேந்தர்.

உடலினை ஒப்பவேண்டியதேன் :—இவ்வரிய மன்னனைத் தாங்கி நிற்குந் தன்மைவாய்ந்த, முன் விளக்கியபடி வியப்புமிக்க, நமது மாளிகை பல்லாண்டுகள் வாழக்கூடியதேனும் பின் இறந்து மண்ணாகுந் தன்மையுடையதாதலால்தான் அதன் நிலையாமையை மட்டுங்கருதி,

காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா
மாயனாஞ் குயவன்செய்த மண்ணுபாண்டம் ஓடடா!
வெளுத்த நாம்பும் உளுத்ததோலும் இழுத்துக்கட்டிய கூடடா!!

என்றெல்லாம் இகழ்ந்து இதைப்போற்றாது எத்தனை சடுதியில் இழந்துவிடக் கூடுமோ அதற்கான செயல்களையெல்லாம் பெரும்

பாலோர் செய்துகொள்ளுகின்றனர். என்னே இவர்கள் மதி! இவர்களைப்பற்றியே கடுவெளிச்சித்தரும்

நந்தவனத்தி லோராண்டி—அவன்
நாலாறுமாதமாய்க் குயவனைவேண்டி
கொண்டுவந்தா னொருதோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி
தனதந்தின தந்தினை

என்று கூறியபடி இவ்வருந்தோண்டியைப் பத்துத் திங்கள் வேண்டிப் பெற்றிருந்தும் அதைப் பொருட்படுத்தாது போட்டுடைத்துப் பொங்கவிடுகின்றனர்! அவ்வாறிலாதபடி இவ்வருமையான மாளிகையைக் காத்து நெடிதுய்க்கவேண்டிய கடமை நமக்குளது. எனெனில்:—(1) நம் தாய் தந்தையர்கள் நமக்காக உடல், உள்ளம்நோக எவ்வளவோ பாடுபட்டுஞ் செலவழித்தும் நம்மைப்பெற்று வளர்த்திருக்கின்றனர். இப் பெற்றோரன்றி உற்றோரும் உறவினரும் நாட்டினரும் ஆட்சி யாளரும் நமக்காக எவ்வளவோ பாடுபட்டுஞ் செலவழித்தும் வந்திருக்கின்றனரென்பது கூர்ந்துநோக்கிற் றெரியும். அவர் களுக்குத் திருப்பி உழைக்கவேண்டியது நங்கடமையன்றோ? அவ்வாறு உழைக்காது சடுதியில், சிறுவர்களாயிருக்கும்போதே, நம் அறிவின்மையால் நாம் இறந்து போவோமேயானால் நாம் அவர்கள் கடனைக்கூடச் செலுத்தியவர்களாக மாட்டோம். கடனாகிய முதலன்றி அதற்கு வட்டியும் இன்னும் ஊதியமுங் கொடுப்பதே அறிவாளிகள் செயலன்றோ? அதற்கு எவ்வளவு பொழுது வாழக்கூடுமோ, அதுவும் உடல் வலுவுடனும் பேருழைப் புடனும் வாழக்கூடுமோ அவ்வளவு வாழ்தலே நங்கடமையைச் செலுத்துவதாகுமன்றோ? இதை உணர்ந்த நாகரிகமுள்ள ஆட்சியாளர்கள் (Government) இளங்குழவிகளைப் பாதுகாத்தும், யாவருக்கும் நோய் பரவாமற்செய்தும், வந்தால் மருத்துவஞ்செய்தும் பொது ஆண்டைப் (Average age) பெருக்க வழிதேடுகின்றனர்! (2) சற்று முன் கூறியபடி நம்முடல் எவ்வளவு நீண்டபொழுது வாழக்கூடுமோ அவ்வளவு

வாழவேண்டுமென்றே மிக்க அருமையான பாது காப்புடனும், ஏற்பாடுகளுடனும் அமைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அதை வளர்க்க நல்லறிவையும் வகுத்திருக்கின்றனர் நம்மிறைவர். அதை மதியாது இறப்பதற்கே வழிதேடிச் செல்வதால் அவர் எண்ணத்திற்கும் நாம் கொள்ளவேண்டிய எண்ணத்திற்கும் ஈடுபட்டவர்களாக மாட்டோம். இவ்வெண்ணம் யாதெனப் பின்னர் அறிவிப்பாம்.

**உடலை ஓம்புவதெப்படி :—** இவ்வாறு நங்கடமையைச் செலுத்துவதற்காக நம் உடலை ஓம்புவதற்கான சிறந்த வழிகளை ஒவ்வொரு படலத்துள்ளுங் காட்டி வந்தோம். அவைகளை ஈண்டுத் தொகுத்துக் கூறுவாம் :—

1. நீ வாழுகின்ற அறைகளின் கதவுகளைத் திறந்து காற்றுடவிட்டுத் தூயகாற்றையே உட்கொள்.
2. திறந்த வெளியில் வேலைசெய், விளையாடு, பயிற்சிசெய்.
3. ஆழ்ந்த மூச்சை மூக்கால் விடு ; வாயை எப்பொழுதும் மூடு.
4. திறந்த வெளியில் தூங்கு.
5. நாள்தோறும் குளிர்நீரில் முழுகி நாலு நாளைக்கொரு முறை எண்ணெய்தேய்த்து வெந்நீரில் முழுகு. தூய பளுவில்லாத உடையைக் குறைவாய் உடுத்து.
6. பல், ஈறு, நாக்குகளைத் தூய்மையாய் வைத்திரு.
7. நிமிர்ந்துநில், நிமிர்ந்து உட்காரு, நிமிர்ந்துநட.
8. மெதுவாய், மென்று உண்.
9. முட்டை, இறைச்சி, மீன், உப்பு, காரப்பொருள்கள், சர்க்கரை இவைகளைக்குறை.

10. உனது உணவில் சத்துள்ளதன்றிச் சிறிது வலு வானதும் சிறிது வீணானதும் (கீரைபோன்று), சிறிது பச்சை யானதுமான (சமைக்கப்படாத) உணவைச் சேர்த்து உண்.

11. மீதூண், மிகுபளுவைத் (Over wight) தடு.

12. உண்டபின் வேண்டும் நீரைப் பருகு; காலையில் எழுந்ததும் பருகு.

13. காப்பி, தேயிலை, புகையிலை, கள், சாராயம், அபின் கஞ்சா முதலிய நச்சுப்பொருள்களையும், நச்சுக் கூடுகளையும் உடலினுள் விடாதே.

14. வெளிக்கு வேளைப்படி, வரும்போதெல்லாம், நன்றாய்ப்போ.

15. குப்புற * அல்லது ஒருக்கணித்துப்படு.

16. அளவிற்குமிஞ்சிய பயிற்சி, வேலை, விளையாட்டு, களைப் பாறல், தூக்கம், கவலை, மகிழ்ச்சி, வேண்டாம்.

இவ்வழிகளையே நமது பெரியோர்கள் நம் உள்ளத்தில் நன்றாய்ப் பதியுமாறு பாட்டாகப் பாடியிருக்கின்றனர். அவை வருமாறு :—

தேரையர்—பதார்த்தகுண சிந்தாமணி.

திண்ணமிரண் டுள்ளே சிக்க வடக்காமற்;
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்—உண் ணுங்கால்
நீர்சுருக்கி, மோர்பெருக்கி, நெய்யுருக்கி, உண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

* மக்களைத் தவிர எல்லா விலங்குகளும் குப்புறவே படுக்கின்றன. இதனாலுண்டாம் நன்மைகளாவன :— (1) குருதியோட்டம் மிகுகிறது; மூஞ்சிக்கும் கால் விரல்களுக்குங் குருதி நன்றாய்ப் பாய்வதால் இவை சில்லிடுவதில்லை. (2) சமித்தலும் வெளிக்குப்போதலும் நன்றாகின்றன. (3) உண்ணாக்கு வளர்தல் (Tonsitities) மூக்கினுள் சதை வளர்தல் (Adenoids growth), குடல்வால் வீக்கல் (Appendicitis) உண்டாகா. (4) கெட்ட கனவுகள், அமுக்குப்பேய் உண்டாகா. (5) குறட்டை வராது. (6) கட்டுப்பல் விழுக்குபடாது. மல்லார்ந்துபடுத்தால் இத்தீமைகளெல்லாம் உண்டாகும்; ஒருக்கணித்தால் அவ்வளவு உண்டாகா.

பாலுண்போம் ; எண்ணெய் பெறின் வெந்நீரிற் குளிப்போம் ;
பகற்புணரோம் ; பகற்றுயிலோம் ; பயோதரமு, மூத்த
ஏலஞ்சேர் குழலியரோ, டிளவெயிலும், விரும்போம் ;
இரண்டடக்கோம் ; ஒன்றைவிடோம் ; இடதுகையிற் படுப்
மூலஞ்சேர் கறி நுகரோம் ; மூத்த தயிருண்போம் ; [போம் ;
முதனாளிற் சமைத்தகறி யமுதெனினும் அருந்தோம் ;
ஞாலத்தான் படைத்திடினும் பசித்தொழிய உண்ணோம் ;
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே!

உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம் ;
உறங்குவதும் இராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம் ;
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம் ;
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்யோம் ;
பெண்கள்தமைத் திங்களுக்கோர் காலன்றி மருவோம் ;
பெருந்தாகம் எடுத்திடினும் பெயர்த்துநீ ரருந்தோம் ;
சண்புபெற உண்டபின்பு குறுநடையுங் கொள்வோம் ;
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே!

ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந் தயில்வோம் ;
அடர்நான்கு மதிக்கொருகாற் பேதியுரை நுகர்வோம் ;
தேறுமதி யொன்றரைக் கோர்தர நசியம்பெறுவோம் ;
திங்களரைக் கிரண்டுதரஞ் சவள விருப்புறுவோம் ;
வீறுசதுர் நாட்கொருக்கால் நெய்முழுக்கைத் தவிரோம் ;
விழிகளுக் கஞ்சன மூன்றுநாட்கொரு காலிடுவோம் ;
நாறுகந்தம் புட்பமிவை நடுநிசியின் முகரோம் ;
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே!

பகத்தொழுகு மாதரக்கக் குடைப்ப மிவைத்துட்
படசெருங்கோம் ; தீபம், மைத்தர், மாநிழலில் வசியோம் ;
சுகப்புணர்ச்சி யன்னபசனத் தருணஞ் செய்யோம் ;
துஞ்சல், உணவு, இருமலஞ், சையோகம், அழுக்காடை

வகுப்பெடுக்கிற் சிந்தகசம், இவைமாலை விரும்போம் ;
வற்சலம், தெய்வம், பிதிர், சற் குருவை விடமாட்டோம் ;

நகச்சலமுஞ், சிகைச்சலமுந், தெரிக்குமிட மணுகோம் ;
நமனூர்க்கிங் கேதுகவை காமிருக்கு மிடத்தே !

## திருவேங்கடசதகம்.

### நோய்க்கிடங்கொடாமை.

சனிபுதன் தனிலெண்ணெய் வெந்நீரின் முழுகுவார் ;
சாருமிள வெயில்விரும்பார் ;

தம்வயதின் மேலான மங்கைதனை மணவார் ;
சதாகாலம் வழியினடவார் ;

பனியிலுங், காற்றிலும் மெய்வருந் தார் ;மடைப்
பள்ளியிற் சேவகமிரார் ;

பழங்கறி யருந்தார் ; இரண்டடக் கார் ;ஒன்று
பலகால மும்விட்டிரார் ;

கனியொடு, கிழங்குகள் மிகுந்துபுசி யார் ;பசி
கலந்தன்றி யுணவுசெய்யார் ;

காய்ச்சு பா லுண்பர் ;நீர் மோரு கூட் டுவார் ;தினங்
காவேரிதனின் மூழ்குவார் ;

மனிதரிவர் பேர்சொன்ன பேர்க்குநோய் சேருமோ !
மணவாள நாராயணன்

மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாள்னே !
வரதவேங் கடாயனே !

(தொடரும்)

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

(பதிவு செய்யப்பெற்றது)

---

1930 செப்டம்பர் 27, 28உகளில் நடந்த 19-ம் ஆண்டு விழாவில், சென்னை அரசியலார் கல்லூரித் தலைமைத்தமிழாசிரியர் திரு. கா. நமச்சிவாய முதலியார் M. R. A. S. அவர்கள் தலைமையிற் கூடிய ஆயிரக் கணக்கினராய தமிழ்மக்கள் ஒருங்கு செய்த முடிபுகள் :—

---

முடிபு 1.

இச்சங்கத்தின் உறுப்பினரும் போஷகருமாகிய திருவாளர் இராவ் பகதூர் A. T. பன்னீர்ச் செல்வம் Bar-at-Law அவர்கள் இலண்டனில் நடைபெறும் வட்டமேசை மகாநாட்டிற்கு மாட்சி மிக்க இந்திய அரசப் பிரதிநிதியாரால் அழைக்கப்பட்டிருப்பது பற்றி, இக்கூட்டத்தார் தங்கள் மகிழ்ச்சியைத் திரு. A. T. பன்னீர்ச் செல்வம் அவர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

அன்னாரை வட்டமேசை மகாநாட்டிற்கு அழைத்ததுபற்றி, மாட்சி மிக்க இந்திய அரசப்பிரதிநிதியார்க்கு இக்கூட்டத்தினர் தம் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

முடிபு 2.

இச்சங்க உறுப்பினரும் போஷகர்களுமாகிய திருவாளர்கள் திவான்பகதூர் R. N. ஆரோக்கியசாமி முதலியாரவர்கள் B. E., கான்சாகேப் Dr. தாஜுடீன் சாகீப் அவர்கள், இராவ் பகதூர் A. T. பன்னீர்ச் செல்வம் Bar-at-Law அவர்கள் ஆகியோர் சென்னைச் சட்டசபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது பற்றி இச் சங்கத்தார் அன்னோர்க்குத் தங்கள் மகிழ்ச்சியை யறிவித்துக் கொள்ளுகின்றனர்.

முடிபு 3.

திருப்பனந்தாள் உயர் திரு. மடாதிபதிகள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் வித்துவான் தேர்தலில் முதலில் தேறுவார்க்கு ஆயிர ரூபா பரிசளித்தருள்வதைப் பாராட்டி, இக் கூட்டம் அவர்கட்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

அப்பரிசினை இவ்வாண்டில் இச்சங்க உறுப்பினர் சிதம்பரம் பண்டிதர் திரு. ஆ. பூவராகம் பிள்ளையவர்கள் பெற்றது பற்றி, இவ் வவையினர் மிகு மகிழ்ச்சி கொண்டாடுகிறுர்கள்.

முடிபு 4.

தமிழுலகில் கல்வி வளர்ச்சிக்கு உண்மைத் தொண்டியற்றி அரும்பாடுபடுபவரும், இச்சங்க உறுப்பினருமாகிய திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B.A., L.T., தம் பதவியிலிருந்து உயர்ந்து ஜில்லாக்கல்வி ஆராய்ச்சியாளராக ஆகியதுபற்றி இக் கூட்டத்தினர் மிகு மகிழ்ச்சியடைகின்றனர்.

அன்னாரது தனிச் சிறப்புக்களையும் வேலை மேம்பாட்டையும், இதுபோது உணர்ந்து, அவர்களை மேலும் மேலும் ஊக்கிச் சிறப்பிக்க முன்வந்திருக்கும் கல்வி நெறியாளர் தலைவரவர்கட்கு இக்கூட்டம் மனமார்ந்த வந்தனம் செலுத்துகின்றது.

முடிபு 5.

இச் சங்கத்தின் திருச்சிராப்பள்ளிக் கிளையமைச்சரும், தமிழ்த் தாயின் உண்மைத் தொண்டர் தலைமணியுமாகிய திரு. இ. இராம. நடேச பிள்ளையவர்கள் காலஞ் சென்றதுபற்றி, இக் கூட்டத்தினர் மனம் ஆழ்ந்த துயரம் அடைகின்றனர்.

முடிபு 6.

இச் சங்கத்தின் போஷகரும், இதற்குப் பல்வகை உதவிகள் செய்துவந்தவரும், பெரு நிலக்கிழவருமாகிய பூண்டி திருவாளர் இராவ் பகதூர் V. அப்பாசாமி வாண்டையாரவர்கள் காலஞ் சென்றதுபற்றி இக் கூட்டத்தினர் மிகு துயரத்தினையடைகின்றனர்.

முடிபு 7.

சென்னைப் பல்கலைக் கழகத்தார், தமிழில் B. A. Hons ஏற்படுத்தவும் B. Sc. வகுப்புக்குக் கட்டாய பாடமாக ஏற்படுத்தவும் வேண்டுமென இக்கூட்டத்தினர், அக்கழகத்தாரைக் கேட்டுக்கொள்ளுகின்றார்கள்.

முடிபு 8.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரை, சென்னைப் பல்கலைக் கழகத்திருப்பதுபோல, B. A. வகுப்பிற்குத் தமிழைக் கட்டாய பாடமாக்கவும், B. A. Hons, B. Sc. வகுப்புக்களிலும் தமிழை எடுத்துப் படிக்கவேண்டும் வசதிகள் செய்துதரவும் இக் கூட்டத்தினர் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

முடிபு 9.

திருப்பனந்தாள் உயர்திரு மடாதிபதிகளை, சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்துவான் வகுப்பில் முதலிற் றேர்வார்க்குப் பரிசு ஏற்படுத்தியருளியதுபோலவே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் ஓர் பரிசு ஏற்படுத்தியருள இக்கூட்டத்தினர் மிக வணக்கத்துடன் வேண்டிக் கொள்ளுகின்றார்கள்.

முடிபு .10.

முன்னமே இச்சங்கம் முடிவு செய்திருக்குமாறு, தமிழில் தனிச்சிறப்புப் புலமை இருந்தாலன்றி, ஆங்கிலப்பட்டதாரிகளை கல்லூரிகளில் தமிழ் போதிப்பவராக அமர்த்தலாகாதெனப் பல்கலைக் கழகத்தார்களையும், அரசியலாரையும், கல்லூரித் தலைவர்களையும் இக்கூட்டம் இன்றும் கேட்டுக்கொள்ளுகின்றது. இங்ஙனம் சிற்சிலர் ஏற்படுத்தப்பட்டிருப்பது பற்றித் தமிழ் மாணவர், பயிற்சி குன்றி வருந்துவதை அறிந்து இக்கூட்டம் வருந்துகின்றது.

முடிபு 11.

ஆசிரியர்கள் பழக்கக் கல்லூரி வகுப்புக்களிலும், உயர்தரப் பள்ளிக்கூடங்களைச் சார்ந்தோ தனித்தோ விருக்கும் நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் முதற் பாரம் அல்லது ஆறும் வகுப்பு முதலாகவுள்ள வகுப்புக்களிலும், தமிழைத் தமிழ்ப் பண்டிதர்கள் வாயிலாகவே கற்பிக்கவேண்டுமென இக்கூட்டம் பள்ளிக்கூடங்களின் தலைவர்களையும், அரசியலார், கல்வி நெறியாராய்ச்சியாளர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றது.

முடிபு 12.

தமிழில் வித்துவான் வகுப்புப் பாடங்களில் வேண்டும் அளவு ஆங்கிலத்தையும் (தாமே விரும்புவார்க்குச்) சேர்த்துப் படிப்பித்து, அன்னார்க்கு உயர்தர நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் தமிழேயன்றித் தாம் போதிக்க இயலும் எல்லாப் பாடங்களையும் போதிக்கும் உரிமையும், ஆங்கிலப்பட்டதாரிகளையொக்கும் எல்லா உரிமைகளையும் அளித்துவர இக்கூட்டம் அரசியலாரையும் பல்கலைக் கழகத்தார்களையும் கேட்டுக்கொள்ளுகின்றது.

முடிபு 13.

கல்லூரிகளில் உள்ள தமிழ்ப் பண்டிதர்கட்கு அக்கல்லூரிகளில் ஏனைப்பாடங்களைக் கற்பிக்கும் போராசிரியர் (Professor) உதவிப் போராசிரியர் (Asst. Professor) எனும் பெயர் தந்து, அப்போராசிரியர்கட்குரிய எல்லா உரிமைகளையும் அளித்து வருமாறு பல்கலைக் கழகங்களையும் அரசியலாரையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகின்றது.

---